
"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

(ஆமோஸ் 4 : 12)

தேவகாளம்



என் ரட்சகா, என் கேடகம்
என் கோட்டையும் நீரே,
நிறைந்த அருள் பொக்கிஷம்
அனைத்தும் நீர்தாமே
மா நேசர், மேய்ப்பர், பர்த்தாவும்
என் ஜீவனும் நீரே
என் தீர்க்கரும், என் ராஜாவும்
ஆசாரியருமே.

Vol. No. 34 அக்டோபர் - டிசம்பர் 2001 No. 9 to 12

மேல் நாட்டு தேவ பக்தன் ஒருவர் தம்முடைய புத்தகங்கள் ஒன்றில் தேவ மக்கள் ஞானப்பாட்டுகளை ஆவியோடும், கருத்தோடும் பாடும்பொழுது அவர்களின் ஆவிக்குரிய பரிசுத்த வாழ்வு மிகுந்த பிரகாசம் அடையும் என்று குறிப்பிட்டிருப்பதுடன், அப்படி அவர்களுக்கு பாடும்படியான நல்ல இனிமையான குரல் வளம் இல்லாதிருப்பின் அவர்கள் அந்த ஞானப்பாடல்களை ஞான அர்த்தம் புரிந்து வாசித்தாலே போதுமானது என்று எழுதியிருக்கின்றார். மெய்யான வார்த்தைகள். "நல் மீட்பர் இயேசு நாமமே என் காதுக்கின்பமாம்" என்ற 264 ஆம் ஞானப்பாடலின் இரண்டு அடிகளை நான் மேலே குறிப்பிட்டுள்ளேன். இரண்டாம் அடியில் காணும் "பர்த்தா" என்ற வார்த்தை அதின் ஆங்கில மூலத்தில் "My Husband" "என் மணவாளன்" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. சமீபத்தில் நான் அந்த வார்த்தையை தேவ சமூகத்தில் ஆழ்ந்து தியானித்த போது கர்த்தருக்குள் பரவசம் அடைந்தேன்.

என் இயேசு இரட்சகர் ஒருவரே என் அன்புக்கும், பாசத்துக்கும், நம்பிக்கைக்கும் உரிய மாற்றமில்லாத என் நெஞ்சம் நிறைந்த ஆத்தும மணவாளன். பூவுலக கணவன் அன்பில் மாற்றம் உண்டு. அவன் ஸ்திரம் அற்றவன். மோசம் போக்கும் வில்லைப்போன்றவன் அவன். எந்த நாள் எந்த நேரத்திலும் அவன் எனக்குத் துரோகம் செய்து என் நெஞ்சத்தை சுக்கு நூறாக உடைத்து நொறுக்கக்கூடியவன். உண்மைதானா? கொஞ்சமும் சந்தேகமே இல்லை.

ஒரு உண்மை நிகழ்ச்சியை கவனியுங்கள். ஒரு சகோதரன் தன்னுடைய வேதனையின் அனுபவத்தை கீழ்க்கண்டவாறு என்னுடன் பகிர்ந்து கொண்டார்கள். அந்த சகோதரனுடைய வார்த்தைகளை செவிமடுத்துக் கேளுங்கள். " சகோதரனே, எனக்கு ஒரே ஒரு அருமையான தங்கையிருந்தாள். எங்கள் குடும்பத்திலுள்ள உறவின் முறையான ஒரு விசுவாசிக்கு நாங்கள் அவளை விவாகம் செய்து கொடுத்தோம். கர்த்தர் அவர்களுக்கு 2 பிள்ளைகளையும் கொடுத்தார்.

என் தங்கையை அவன் முழுமனதோடு நேசிப்பதாகவே எங்களுக்குத் தெரிந்தது. நாட்கள் கடந்து சென்றன. திடீரென என் தங்கை புற்று நோயினால் பீடிக்கப்பட்டாள். புற்று நோயினால் தாக்குண்ட தன் மனைவி எப்படியும் சீக்கிரத்தில் மரித்துப்போவாள் என்பதை அறிந்த

அவன் என் தங்கை உயிரோடு இருக்கும்போதே வேறொரு பெண்ணை நேசிக்கத் தொடங்கினான். என் தங்கையின் வியாதி அதிகரித்து அவள் மரணத்தோடு துடிதுடித்துப்போராடிக் கொண்டிருந்த வேளையில் அவள் கணவன் தன் காதலியின் மேல் தன் அன்பைக்கொட்டி அவளை மனையாட்டியாக ஏற்றுக்கொள்ளும் நேரத்திற்காக ஆவலோடு காத்திருந்தான். தன்னுடைய கணவனின் செயலை அறிந்த என் அன்புத்தங்கையின் இருதயம் கல்லின்மேல் இட்ட கலமாக உடைந்து நொறுங்கிப்போயிற்று. அவளுடைய மரண நேரத்தில், அவளுடைய வியாதியின் கொடிய வேதனையின் மத்தியில் அவள் உயிருக்குயிராக நேசித்த கணவனின் அன்பு அவளுக்கு கொஞ்சமும் கிட்டவில்லை. நம்பிக்கை மோசம் செய்த, கல்லான இருதயம் கொண்ட தன்னுடைய கணவனின் இந்த துரோக செயலால் என் தங்கை உள்ளம் உடைந்து நொறுங்கி வெகு துரிதமாகவே மரித்துப்போனாள். மனைவியின் மரணத்தை ஆசை ஆவலாக எதிர்நோக்கிக் காத்திருந்த அந்த மனிதன் தான் நேசித்த பெண்ணை மிகவும் சீக்கிரமாகவே கலியாணம் செய்து கொண்டான்" என்று என்னிடம் கண்ணீருடன் சொன்னார்கள்.

தன் தங்கையின் கணவன் அவளுக்குச் செய்த கொடிய துரோக செயலை அந்த சகோதரன் எனக்குச் சொன்னதும் பரிசுத்தவான் ஜாண் நியூட்டன் தன் அருமை நேச கர்த்தரை தன் அன்புப் பர்த்தா என்று 264 ஆம் ஞானப்பாட்டில் குறிப்பிட்டிருப்பதை நான் படித்தபோது உள்ளம் நெகிழ்ந்து போனேன். ஆம், ஆண்டவர் இயேசு ஒருவர்தான் நம் மெய் அன்புப் பர்த்தா. உன்னதப்பாட்டுகளின் ஆக்கியோன் தன் நேச கர்த்தரை தன் ஸ்தனங்களின் நடுவில் தங்கும் வெள்ளைப்போளச் செண்டு(உன் 1:13) என்று குறிப்பிட்ட அதி அற்புதமான வர்ணிப்பை தியானித்தீர்களா? ஆம், அந்த இரட்சா பெருமான் ஒருவர்தான் நமது வாழ்நாட் காலம் முழுமையிலும் நம் நெஞ்சத்தை மகிழ்வித்து நமது இகலோக வாழ்க்கையை இனிமையாக்கிவிடும் நம் வெள்ளைப்போளச் செண்டு. அந்த நம் அன்புப் பர்த்தா நமக்கு ஒருக்காலும் துரோகம் செய்யவே மாட்டார்.

தேவ பக்தன் ஜாண் நியூட்டன் தேவ ஆவியால் நிரம்பிப் படித்த அநேகம் பாடல்களில் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட "நல் மீட்பர் இயேசு நாமமே என் காதுக்கின்பமாம், புண்பட்ட நெஞ்சை ஆற்றவே ஊற்றுண்ட தைலமாம்" என்ற ஞானப்பாடல் சிறந்ததொன்றாகும். ஆங்கில

மொழியிலுள்ள அதின் மூலத்தை வாசித்துப் பாருங்கள். உங்கள் நெஞ்சத்தை அது இன்னும் பரவச மூட்டுவதாக இருக்கும். அந்த தேவ பக்தனைக் கர்த்தர் தமக்கென்று தெரிந்துகொண்ட விதம், அவரின் ஆரம்ப கால பாவ வாழ்க்கை, அவரது வாழ்வின் துயர நிகழ்ச்சிகள், அவரது மகத்தான தேவ ஊழியங்கள் யாவும் நமக்கு மட்டற்ற ஆச்சரியத்தையும், துயரப்பட்ட நம் வாழ்வுக்கு கீலேயாத்தின் பிசின் தைலமாகவும் இருக்கும். அந்த தேவ மனிதரின் வாழ்க்கைச் சாயலை ஜெபத்தோடு ஒரு கண்ணோட்டம் பார்க்கலாமா?

தேவபக்தன் ஜாண் நியூட்டன் தன்னுடைய பிறப்பு, இளம் பருவத்தைக் குறித்துச் சொல்லும் சில வரிகளை அவரது வாயிலிருந்தே சொல்ல நாம் கேட்போம்:-

" 1725 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் நாள் இங்கிலாந்து தேசத்திலுள்ள லண்டன் மா நகரத்தில் நான் பிறந்தேன். என்னுடைய பெற்றோர் செல்வந்தர்களாக இல்லாவிடினும் கனம் பெற்றவர் களாயிருந்தார்கள். மத்திய தரைக்கடலில் வாணிபத்தில் ஈடுபட்டிருந்ததொரு கப்பலில் என் தகப்பனார் அநேக ஆண்டு காலம் கப்பல் தலைவராகஇருந்தார். 1748 ஆம் ஆண்டு யார்க்ஃபோர்ட் பட்டணத்தின் கவர்னராக அவர் பணியிலமர்ந்து இரண்டாண்டுகளுக்கு பின்னர் அவர் மரணம் அடைந்தார்.

என்னுடைய தாயார் மிகவும் பெலவீனமான ஆனால் மிகவும் பக்தியுள்ள மாது ஆவார்கள். நான் அவர்களுக்கு ஒரே மகனானதால் என்னை அதிக அன்பாக நேசித்து கர்த்தருக்குப்பயப்படுகிற பயத்திலும், தேவ பக்தியிலும் என்னை வளர்த்துக்கொண்டு வந்தார்கள். கர்த்தருடைய ஊழியத்திற்கே என்னை ஒப்புவித்துவிட்டதாக சிறு பிள்ளையாக இருந்த என்னிடம் கூறுவார்கள். என்னுடைய கல்வியைக்குறித்த காரியத்தில் அவர்கள் தீவிர கவனம் செலுத்தினார்கள். தக்க பிராயம் எனக்கு வரும்போது ஸ்காட்லாந்து தேசத்திலுள்ள புகழ்பெற்ற ஆண்ட்ரு கலாசாலைக்கு என்னை கல்வி கற்பதற்காக அனுப்ப அவர்கள் விரும்பிக்கொண்டிருந்தார்கள். ஆனால், தேவசித்தம் வேறுவிதமாக இருந்தது. நான் 7 வயது சிறுவனாக இருந்தபோதே என் தாயார் மரித்துவிட்டார்கள்.

மற்ற மாணவர்களைப் போல ஓடி ஆடி விளையாட நான் விரும்பாமல் என் தாயார் எனக்குக்கற்றுத் தரும் பாடங்களைப்படித்துக் கொள்ள நான் ஆவலுடையவனாயிருந்தேன். ஆண்டவர் எனக்கு நல்ல ஞாபக சக்தியை தந்திருந்தார். நான் 4 வயதினனாக இருந்த போதே கடினமான ஆங்கில பெயர்களை எல்லாம் கஷ்டமின்றி வாசிக்கக்கூடியவனாக இருந்தேன். பற்பல பக்தர்களின் திருச்சபை ஞான உபதேசங்களையும், சிறுவர்களின் ஞானப்பாடல்களையும் அப்பொழுதே நான் மனப்பாடம் செய்துவிட்டேன்.

என் அருமைத் தாயார் இறந்த பின்னர் சமுத்திர யாத்திரையிலிருந்து திரும்பி வந்த என் தந்தை இரண்டாம் தடவையாக திருமணம் செய்து கொண்டார்கள். என் புதிய தாயார் என்னைத் தன்னுடைய சொந்த மகனாக ஏற்றுக்கொண்டு கவனிக்கத் தொடங்கினார்கள். ஆனால் அந்த அன்பு வெகு காலம் நீடிக்கவில்லை. இரண்டு அல்லது மூன்று ஆண்டு கால இடைவெளிக்குப் பின்னர் எனது மாற்றாந் தாய்க்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. அந்தப் பையன் பிறக்கவும் என்மேல் அவர்களுக்கிருந்த பழைய அன்பெல்லாம் முற்றுமாக மாறிப்போய்விட்டது. என் தகப்பனார் நல்ல சீலமும், ஒழுக்கக்கட்டுப்பாடும் உள்ளவர்களாக இருந்தபோதினும் அவருக்கோ அல்லது எனது மாற்றாந் தாய்க்கோ தேவ பக்தி என்பது முற்றும் இல்லாதிருந்தது. அதின் காரணமாக அவர்கள் இருவரும் என் இஷ்டத்துக்கே என்னை விட்டுவிட்டார்கள். நான் சோம்பேறிப் பையன்களுடனும், கெட்ட நண்பர்களுடனும் சேர்ந்து கொண்டு அவர்களுடைய தீய வழிகளைக் கற்றுக்கொண்டேன். நான் எனது 8 வயதுக்கும் 10 வயதுக்கும் இடையிலான 2 ஆண்டுகளை மாத்திரம்தான் பள்ளிக்கூடத்தில் செலவிட்டேன். இங்கிலாந்து நாட்டிலுள்ள எஸ்ஸக்ஸ் என்ற இடத்திலுள்ள போர்டிங் பாடசாலை அது. அந்த இரண்டு வருடங்களும் நான் படிப்பில் எந்தவித முன்னேற்றமும் காண்பிக்கவே இல்லை. என் தாயார் எனக்குக் கற்றுக்கொடுத்த கல்வியைக்கூட நான் அப்பொழுது மறந்து போனேன்.

நான் 11 வயது பையனாக இருந்தபோது என் தகப்பனாருடன் கப்பல் யாத்திரையில் புறப்பட்டேன் அதின் பின்னர் அவருடைய கப்பலில் மொத்தம் 5 தடவைகள் நான் மத்திய தரைக்கடல் கப்பல் பயணம் செய்து வந்தேன். அவருடைய கடைசி கப்பல் பயணத்தின்போது அவர் என்னைத் தன்னுடைய நண்பன் ஒருவனுடைய கண்காணிப்பில் ஸ்பெயின்

நாட்டிலுள்ள அலிகாண்ட் என்ற இடத்தில் சில மாதங்களுக்கு என்னை விட்டுவிட்டுத் திரும்பிவிட்டார். நான் நல்ல ஒழுங்காக நடந்து நல்ல விதத்தில் இருந்திருந்தால் நான் நன்றாக இருந்திருக்க சந்தர்ப்பம் இருந்தது. ஆனால், அந்தச் சமயம் என்னுடைய கெட்ட வழிகளெல்லாம் ஒன்று சேர்ந்து என்னை மேலும் கெட்டவனாக்கிவிட்டது. அதின் காரணமாக எனக்கு நானே சத்துருவாகி படு முட்டாளாக மாறினேன். எனது தந்தை 1742 ஆம் ஆண்டு தனது சமுத்திர வாழ்வை நிரந்தரமாக விட்டுவிட்டார்கள். நான் அதற்குப் பின்னரும் ஒரு முறை கப்பல் யாத்திரை சென்று இத்தாலியிலுள்ள புகழ்பெற்ற வெனிஸ் பட்டணம் வரை சென்று வந்தேன்.

அடிமை வியாபார நினைவுகள்

என்னுடைய வாழ்வின் பல ஆண்டுகள் கப்பல் யாத்திரையிலேதான் கழிந்தது. நான் பணி செய்த கப்பல்களின் தலைவர்கள் பற்பல நாடுகளிலிருந்து பற்பலவிதமான பொருட்களை ஒரு நாட்டிலிருந்து வாங்கி மற்றொரு நாட்டில் விற்பனை செய்து வந்தனர். அந்த வாணிபத்தைவிட அவர்களுக்கு அடிமை வியாபாரம் தான் பெரும் ஆதாயத்தை அளித்தது. எனவே கப்பல் தலைவர்கள் அடிமை வியாபாரத்தைத்தான் அதிகமாக விரும்பினார்கள். ஆ, அந்த அடிமை வியாபாரத்தின் பயங்கரத்தை என்னவென்று சொல்லுவது!

அடிமை வியாபாரத்தைப்போல கொடூரமானதும், பயங்கரமானதுமான வர்த்தகம் உலகில் வேறெதுவுமே கிடையாது. ஆப்பிரிக்கக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆண்டுதோறும் ஒரு லட்சம் நீக்ரோ மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும், இங்கிலாந்துக்கும், இதர குடியேற்ற நாடுகளுக்கும் விற்கப்பட்டனர். ஆண்டுதோறும் ஆப்பிரிக்காவில் அதே எண்ணிக்கையான மக்கள் அடிமை வியாபாரத்தின் சண்டைகளில் கொல்லவும் பட்டனர். பொதுவாக நீக்ரோ கிராமங்களில் சண்டை செய்துதான் அவர்களை அடிமைகளாப் பிடிப்பார்கள். ஆ, அந்த கொடிய வியாபாரத்திற்காக ஆண்டுதோறும் எத்தனை திரளான ரத்தம் சிந்தப்பட்டது என்று எண்ணுகின்றீர்கள்! ஐரோப்பிய நாடுகளும், இங்கிலாந்தும், இதர நாடுகளும் அந்த ரத்தத்திற்கு ஆண்டவரிடம் கணக்கு கொடுக்க வேண்டும்.

அப்படி ஆப்பிரிக்காவின் மத்திய பகுதிகளிலிருந்து நீக்ரோக்கள் அடிமைகளாகப் பிடிக்கப்பட்டு நீண்ட மைல்கள் தூரம் அதாவது 1000 மைல்களுக்கும் அதிகமாக கால் நடையாகவே அவர்களை நடக்க வைத்து கப்பலில் ஏற்றுவதற்காக கடற்கரைக்கு அவர்கள் வந்து சேரும்போது அவர்களில் பலர் போதுமான ஆகாரமின்மையாலும், வெயில், குளிர் காரணமாகவும் மாண்டு போவார்கள். அப்படி ஜீவன் தப்பி வந்த அடிமைகளை கப்பலுக்குள் இரண்டிரண்டு பேராக விலங்கிட்டு அடைத்து வைப்பார்கள். கைகளுக்கும், கால்களுக்கும் ஒருவர் காலை மற்ற ஒருவர் காலுடனும், ஒருவர் கரத்தை மற்றொருவர் கரத்துடனும் விலங்கிட்டு வைப்பதால் அவர்கள் படும் வேதனை சொல்லி மாளாது. ஒருவரையொருவர் காயப்படுத்திக்கொள்ளாமல் அவர்கள் படுக்கவோ, சாய்ந்து இளைப்பாறவோ, கப்பலின் ஆட்டத்தால் ஏற்படக்கூடிய வாந்தியை கக்கவோ இயலாது. அதிலும் வெகு கொடுமை என்னவென்றால் அவர்களை புத்தகங்களை அடுக்கிக்கொண்டு போவது போல அடுக்கிக்கொண்டு போவதுதான். 100 டன்கள் எடையுள்ள கப்பலில் 200 லிருந்து அதிக பட்சம் 250 அடிமைகளை ஏற்றுவார்கள். ஆனால் அநேக கப்பல் தலைவர்கள் பணத்திற்கு ஆசைப்பட்டு தங்கள் கப்பலில் கொஞ்ச இடம் கூட பாக்கி இல்லாமல் அடிமைகளை நிரப்பி விடுவார்கள்.பகல் முழுவதும் அடிமைகள் கப்பலின் மேல் தட்டின் அறைகளில் இருக்க வேண்டும். இரவில் அவர்களை கப்பலின் கீழ் தட்டு அறைகளுக்குக் கொண்டு வந்து பகல் முழுவதும் அவர்கள் தங்கியிருந்த அறைகளை கழுவி சுத்தம் பண்ணுவார்கள். மல ஜலத்தாலும், வாந்திகளாலும் அந்த அறைகள் நாற்றமெடுத்துக்கிடக்கும். அந்தவிதமான நாற்றத்தின் காரணமாக கொடிய கொள்ளை நோய்கள் கப்பலில் பரவிவிடும். ஒரு சமயம், எங்களுடைய கப்பலில் 218 அடிமைகளைக் கொண்டு சென்றோம். அப்பொழுது கொள்ளை நோய் பரவி 62 பேர் மாண்டு போனார்கள்.

அடிமைகளை நிர்வாணிகளாகத்தான் விலங்கிட்டு வைத்திருப்பார்கள். வாலிபப் பெண்கள், ஸ்திரீகள்,சிறுவர், சிறுமியர் எல்லாம் அங்கிருப்பர். ஒழுக்கக் குறைவான கப்பல் தலைவர்கள் இருக்கும் கப்பலில் எல்லா அசுத்தமும், ஆகாமியமும் நடைபெறும். பொதுவாக அடிமைகளில் மூன்றில் இரண்டு பகுதியினர் ஆண்களாகத்தான் இருப்பார்கள். அந்த அடிமைகளை இராப்பகலாக கப்பலில் உள்ளவர்கள் ஜாக்கிரதையாக காபந்து பண்ணிக் கொண்டிருக்கவேண்டும்.

இல்லையெனில் கொடுந் தீங்கனுபவிக்கும் அவர்கள் தங்களுடைய விலங்கிடப்பட்ட கால் கைகளினுடைய சிறிய பெலத்தாலேயே பெரிய இரத்தக்களறிகளை கப்பலில் கொண்டு வந்து விடுவார்கள்.

கப்பலில் கொண்டு வரும் அடிமைகளை எல்லாம் லீவார்டு தீவுகளிலே கரை இறக்கி விற்பனைக்கு நிறுத்துவார்கள். கூட்டமாக நிற்கும் அடிமைகள் புருஷன் தன் மனைவியையும், பிள்ளைகள் தங்கள் பெற்றோரையும், சகோதரர்கள் தங்கள் உடன் பிறந்த சகோதர சகோதரிகளையும் அடையாளம் கண்டுகொண்டு சந்தோசத்தால் கத்திக்கதறி அழுது கூச்சலிடுவார்கள். ஆனால் என்னே கொடுமை! கொஞ்ச நேரத்தில் மனைவி புருஷனையும், அன்புப் பெற்றோர் தங்கள் பாசமுள்ள அருமைக் குழந்தை செல்வங்களையும், உடன் பிறப்புகளான சகோதர சகோதரிகள் தாங்கள் ஒருவரைவிட்டு ஒருவர் என்றுமுள்ள சதா காலத்திற்குமாக பிரிந்துவிடுவார்கள். ஆ, அந்த மகா சோகக்காட்சி எந்த ஒரு குரூரமான கொலை பாதகனைக் கூட இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்துவிடும். பெரிய நிலச்சுவான்தார்கள், தனவந்தர்கள் போன்றவர்கள் அந்த அடிமைகளை விலைக்கு வாங்கி அவர்களைத் தங்களுடைய பண்ணைகளில் கடினமான வேலைகளுக்குட்படுத்துவார்கள். ஒவ்வொரு நாளும் கொஞ்ச நேரம் மாத்திரமே ஓய்வு கொடுத்து இராப்பகலான வேலையில் அவர்கள் பெலனை உறிஞ்சி எடுத்துவிடுவார்கள். அந்தக் கொடிய உழைப்பின் காரணமாக 100 ஆண்டு காலம் கூட வாழக்கூடிய அந்த நீக்ரோ அடிமைகள் 9 ஆண்டுகளுக்குள்ளாகவே கட்டாயம் மாண்டு போய்விடுவார்கள். அவர்கள் மாண்டதும் உடனே அடிமைகளின் சந்தைகளில் போய் வேறே அடிமைகளை விலைக்கு வாங்கி வந்து அந்த இடத்தை நிரப்பிக்கொள்ளுவார்கள். இந்தக் கொடுமையை நாம் எங்கே காண முடியும்?

எனக்கு நன்கு நினைவு இருக்கின்றது. ஒரு கப்பல் தலைவன் ஒரு இளம் நீக்ரோ பெண்ணையும் அவளுடைய அழகிய குழந்தையையும் கடற்கரையிலே விலைகொடுத்து வாங்கி தன்னுடைய படகில் கூட்டிக்கொண்டு கப்பலுக்கு வந்தான். இரவிலே தூங்கிக்கொண்டிருந்த அவன் அந்த ஒரு வயது நிரம்பிய அன்புக் குழந்தையின் அழுகையால் தூக்கத்திலிருந்து வெகு கோபத்துடன் கண் விழித்து அந்தக் குழந்தையை அதின் தாயிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பிடுங்கி எடுத்து சமுத்திரத்திலே வீசி எறிந்துவிட்டான். அந்த அடிமைகளின் உயிருக்கு

கொஞ்சம் கூட தயவு,தாட்சண்யம், இரக்கம் எதுவுமே கொடியவர்கள் காட்டுவது கிடையாது.

இந்தவிதமான கொடூரமான அடிமை வியாபாரத் தொழிலிலே நான் நீண்ட 9 ஆண்டு காலம் ஈடுபட்டிருந்தேன். அதாவது 1754 ஆம் ஆண்டு வரை நான் அதிலிருந்தேன். தேவன் அதற்குப்பின்பு அந்த அநாகரீக தொழிலை நான் செய்யாதபடி தம்முடைய கிருபை கரத்தால் என்னைத் தடுத்தாட் கொண்டார்.

தேவனின் அதிசயமான பாதுகாவல்கள்

கானகத்தில் உயிர் தப்பியது.

ஜாண் நியூட்டனுடைய கடற் பயணங்களில் அவருக்கு எத்தனையோ உயிர் மோசத்துக்கான சம்பவங்கள் வந்து சம்பவித்தன. அவருடைய தேவ பயமற்ற பொல்லாத பாவ வாழ்வை தம்முடைய கவனத்தில் தேவன் கொண்டிருப்பாரானால் அவரை எப்பொழுதோ கொன்றிருக்கலாம். ஆனால் அந்த அன்பின் கருணாகரன் அவற்றை எல்லாம் மறந்து அவரை நேசிப்பதிலேயே கவனம் செலுத்திக்கொண்டிருந்தார். நியூட்டனுக்கு நேரிட்ட பயங்கரமான ஆபத்துக்களை கீழே படித்துப் பாருங்கள்.

ஒரு சமயம் ஆப்பிரிக்கக் கண்டத்தின் லோப்பஸ் கடற்கரை முனையிலே ஜாண் நியூட்டனின் கப்பல் நங்கூரமிட்டிருந்தது. நியூட்டன் கப்பலிலுள்ள தனது சக பணியாளர்கள் சிலரைக் கூட்டிக்கொண்டு படகில் ஏறி கடற்கரை வந்து சேர்ந்து அருகிலுள்ள அடர்த்தியான ஆப்பிரிக்க கானகத்திற்குள் வேட்டையாடத் தொடங்கினார். காட்டிற்குள் நுழையும் பொழுதே தங்களுடைய பாதையை எந்த விதத்திலும் தவறவிட்டுவிடக் கூடாது என்ற காரணத்திற்காக நியூட்டன் தாங்கள் செல்லும் வழியில் அடையாளங்களை கவனமாக வைத்துக்கொண்டே சென்றார்.

கானகத்தினுள் வேட்டைக்காக நுழைந்த அவர்களுக்கு ஒரு காட்டு எருமையோ இல்லை ஒரு கானக மானோ கிடைக்கத்தான் செய்தது. மகிழ்ச்சி பொங்க அதின் மாமிசத்தில் நல்லதொரு பெரிய பங்கை சுமந்து கொண்டு அவர்கள் அனைவரும் கானகத்திலிருந்து கடற்கரையை நோக்கி வெளியே வந்தார்கள். ஆனால் அந்தோ, நேரம் நன்றாக பொழுதுபட்டு

இருள் சூழ்ந்து கொண்டது. நியூட்டன் பின் வைத்து வந்த அடையாளக்குறிகள் எதுவும் பயன்படாமல் போய்விட்டது. கானகத்தினுள் பாதை தவறி அங்குமிங்கும் அந்த வேட்டைக்காரர்கள் அலைந்தார்கள். சில சமயங்களில் அவர்கள் சேறும் சகதியும் நிரம்பிய சதுப்பு நிலப்பகுதிக்குள் வந்து கடும் இன்னலுற்றனர். நட்சத்திரங்களின் வெளிச்சத்திலாவது பாதை கண்டு பிடித்துக்கொள்ளலாம் என்றால் மேகக்கூட்டங்கள் அவற்றை மறைத்து நின்றன. என்ன செய்வதென்று அறியாமல் அவர்கள் அனைவரும் திகைத்தனர். அந்தக்கன்னிக் கானகத்தில் அவர்களின் கால்கள்தான் முதன் முதலாவதாகப்பட்டிருக்க வேண்டும். துஷ்ட விலங்குகள் நிறைந்ததும் மனுஷ சஞ்சாரமே அற்ற அந்தக் கருங்கானகத்தில் துணிந்து முன்னேறிச் செல்ல அவர்களிடம் வெளிச்சமோ இல்லை கொடிய விலங்குகளை எதிர்த்துப் போராடத் தேவையான ஆயுதங்களோ இல்லாதிருந்தது. புசிப்பதற்கு ஆகாரம் கூட அவர்களிடமில்லை. அவர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் நிச்சயமற்ற அடிகளாக இருந்தன. மரக்கிளைகளில் பதுங்கியிருக்கும் சிறுத்தைப் புலிகள் அவர்களை நோக்கிப் பாய்வதைப் போல அவர்களுக்குள் உணர்ந்து அஞ்சி நடுங்கினர்.

அந்த இக்கட்டான நேரத்தில் தேவன் அவர்களை கண்ணோக்கினார். காட்டு மிருகங்களின் வாயிலிருந்து அவர்களை தப்புவிக்கச் சித்தங்கொண்டார். அந்த நேரத்தில் பார்த்து வானிலே நிலவு மேகங்களை விலக்கிக்கொண்டு தன் இன் முகத்தைக் காட்டத் தொடங்கியது. அந்த நிலவு வெளிச்சத்திலே அவர்கள் கடற் கரையின் கிழக்குப்பகுதியை தேவ தயவால் அடையாளம் கண்டார்கள். உடனே நேரே சமதரைப்பரப்புக்கு வந்து சேர்ந்து அங்கிருந்து சுலபமாக கப்பல் ஒளியைக்கண்டு கானகத்திலிருந்து கரையை வந்தடைந்தார்கள். இல்லையெனில் அவர்கள் யாவரும் அந்த இரவில் துஷ்ட மிருகங்களுக்கு இரையாகியிருப்பார்கள்.

சமுத்திரத்திலிருந்து காப்பாற்றப்பட்டது.

மற்றொரு சமயம் அவர் தனது நான்கு அல்லது ஐந்து நண்பர்களுடன் கப்பலின் மேல் தட்டிலிருந்து ஜெனிவா என்ற போதை பானத்தையும் ரம் என்ற மதுவையும் இரவு வெகு நேரத்திற்குப்பின்னர் ஒன்று மாற்றி ஒன்றாகக் கூட்டாக இருந்து குடித்துக்கொண்டிருந்தார்கள். கண்ணாடிப் பாத்திரத்துக்குப் பதிலாக ஒரு பெரிய கடற் சிப்பி

அவர்களுக்கு மதுக் குவளையாக பயன்பட்டது. ஜாண் நியூட்டன் உண்மையில் ஒரு மதுபானப்பிரியன் அல்ல. ஆனால், துஷ்டத்தனம், போக்கிரித்தனம் பண்ணும் பொருட்டாக மது அருந்துவார். அதிகமான மதுபானம் அருந்தினால் அவரால் சமாளிக்க முடியாது. அன்றைய நாளிலும் ஒரு அளவுக்கு ஜெனிவா என்ற போதை பானத்தையும், ரம்மையும் குடித்த உடன் அவர் தன்னைக்கட்டுப்படுத்த முடியாமல் கப்பலில் ஆட்டம் போட்டுக் குதித்து நடனம் பண்ணத் தொடங்கிவிட்டார். போட்ட ஆட்டத்தில் அவரது தலையிலிருந்த தொப்பி நழுவி கடலிலே போய் விழுந்தது. நல்ல நிலவு காலம் அது. தொப்பி கடலிலே விழுகின்ற இடத்தை அவர் கண்டு கொண்டார். பக்கத்திலேயே கப்பலுக்கான படகும் நின்று கொண்டிருந்தது. உடனே அவர் கப்பலிலிருந்து படகில் குதித்து தனது தொப்பியை எடுக்க விரும்பினார். ஆனால் அந்த படகு கப்பலிலிருந்து 20 அடிகள் தூரத்தில் நின்று கொண்டிருந்ததால் நியூட்டன் படகில் குதிப்பதற்குப் பதிலாக கடலில் குதித்துவிட்டார். மிகவும் தெய்வாதீனமாக கப்பலிலுள்ள குடி போதையற்ற ஒரு மனிதர் உடன்தானே கடலில் குதித்து அவருடைய சட்டையைப்பிடித்து இழுத்து அவரை மேலே தூக்கிவிட்டார். அந்த அன்புள்ளம் கொண்டோன் அந்த நடு இரவு நேரம் அவரை தூக்கியிருக்காவிட்டால் அந்த இரவுடன் அவருடைய வாழ்வு முடிவடைவதாக இருந்தது. காரணம், நல்ல குடி போதையிலிருந்த அவரால் நீந்தவே முடிந்திருக்காது, அது மாத்திரமல்ல, அவருடன் குடித்துக்கொண்டிருந்த மற்ற குடிகாரர்களும் நல்ல போதையிலிருந்தபடியால் அவர்களாலும் அவருக்கு உதவி செய்ய இயலாது. அத்துடன் அந்த இராக்கால நேரம் கப்பலில் அனைவரும் நன்றாகக் குரட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தனர். மொத்தத்தில் சொல்லப் போனால் ஆண்டவர் தம்முடைய அடியானை காப்பாற்றுவதற்காகவே ஒரு மனிதனை அந்த நள்ளிரவில் தயாராக ஆயத்த நிலையில் அங்கு வைத்திருந்தார். என்னே அவரது பாதுகாவலின் அன்பு!

சத்துருக்களின் சதித் திட்டங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டது.

ஒரு சமயம் கப்பலிலுள்ள சிலர் தங்களுக்குள் சதித்திட்டம் தீட்டி நியூட்டனைக் கொன்று கப்பலை கைப்பற்றத் திட்டமிட்டிருந்தனர்.

திட்டங்கள் எல்லாம் பூரணமாகிவிட்டது. அவரைக்கொல்லுவதற்கு சரியான நேரத்திற்காக மாத்திரம் அவர்கள் எதிர் நோக்கிக் காத்துக்கொண்டிருந்தார்கள். தேவனுடைய அநாதி அன்பின்படி அந்தச்சமயம் பார்த்து சதித் திட்டம் போட்டு நிறைவேற்றவிருந்த முக்கியமானவர்கள் இருவர் திடீரென நோய்வாய்பட்டு அவர்களில் ஒருவன் இறந்து போனான். ஒருவனுக்கு மரணம் நேரவும் அவர்கள் போட்டிருந்த சதித்திட்டம் நியூட்டனின் காதுகளுக்கு வந்து எட்டினது. உடனே அவர் அந்த திட்டத்தை முறியடித்து தன்னை சாவிலிருந்து தேவ பெலத்தால் விலக்கிக் காத்துக்கொண்டார்.

படகு விபத்தில் ஜீவன் தப்பியது

கர்த்தர் தம்முடைய தாசனை அதி அற்புதமாக பாதுகாத்த மற்ற இரு சம்பவங்களை அவரே சொல்லுவதை நாம் கேட்போம்.

எங்கள் கடல் வாணிபம் முடிவுற்றதும் நாங்கள் எங்கள் கப்பலை மேற்கு இந்திய தீவுகளுக்கு நேராக கொண்டு சென்றோம். கப்பல் தலைவனால் எனக்குப் பணிக்கப்பட்டிருந்த எனது இறுதி வேலை என்னவென்றால் கப்பலிலுள்ள படகில் கரைக்குச் சென்று விறகும் குடி தண்ணீரும் கொண்டு வருவதுதான். அப்பொழுது நாங்கள் ரியோசெஸ்டர்ஸ் என்ற இடத்தில் இருந்தோம். நண்பகல் நேரம் வீசக்கூடிய கடல் காற்றின் உதவியால் கரைக்குச் சென்று எனது கப்பலுக்குத் தேவையான விறகையும், குடி தண்ணீரையும் எடுத்துக்கொண்டு எங்களுடைய பழைய படகில் மறு நாள் காலை வீசுகின்ற தரைக்காற்றின் அனுகூலத்தால் கப்பலுக்குத் திரும்ப ஆலோசித்திருந்தேன்.

கப்பல் தலைவனின் கட்டளைப்படி நான் எனது மத்தியான உணவை அருந்தியதும் விறகும் தண்ணீரும் கொண்டு வரும் பொருட்டாக கப்பலுக்கு அடியில் மிதந்து கொண்டிருந்த பழைய படகிற்குள் கயிற்றின் உதவியால் கீழே இறங்க ஆரம்பித்ததுதான் தாமதம், கப்பல் தலைவனின் மனதில் என்ன எண்ணம் எழுந்ததோ நானறியேன். அவன் என்னை உடனடியாக தன்னண்டை வரும்படியாக அழைத்தான். அவனுடைய உத்தரவுக்கு அடிபணிந்து நான் அவனண்டை சென்றேன். அவன் என்னைத் தன்னுடன் கப்பலில் அந்த நாளில் இருக்கவும் நான் படகில் செல்ல வேண்டிய வேலையை மற்றொரு வேலையாளுக்கும் கொடுத்தான்.

கப்பல் தலைவனின் இந்தச் செயல் எனக்கு மிகவும் ஆச்சரியத்தை அளித்தது. ஏனெனில் இதற்கு முன்பாக ஒருபோதும் படகானது எனது துணையின்றி சென்றதே கிடையாது.

தலைவனின் கட்டளைப்படி படகு எனக்கு பதிலாளான மற்றொரு மனிதரை ஏற்றிக்கொண்டு சென்றது. மிகவும் துக்கத்திற்குரிய காரியம் என்னவென்றால் அந்தப் படகு அந்த நாளின் இரவிலேயே குடி தண்ணீர் பிடிக்கக்கூடிய நதியில் மூழ்கிப்போயிற்று. என்னுடைய ஸ்தானத்தில் சென்ற மனிதனும் அந்த நாள் இரவில் நீரில் மூழ்கி மாண்டு போனான். அடுத்த நாள் காலையில் எங்களுக்கு தகவல் கிடைத்தபோது நான் அதிர்ச்சியடைந்தேன். மதத்திற்கும், மார்க்கத்திற்கும், பக்தி நெறிகளுக்கும் முற்றும் அந்நியனான எங்கள்கப்பல் தலைவன் கூட இந்த துயர சம்பவத்தால் பெரிதும் கலக்கம் அடைந்தான். எனக்குப் பதிலாளாக மற்றொரு மனிதனை அனுப்ப வேண்டுமென்ற எண்ணம் அவன் மனதில் எவ்வாறு தோன்றியது என்று நான் அவனை அணுகி கேட்டபோது "அது எனக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. உன்னை அனுப்பக்கூடாது என்றஎண்ணம் திடீரென என் உள்ளத்தில் தோன்றியதால் நான் உன்னை படகில் அனுப்பவில்லை" என்று பதில் கூறினான். ஓ, கர்த்தாவின் பாதுகாவலின் அதிசய கிரியையை என்னவென்று சொல்லுவது!

எல்லாத் தீங்குகளுக்கும் காரண கர்த்தனாகிய யோனா கடலுக்கு இரையாகவேண்டும். இரட்சா பெருமானின் மற்றுமொரு அதி அற்புத காக்கும் கருணை.

ஒரு சமயம் கப்பலிலிருந்த உணவுப் பொருட்களான கால் நடைகள், ஆடுகள், பன்றிகள், கோழிகள் எல்லாம் கடலில் வீசிய புயல் காற்று ஒன்றால் அடித்துக்கொண்டு செல்லப்பட்டுவிட்டன. மீன்கள் மற்றும் கொஞ்ச உணவுப் பொருட்கள் மாத்திரமே எங்களால் காப்பாற்றப்பட்டன.

இந்தக் குறைவான ஆகாரத்தில் நாங்கள் நான்கு அல்லது ஐந்து நாட்கள் கடல் பயணத்தில் சென்று கொண்டிருந்தோம். ஒரு நாள் அதிகாலையில் கப்பலில் ஒரே சந்தோச கூக்குரலும், ஆரவாரிப்பும் திடீரென கேட்டது. அந்த அதிகாலை அசாதாரணமானதொரு அழகான

காலை வேளையாக இருந்தது. தூரத்திலுள்ள காட்சிகளை நாங்கள் எங்களால் மிகவும் துலாம்பரமாக பார்க்கக் கூடிய அளவிற்கு காலைச் சூரியனின் கதிரொளி பிரகாசித்துக்கொண்டிருந்தது. அந்தக் காலை கதிரவனின் கதிர்களால் சற்று தொலைவில் மலைகள் சூழ்ந்ததொரு தீவின் கரை எங்களுக்கு நெருங்கி வருவதை நாங்கள் கண்டோம். இன்னும் கொஞ்ச தூரம் எங்கள் கப்பல் செல்லவும் மற்றும் இரண்டு மூன்று தீவுகள் எங்கள் கண்களுக்கு தெரிந்தன. அந்த தீவுகளில் எங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை எல்லாம் வாங்கி கப்பலில் நிறைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் எங்களிடமிருந்த கொஞ்சமான ரொட்டிகளை சாப்பிட்டு மீதியாயிருந்த மதுவை குடித்து ஆனந்திக்க எங்கள் கப்பல் தலைவன் எங்களுக்கு உத்தரவிட்டான். அதின் காரணமாக எங்களில் அரை குறை உயிரோடிருந்த பல கப்பல் சிப்பந்திகள் புது ஜீவன் பெற்றுக் கொண்டார்கள்.

ஆனால் அந்த சந்தோசம் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. கப்பல் மாலுமிகளில் ஒருவன் நாங்கள் கண்ட தீவுகளைக் குறித்து சந்தேகம் எழுப்பினான். கடைசியாக நாங்கள் கண்ட தீவுகள் சூரிய ஒளியால் இரத்தமயமாக மாறிற்று. ஏறத்தாழ அரை மணி நேரத்திற்குள்ளாக நாங்கள் சமுத்திரத்தில் கண்ட தீவுகள் எல்லாம் மறைந்து போய்விட்டன. சமுத்திரத்தில் இவ்விதமான ஏமாற்றும் காட்சிகளை அங்கு எழும்பும் மேகக் கூட்டங்கள் செய்யும் என்பதை கப்பல் மாலுமிகள் பொதுவாக அறிவார்கள். எங்கள் யாவருக்கும் இருந்த துயரத்துக்கு அளவே இல்லை. எனினும், எப்படியாவது ஒரு கடற்கரையை வெகு விரைவாக எட்டிப்பிடிப்போம் என்கின்ற பூரண நம்பிக்கை எங்களுக்கிருந்தது. ஆனால் 15 நாட்கள் எந்த ஒரு கரையையும் நாங்கள் எட்டிப்பிடிக்கவில்லை. எங்களுக்கிருந்த எல்லா உணவுகளும் தீர்ந்து போயிற்று. குடிக்கத் தண்ணீர் இருந்ததே தவிர உடம்பை சூடேற்றிக்கொள்ள ஒரு துளி மதுபானம் கூட எங்களிடம் இல்லை. எங்கள் வஸ்திரங்கள் எல்லாம் பழமையாய்ப் போயிருந்தன. குளிரோ வெகு கடுமையாக இருந்தது. எங்களில் ஒருவன் பட்டினியால் மாண்டும் போனான். நாங்கள் ஒருவரையொருவர் அடித்துப் புசிக்கும் நிலைக்குக்கூட தள்ளப்படுவோம் என்று அஞ்சினோம்.

இந்த இக்கட்டான நிலையில் எனக்கு மற்றொரு கொடிய ஆபத்து காத்திருந்தது. முற்றும் எதிர்பாராத விதத்தில் எங்கள் கப்பல் தலைவனின் கோபம் என்மேல் மிகவும் கடுமையாக இருந்தது. கப்பலில் நேரிட்ட

தீங்குகளுக்கெல்லாம் நான்தான் காரணம் என்று அவன் எண்ணும்படியாக பிசாசு அவனைத் தூண்டிவிட்டான். அதின் காரணமாக அவன் ஒவ்வொரு மணி நேரமும் என்னண்டை வந்து கப்பலில் நேரிட்ட மோசங்களுக்கெல்லாம் நீதான் காரணம் என்று என்மேல் பழிசாட்டிக் கொண்டிருந்தான். நான் கப்பலிலிருந்து கடலில் வீசி எறியப்பட்டால் அவர்கள் மரணத்திற்கு தப்பிக்கொள்ளுவார்கள் என்பதையும் அவன் திரும்பத் திரும்ப என் காதுகள் கேட்க சொல்லிக் கொண்டிருந்தான். ஆனாலும் தேவன் அவனை அந்தக்காரியத்தை செய்யாதபடி தடுத்துவிட்டார். இதற்கிடையில் நான் கடலில் வீசப்படும் நேரத்தை மிகுந்த பயத்தோடும், நடுக்கத்தோடும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

இறுதியாக நாங்கள் டோரி என்ற தீவை வந்தடைந்தோம். எங்கள் யாவருடைய மகிழ்ச்சிக்கும் அளவில்லை. கப்பல் தலைவன் என் மேலிருந்த தனது பகைமையை மறந்தான். எங்கள் கப்பல் டோரி தீவை அடைந்த 2 மணி நேரத்திற்குப் பின்னர் சமுத்திரத்தில் கடும் புயற் காற்று எழும்பிற்று. அந்த நாளில் நாங்கள் டோரி தீவை அடையாமல் சமுத்திரத்தில் இருந்திருப்போமானால் எங்கள் கப்பல் உடைந்து நொறுங்கி நாங்கள் அனைவரும் கடலில் மூழ்கிப் போயிருப்போம். அந்த இக்கட்டான நேரத்தில்தான் தேவன் என்று ஒருவர் இருக்கின்றார் என்றும் அவர் நம்முடைய ஜெபத்திற்கு செவி கொடுக்கின்றார் என்பதையும் அதிகமாக உணரத் தொடங்கினேன். இப்படி எத்தனையோ தடவைகள் தேவன் எனக்கு ஒத்தாசையாக எழுந்தருளி என்னுடைய எல்லா மரணக்கட்டுகளிலிருந்தும் என்னை விடுவித்திருக்கிறார். ஆனாலும் துரோகியாகிய நான் அவரை நம்பாதவனாகவும் அவருக்கு முன்பாக நன்றி மறந்த பாதகனாகவுமாகத்தான் காணப்பட்டேன்.

ஜாண் நியூட்டனின் மனந்திரும்புதல்.

23 வயதினான ஜாண் நியூட்டனை இரட்சிப்பின் பாத்திரமாக மாற்றுவதற்கு தேவன் இரண்டு ஏதுக்களை பயன்படுத்தினார். ஒன்று சமுத்திரத்தில் எழுந்த புயற் காற்று. மற்றொன்று மேரி காட்லட் என்ற 13 வயதுள்ள ஒரு தேவபக்தியுள்ள பெண்மணி. நியூட்டன் 7 ஆண்டுகள் காத்திருந்து அந்த தேவபக்தினியையே மணம் புரிந்தார். அவளுடைய பரிசுத்த வாழ்வு நியூட்டனை நல்லதொரு தேவபக்தனாக மாற்றியமைத்துவிட்டது. மேரி காட்லட் என்ற அந்த பெண்ணை அவர் அதிகமாக நேசித்தார்.

ஜாண் நியூட்டன் மனந்திரும்பக் காரணமாயிருந்த மிக முக்கியமான சம்பவம் அவர் பணி செய்த கப்பல் புயலில் சிக்கி மூழ்கிப் போகும் நிலையிலிருந்தபோது கர்த்தரால் அதிசயமாகப் பாதுகாக்கப்பட்டதுதான். 1748 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் தேதி அவருடைய கப்பல் இங்கிலாந்து நோக்கிய பிரயாணத்தில் இருந்தபோது அவர் எல்லா நாட்களைப்போல அந்த நாளின் ராக்காலத்திலும் படுக்கைக்குச் சென்றார். பரிசுத்தவான் தாமஸ் கெம்பீஸைப்பற்றி ஸ்டான் ஹோப் என்பவர் எழுதிய அற்புதமான ஆவிக்குரிய புத்தகத்தை மிகவும் அசட்டையாக வாசித்துவிட்டு படுக்கைக்கு செல்லுவதற்கு முன்னர் அதை தூக்கி ஒரு மூலையில் போட்டுவிட்டுப் படுத்துக்கொண்டார். எனினும் அவருடைய உள்ளான அந்தராத்துமாவில் புத்தகத்தில் தான் வாசித்த காரியங்கள் அனைத்தும் உண்மையாயிருந்தால் பாவியான தன்னுடைய நிலை என்னவாகும் என்ற கேள்விக்குறி அன்று இரவு அவருடைய உள்ளத்தில் பலமாக அடித்துக்கொண்டிருந்தது.

நியூட்டன் நன்றாக குரட்டைவிட்டு தூங்கிக் கொண்டிருந்த அந்த ராக்கால ஜாமத்தில் சற்றும் எதிர்பாராத விதமாக சமுத்திரத்தில் எழும்பிய பயங்கர புயல் கப்பலை பலமாகத் தாக்கிற்று. புயலின் கடுமையால் சமுத்திரத்தில் எழுந்த அலைகளின் நீர் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்த நம்முடைய நியூட்டனுடைய அறைக்கே நுழைந்து வந்து அவரை நன்கு குளிப்பாட்டிவிட்டது. தான் நீரால் நனைக்கப்பட்டதை கண்டு பதை பதைத்து எழுந்த அவர் கப்பலின் மேல் தட்டில் பணியாளர்கள் சமுத்திரத்தில் கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கின்றது என்று அலறி அழுது கொண்டிருப்பதை கண்டு துடி துடித்து மேல் தட்டுக்கு ஏறுகையில் கப்பலின் தலைவனை ஏணிப்படிகளில் அவர் சந்தித்தார். தலைவன் அவரை ஒரு கத்தி ஒன்றை எடுத்துக்கொண்டு வரும்படியாக கூறவே நியூட்டன் கத்தியை எடுப்பதற்காக இறங்குகையில் அவருடைய ஸ்தானத்தில் மற்றொரு பணியாள் மேல் தட்டுக்கு துரிதமாக ஏறினான். அவன் மேல் தட்டில் இருக்கையில் ஒரு பெரிய அலை வந்து அவனை அப்படியே சமுத்திரத்துக்குள் இழுத்துச் சென்றுவிட்டது. கணப்பொழுதில் மாயமாய் நீரால் அடித்துச் செல்லப்பட்ட அந்த பணியாளுக்காக புலம்பி அழவோ அல்லது அவனைப் பாதுகாக்கவோ இப்பொழுது சமயம் இல்லை. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஜீவனுக்காக போராட வேண்டிய நேரமிது. கப்பல் தலைவன் தெய்வாதீனமாக கத்தியை எடுத்து வரும்படியாக நம்முடைய நியூட்டனை

அனுப்பியிருக்காத பட்சத்தில் கடல் அலையால் அவர் சமுத்திரத்தில் இழுத்துச் செல்லப்பட்டிருப்பார். நியூட்டன் தனது மனந்திரும்புதலை குறித்து அவரது வாயால் சொல்லும் வார்த்தைகளை நாம் கவனிப்போம்.

சமுத்திரம் மிகவும் கொந்தளிப்பாக இருந்ததால் அதின் அலைகள் கப்பலின் மேல் தட்டின் பலகைகளை எல்லாம் அடித்துக்கொண்டு சென்றுவிட்டது. அவ்விதமான கடல் கொந்தளிப்பையும், கோரப் புயலையும் சமுத்திர பயணங்களிலிருப்போர் சாதாரணமாக காண இயலாது. அந்தக் கப்பலிலிருந்த நாங்கள் அனைவரும் ஜீவன் தப்பியதே தேவனின் சுத்தக் கிருபைதான். கப்பலுக்குள் வரும் கடல் நீரை அப்புறப்படுத்துவதில் நாங்கள் யாவரும் கடும் பிரயாசம் எடுத்தோம். எங்களிடமிருந்த எல்லா தூக்குவாளிகளையும், தண்ணீர் மொள்ளும் பாத்திரங்களையும் பயன்படுத்தி கப்பலுக்குள் வந்து கொண்டிருந்த கடல் நீரை வெளியேற்றத் தொடங்கினோம். நான் அதிகாலை 3 மணியிலிருந்து அடுத்து வந்த நாளின் மத்தியானம் வரை தண்ணீர் பம்பை என் பெலத்தை எல்லாம் ஒன்று சேர்த்து அடித்துக் கொண்டிருந்தேன். ஆனால் எவ்வித பயனும் கிட்டவில்லை. கடைசியாக மிகவும் சோர்புற்று இனி நாம் உயிர் பிழைக்கப் போவதில்லை என்ற நிச்சயமான எண்ணத்துடன் என் படுக்கையில் போய்ப் படுத்து இதுவே என் இறுதி மரண தூக்கம் என்று எனக்குள்ளாக கூறிக்கொண்டு படுத்துக் கொண்டேன். ஒரு மணி நேரம் சென்ற பின்னர் என்னை மேல் தட்டுக்கு அழைத்து கப்பலை ஓட்டச் சொன்னார்கள். அதின்படி அன்று நள்ளிரவு வரை புயலின் நடுவில் கப்பலை ஓட்டிச் சென்றேன்.

இந்த இக்கட்டான நேரத்தில் நான் முன்பு மனப்பாடம் செய்திருந்த தேவனுடைய கோபாக்கினையின் வசனங்களான நீதி 1:24-31, எபிரேயர் 6:4-6 மற்றும் 2 பேதுரு 2:20 வசனங்கள் வந்து எனக்குள்ள நிச்சயமான பேரழிவை உறுதிபடுத்துவதாக என் கண்களுக்கு முன்னர் நின்று கொண்டிருந்தன. இந்த ஜீவ மரணப் போராட்டத்தின் வேளையில் என் இரட்சகரை நோக்கி நான் அபயமிடத் தீர்மானித்தேன். நான் அவருக்கு விரோதமாக ஆப்பிரிக்க கடற்கரைகளில் செய்துள்ள கணக்கற்ற பாவங்களின் காரணமாக அவரை அப்பா என்று என் வாயால் அழைக்க வெட்கமுற்றுக் கலங்கினேன். ஆண்டவரின் பரிசுத்த ஜீவியத்தையும், அவரது பாடு மரணத்தையும் இந்தத் தருணத்தில் நான் சிந்திக்கத் தொடங்கினேன். தேவ ஆவியானவர் அதின் மூலம் என் உள்ளத்தில் கிரியை செய்யத் தொடங்கினார். அங்கு தானே ஆண்டவரிடம் என்

பாவங்களை கண்ணீர்களின் கதறுதல்களோடு அறிக்கை செய்யத் தொடங்கினேன். தேவன் தம்முடைய தயவுள்ள கிருபையால் என்னைத் தம்முடைய இரட்சிப்பின் பாத்திரமாக்க திருவுளம் கொண்டார். அவர் தம்முடைய பற்பல வசனங்களின் மூலமாக அந்த நேரத்தில் என்னுடன் இடைபட்டார். அதின் பின்னர் சமுத்திரத்தில் புயல் ஓய்ந்து கப்பல் ஓரளவு நிம்மதியாகச் சென்று கொண்டிருந்தது. இப்பொழுது என் ஆசை ஆவல் எல்லாம் என் இயேசுவின் மேலேயே இருந்தது. அவருடைய வசனங்களை அதிகமாக வாசித்து தியானிக்கவும் ஜெபத்தில் அதிக நேரம் செலவிடவும் தொடங்கினேன். நான் வேலை செய்த கப்பல் பணியாளர்களில் நான்தான் பஞ்சமா பாதகனான பாவி என்பதை நான் அறிவேன். ஆகிலும், தேவன் என்னைத்தான் அவர்கள் எல்லாரிலும் அதிகமாக நேசித்தார் என்பதை எண்ணுகையில் என் கண்கள் இரண்டும் குளங்கள் ஆகின்றன.

நான் மனந்திரும்புவதற்கு ஏதுவாக தேவன் கடலில் எனக்காக எழுப்பிவிட்ட கொடிய புயலின் சமயத்தில் கூட ஆரம்பத்தில் நான் அதைக்குறித்து மிகவும் அசட்டையாகத்தான் இருந்தேன். கப்பலில் உள்ளதண்ணீர் பம்பை நான் அடித்துக் கொண்டிருந்த வேளையில் என் சக பணியாளன் ஒருவனிடம் " நாம் இப்பொழுது கடலில் புயலின் காரணமாக அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் இந்தச் சம்பவம் பின் வரும் நாட்களில் நாம் மது அருந்தி மனமகிழும் நேரத்தில் தமாஷ் பேச ஏற்ற நிகழ்ச்சியாக இருக்கும்" என்று கூறினேன். அதற்கு மாறுத்தரமாக அவன் "நீ நினைப்பது போல அத்தனை எளிதான சங்கடத்தில் நாம் இப்பொழுது சிக்குண்டிருக்கவில்லை. காலம் கடந்து போயிற்று. நம் எல்லாருடைய அழிவும் மிகவும் உறுதியாக நிச்சயிக்கப்பட்டுவிட்டது" என்று கூறினான்.

தேவனுடைய கிருபையில் வளர்ந்தது.

கொந்தளிக்கும் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த கப்பலில் என்னைத் தமக்கென ஆண்டவர் தெரிந்துகொண்டதை நான் எனக்குள்ளாக நன்றாக அறிந்து கொண்டேன். அப்பொழுது என் கை வசம் புதிய ஏற்பாடும், தாமஸ் கெம்பீஸ் என்ற தேவபக்தனை குறித்து எழுதப்பட்ட புத்தகம் ஒன்றும், பீவரிட்ஜ் என்பவருடைய பிரசங்கங்கள் அடங்கிய புத்தகமும்தான் இருந்தன. புதிய ஏற்பாட்டை நான் ஆசை தீர வாசித்து தியானித்தேன். லூக்கா 13 ஆம் ஆதிகாரத்தில் கனி கொடாத அத்தி மரத்தின் உவமையை நான் வாசித்தபோது நடுநடுங்கினேன். அதிகமான நேரத்தை ஆண்டவர் இயேசுவோடு ஜெப தியானங்களில் செலவிட்டேன்.

இதற்கிடையில் கடற் புயலில் சிக்குண்ட எங்கள் கப்பலை அயர்லாந்து நாட்டின் துறைமுகம் ஒன்றில் பழுது பார்ப்பதற்காக நிறுத்தியிருந்தார்கள். பல நாட்கள் அது அங்கேயே நின்று கொண்டிருந்தது. இந்த நாட்களில் நான் அங்குள்ள ஒரு மிகவும் அன்பான கிறிஸ்தவ வீட்டில் தங்கியிருந்தேன். அவர்கள் எனக்குப் பாராட்டிய கிறிஸ்தவ அன்பு கொஞ்சமல்ல. கடல் கொந்தளிப்பால் நான் சரீரத்தில் அடைந்த எல்லா பாடு துயரங்களையும் அந்த வீட்டில் நான் போக்கிக்கொண்டேன். அந்த வீட்டில் நான் இருந்தபோது என்னை முற்றுமாக ஆண்டவருக்குத் தத்தம் செய்தேன். வேத வசன தியானங்களுக்கும், ஜெபத்திற்கும் என் நேரத்தை எல்லாம் செலவிட்டேன். அந்த வீட்டில் நான் என்னை கர்த்தருக்கு ஒப்புவித்த ஒப்புவிப்பு நிரந்தரமானதொன்றாக மாற்றமின்றி கடைசி வரை நீடித்தது.

ஜாண் நியூட்டனின் தேவ ஊழியம்.

தேவபக்தன் ஜாண் நியூட்டனின் தேவ ஊழியம் நான்கு வகைப்படும். முதலாவது வகை, அவர் சபைகளிலே குருவானவராக இருந்து தேவ ஊழியம் செய்தது. 43 ஆண்டு கால அவருடைய சபை ஊழியம் மிகவும் கனி நிறைந்ததாக இருந்தது. தான் குருவானவராக பணி செய்த சபைகளிலே ஆழமான மனந்திரும்புதலைக்குறித்தும், பரிசுத்த வாழ்வின் அத்தியந்த தேவையைக் குறித்தும் அவர் பிரசங்கித்தார். தன்னுடைய மந்தையின் ஆடுகளின் சரீர மற்றும் ஆவிக்குரிய காரியங்களில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். 1777 ஆம் ஆண்டு ஓல்னி என்ற இடத்திலுள்ள திருச்சபையில் அவர் ஊழியம் செய்து கொண்டிருந்த காலத்தில் அங்கு பெருந் தீ விபத்து உண்டாயிற்று. தங்களுடைய உடமைகளை இழந்த மக்களை நியூட்டன் ஆறுதல்படுத்தியதுடன் அவரே பணம் சேகரம் செய்து அவர்களுக்கு உதவிகரம் நீட்டினார்.

தீ விபத்தில் தங்களுக்குள்ள எல்லாவற்றையும் இழந்த மக்களை நோக்கி "என் அன்பு தேவ ஜனமே, இஸ்ரவேல் மக்களை தேவன் பார்வோனுடைய மகா கடுமையான எதிர்ப்பும், போராட்டமும் இல்லாமலும் அதேபோல அவர்களின் வனாந்திர யாத்திரையில் எந்த ஒரு துன்ப துயரம் இல்லாமல் வழி நடத்தியிருப்பாரேயானால் அவர்கள்

மிகவும் சொகுசாக பாலும் தேனும் ஒடுகிற கானான் தேசத்துக்குள் பிரவேசித்திருக்கலாம். அப்படி தேவன் அவர்களை அனுமதித்திருப்பாரேயானால் பின் வந்த திருச்சபையினராகிய நாமும் அந்த இஸ்ரவேல் ஜனங்களும் பெரிய ஆவிக்குரிய இழப்புக்குரியவர்களாகி இருப்போம். ஆனால் தேவன் அவர்களுக்கு பார்வோன் மூலமாகவும், நீண்ட வனாந்திர யாத்திரையிலும் கடுந் துன்ப துயரங்களை அனுமதித்தபடியால் சர்வ வல்லவரின் பராக்கிரமம் நிறைந்த வலுமையான கரத்தை தங்களுடைய வாழ்க்கையிலே அவர்கள் பிரத்தியட்சமாக காண முடிந்தது. அதே போன்று நம்முடைய இகலோக வாழ்வையும் கண்ணீர்,கவலை,வியாதி,வேதனை,பாடு இல்லாமல் மிகவும் மென்மையாக தேவன் வழி நடத்திக்கொண்டு சென்றுவிடுவாரானால் அந்த கிறிஸ்தவ வாழ்வு முற்றும் அர்த்தமற்றதாகவும், தேவ நாமத்திற்கு எந்த விதத்திலும் பயனற்றதாகவும் போய்விடும். எனவே, உலகிலே நமக்கு பாடுகள் கண்ணீர்கள் அத்தியந்த அவசியம். பாடுகளற்ற கிறிஸ்தவ வாழ்க்கை பிசு பிசுத்து போய்விடும்" என்று கூறினார்.

ஒரு புதன் கிழமை ஆலய ஆராதனை முடித்துவிட்டு நியூட்டன் ஆலயத்தின் படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தபோது அந்த ஆலயத்திலுள்ள ஒரு அம்மாள் அவரைப் பார்த்து "பாஸ்டர் ஐயா, நான் வாங்கிய லாட்டரி டிக்கெட் 10,000 பவுண்டுகளை பெற்றுவிட்டது. இந்த என்னுடைய அதிர்ஷ்டத்துக்காக நீங்கள் என்னை கட்டாயம் வாழ்த்துவீர்கள் என்று நினைக்கின்றேன்" என்று கூறினார்கள். " இது வாழ்த்த வேண்டிய காரியமா? கடுமையான பாவ சோதனையில் வசமாக சிக்கிக்கொண்ட உங்களுக்காக நான் பாரத்தோடு ஜெபிப்பேன்" என்றார் தேவ பக்தன்.

ஒவ்வொரு ஆண்டும் கோடை கால மாதங்களில் ஜாண் நியூட்டன் நாட்டுப் புறங்களிலுள்ள தம்முடைய தேவ பக்தியுள்ள நண்பர்களுடைய வீடுகளில் தங்கியிருப்பார். அந்த நாட்களில் அவர் காலை மாலை வேளைகளில் தேவனுடைய வசனங்களை கிராமத்திலுள்ளோருக்கு தவறாது பிரசங்கிப்பார். அந்தவிதமான அவருடைய பிரசங்கங்களில் மனந்திரும்பினோர் பலராவர். வேத வசனங்கள் மேல் கட்டுக்கடங்கா வாஞ்சை கொண்டு அவற்றை தேவ சமூகத்தில் மணிக்கணக்காக தியானிக்கும் அவருடைய தேவ செய்திகள் அநேகரை தேவனண்டை கொண்டு வருவதாக இருந்தது.

தேவ மனிதனின் இரண்டாவது வகை ஊழியம் என்னவெனில், தேவ ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும், மனந்திரும்பாத பாவிகளுக்கும், துக்கப்பாரத்தால் இளைத்து நொந்து போனவர்களுக்கும் தம்முடைய வீட்டைத் திறந்து வைத்து அவர்களை அன்போடு ஏற்று அரவணைத்து உபசரித்ததுதான். அவரும், அவருடைய மனைவி மேரி காட்லட் அம்மையாரும் தம்முடைய வீட்டிற்கு வருவோரை எல்லாம் மனங்கோணாமல் ஏற்று பணிவிடை செய்தார்கள். பாவிகளுக்கு இரட்சிப்பின் மார்க்கத்தை சுட்டிக் காட்டினார்கள். வாழ்க்கைப் புயலில் சிக்கி துக்க சாகரத்தில் இருந்தோரை ஆற்றித் தேற்றினார்கள். அதை அவர்கள் இருவரும் தேவ ஊழியமாக 43 வருடங்கள் செய்தார்கள். அந்த ஊழியங்களிலும் அநேகர் ஆண்டவருடைய அடியவர்களானார்கள்.

ஜாண் நியூட்டனின் மற்றொரு வகை சிறப்பான தேவ ஊழியம் அவருடைய கடிதம் எழுதுதலாகும். அவர் எழுதிய கடிதங்கள் அநேகருக்கு ஆறுதலையும், சமாதானத்தையும் கொண்டு வந்ததுடன் அநேகரை இரட்சகருக்கு நேராக வழி நடத்தின. ஆவிக்குரிய போதனைகள், ஊழியர்களுக்கான தேவ ஆலோசனைகள் போன்றவை எல்லாம் அவர் கடிதங்களில் இடம் பெற்றிருந்தன. அவருடைய கடிதங்கள் அச்சிடப்பட்டு இப்பொழுது புத்தகங்களாக உள்ளன. அவற்றை நாம் இப்பொழுது படித்தாலும் ஆவிக்குள் நம்மை அனலூட்டி ஏவி எழுப்பிவிடுவதாக இருக்கின்றன.

நியூட்டனின் இறுதியான மற்றொரு மேன்மையான தேவ ஊழியம் பாடல்கள் எழுதும் தேவ ஊழியமாகும். அவரும் அவருடைய நண்பன் வில்லியம் கவ்பர் என்பவரும் புதன் கிழமை மாலைதோறும் அவர்கள் நடத்திவந்த ஜெப ஐக்கிய கூட்டத்திற்காக பாடல்கள் எழுதினர். இதில் தனிப்பட்ட முறையில் ஜாண் நியூட்டன் அநேக அருமையான பாடல்களை எழுதியுள்ளார். அவைகள் இன்றும் உலகம் முழுமையிலுமுள்ள தேவ ஆலயங்கள், தேவ மக்கள் நடுவில் தேவநாம மகிமைக்காக பாடப்படுகின்றன. அந்தப் பாடல்களை ஆவியோடும், கருத்தோடும் பாடும் ஒவ்வொரு தனிப்பட்ட ஆத்துமாவுக்கும் இன்றும் பக்தி பரவசத்தை கொண்டு வருவதுடன் அலைசடிப்பட்ட நொந்த ஏழை மோட்ச பயணிகளுக்கு பரம கானான் வழிப்பயண ஆனந்த கீதங்களாக உள்ளன. நான் ஆரம்பத்தில் முகப்பு அட்டையில் குறிப்பிட்ட அவருடைய அருமையான பாடல் "நல் மீட்பர் இயேசு நாமமே என் காதுக்கின்பமாம்"

தவிர பக்தனின் மற்றொரு பரவசமான பாடல் அடியை கவனியுங்கள்:-

யாரிலும் மேலான அன்பர்
மா நேசரே
தாய்க்கும் மேலாம் நல்ல நண்பர்
மா நேசரே
மற்ற நேசர் விட்டுப் போவார்
நேசித்தாலும் கோபம் கொள்வார்,
இயேசுவோ என்றென்றும் விடார்
மா நேசரே!

பரிசுத்தவாட்டியாம் அருமை மனைவியின் பரலோக யாத்திரை

ஜான் நியூட்டன் தம்முடைய அருமை மனைவி மேரி காட்லட் அம்மையாரை மிக அதிகமாக நேசித்தார். அவர் தம்முடைய மனைவிக்கு தம்முடைய கடல் யாத்திரைகளின்போதும் பிற சமயங்களிலும் எழுதின கடிதங்கள் புத்தக ரூபமாக அச்சிடப்பட்டுள்ளது. ஒரு தேவ பக்தன் தன்னுடைய மனைவியின்பால் இத்தனை அன்பு ஏன் கொண்டிருக்கவேண்டும் என்று நாம் நினைக்கின்ற அளவிற்கு அந்தக் கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆம், அத்தனையாக அவர் தன்னுடைய வாழ்க்கைத் துணையை நேசித்தார். அந்த நேசிப்புக்கு அந்த அம்மையாரும் பாத்திரமான பரிசுத்தவாட்டிதான். அவருடைய மனந்திரும்புதலுக்கு அவர்கள் ஒரு காரணமாக இருந்தார்கள் என்பதை ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டேன் அல்லவா! தனது மனைவியின் மரணத்தைக் குறித்து ஜான் நியூட்டன் சொல்லுவதை நாம் கவனிப்போம்:-

" என் அன்பான மனைவி நல்ல உடற்கட்டும், அமர்ந்த இனிய சுபாவமும், தேவ பக்தியும் நிறைந்த மாது ஆவார்கள். நல்ல தேக சுகத்தோடு இருந்த அவர்களின் சரீர சுக நிலை திடீரென்று பாதிக்கப்பட்டது. காரணம், 1754 ஆம் ஆண்டு நான் ஒரு நாள் எந்த ஒரு காரணமுமில்லாமல் ஒரு மணி நேரம் பேச்சின்றி, சுய நினைவிழந்து கிடந்ததுதான். என் நாசியில் மூச்சு மாத்திரம் சென்று கொண்டிருந்திருக்கின்றது. அதைக்கண்ட என் மனைவி அதிர்ச்சியடைந்து உடல் நலம் பாதிக்கப்பட்டார்கள். அந்த நாளிலிருந்து அவர்கள் தேகத்தில் ஏதாவது ஒரு வியாதி ஒட்டிக்கொண்டே இருந்தது. என்னோடு ஜீவித்த அவர்களின் 40 ஆண்டு கால வாழ்வில்

10 ஆண்டு காலம் முற்றுமாக வியாதி வேதனைகளின் பிடியில் தான் அவர்கள் சிக்கியிருந்தார்கள். அதே சமயம் தேவன் அவர்களுக்கு நீண்ட சுக வாழ்வின் ஆண்டுகளையும் கொடுத்திருந்தார்.

சில காலத்திற்குப் பின்னர் அவர்களின் இடது மார்பகத்தில் ஒரு கட்டி தோன்றி அவர்களுக்கு சற்று வேதனையையும், அதைப்பற்றிய ஆழமான சந்தேகத்தையும் எழுப்பிவிட்டது. ஆனால் அவர்கள் அதை என்னிடம் தெரிவிக்கவில்லை. வேதனை அதிகரிக்கவே எனது நண்பனும், பிரபல்யமான ரண வைத்தியனுமான அவனை அணுகி என்னை துயரத்துக்குள்ளாக்காத விதத்தில் அறுவை சிகிட்சை செய்து கொள்ள முற்பட்டார்கள். ஆனால் என் நண்பன் அறுவை சிகிட்சை தற்போது முற்றிலும் சாத்தியமல்லவென்றும் மார்பகத்திலுள்ள கட்டியானது ஒரு சிறிய தர்பூசணி காயின் பாதி அளவிற்கு வளர்ந்துவிட்டது என்றும், உயிருக்கு பங்கமின்றி கட்டியை நீக்குதல் முற்றும் இயலாத காரியம் என்றும் கூறவே பின்னர் அந்தக் காரியத்தை அவர்கள் என்னிடம் கண்ணீருடன் பகிர்ந்து கொண்டார்கள்.

என் மனைவி அதை என்னிடம் கூறியபோது நான் அடைந்த துயரத்துக்கு அளவில்லை. நான் எந்த ஒரு பொருளை மிக அதிகமாக நேசித்தேனோ அந்தப் பொருளை(என் அன்பு மனைவியை) தேவன் அடிக்கச் சித்தம் கொண்டார். எனக்கு அது அவசியம் வேண்டியதுதான் என்று கர்த்தரில் என்னை திடப்படுத்திக்கொண்டு அவருடைய பூரண சித்தத்திற்கு என்னை ஒப்புவித்தேன். அன்பின் தேவன் தமது மட்டற்ற கிருபையால் எனக்கு அந்த கடினமான அடியைக் கொடுத்திராத பட்சத்தில் வலையில் சிக்குண்ட காட்டெருமையைப்போலவேதான் நான் என் வழிகளில் அங்குமிங்கும் துள்ளாட்டம் போட்டு திமிறிக் கொண்டிருந்திருப்பேன்.

1789 ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் என் மனைவியின் புற்று நோயின் வேதனை மிகவும் அதிகரித்தது. அந்த வேதனை கொஞ்சமும் இடைவெளியின்றி தொடர்ச்சியாக இருந்தது. அந்த வேதனையின் அகோரமானது படுக்கையில் அவர்களை ஒரு மணி நேரம் கூட ஒரு பக்கமாக நித்திரை கொள்ளவிடவில்லை. ஆ, அந்த துயரக்காட்சியை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

ஆனால், அன்பின் கருணாகரக் கர்த்தர் அந்த ஆண்டின் கோடை கால நாட்களில் அவர்களுக்கு அவர்களின் கொடிய வேதனைகளிலுருந்து

ஒரு பெரிய விடுதலையை கொடுத்து அவர்களைத் தேற்றினார். அந்த நாட்களில் அவர்கள் சௌதாம்டன் என்ற இடத்திலுள்ள தேவாலயத்திற்கு இரு தடவைகள் சென்று வந்தார்கள். நல்ல சுகதேகியான மக்களைப் போல இரவில் நித்திரை செய்து எழுந்தார்கள். அந்நாட்களில் நான் அவர்களுக்குக் கொடுத்திருந்த வேதாகமத்தின் முதலிலிருந்து கடைசி வரையான எல்லா முக்கிய வேத பகுதிகளையும் தன்னுடைய சொந்த அன்புக் கரத்தால் பென்சிலால் கோடிட்டுப் படித்து தியானித்திருந்தார்கள். தேவனுடைய வார்த்தைகள்தான் அவர்களின் கைகண்ட ஔஷதமும் போஜனமுமாக இருந்தது. வேத பண்டிதர் வாட்ஸ் அவர்கள் எழுதிய சங்கீத புத்தகத்தின் வியாக்கியானத்தையும் அவருடைய பாமாலைகளையும் கூட அந்த சமயம் என் மனைவி கோடிட்டுப் படித்திருந்தார்கள்.

இதன் பின்னர் அவர்களின் வியாதியின் கடுமை மிகவும் அதிகரித்தது. புற்று நோய் மனைவியின் முதுகுத் தண்டுவடம் வரைச் சென்றிருந்தபடியால் படுக்கையில் ஒரு பக்கமிருந்து மறு பக்கத்தில் அவர்களை மெதுவாக நகர்த்திப் படுக்கவைக்க நாங்கள் மொத்தம் 5 பேர் கிட்டத்தட்ட 2 மணி நேரம் போராட வேண்டியதாயிருந்தது என்று சொன்னால் கட்டாயம் நீங்கள் நம்பத் தயங்குவீர்கள்.

சில நேரங்களில் இதுவும்கூட எங்களுக்கு செய்ய முடியாத அத்தனை கஷ்டமாகிவிட்டபடியால் ஒரு வார காலம் முழுவதும் அவர்களை நாங்கள் அப்படியே படுக்கையில் ஒரே இடத்தில் படுத்திருக்கும்படியாக அனுமதிக்கவேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு உண்டாயிற்று. இவை எல்லாம் எனக்குத் தேவையானதாகவே இருந்தன. தேவனின் தண்டனையின் பிரம்புக்கு ஒரு குரல் இருந்தது. ஆம், அது கர்த்தாவின் குரலேதான்.

தேவன் வானத்திலிருந்து பேசினாலும் கூட நான் அத்தனை தெளிவாக அவரின் குரலை கேட்டிருக்கமாட்டேன். ஆனால், அவருடைய கரத்தின் அடியால் கிடைத்த தண்டனையின் மூலம் அவருடைய அன்பு குரலை நன்கு புரிந்து கொண்டேன். " இப்பொழுது உன்னுடைய விக்கிரகத்தை உன் உள்ளத்தில் வைத்து நன்கு கற்பனை பண்ணிப்பார். அந்த மனைவி எப்படிப்பட்டது? அதின் சரீரம் எத்தன்மையானது? என்பதை இப்பொழுதாவது நீ புரிந்து கொள். ஒரு காலத்தில் என்னைவிட

அவளைத்தான் உச்சிதமான பொருளாக உன் உள்ளத்தில் நீ வைத்து நேசித்தாய் " என்று அந்தப் பிரம்பு என்னுடன் பேசிற்று.

" நீ மகா வேதனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றாய் " என்று நான் ஒரு நாள் என் மனைவியிடம் கூறினேன். அதற்கு அவர்கள் "உண்மைதான், நான் வேதனைப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றேன். ஆனால், நீங்கள் எண்ணுகிறபடி மகா வேதனை அனுபவித்துக் கொண்டிருக்கவில்லை" என்று பதிலளித்தார்கள். தன்னுடைய சரீரத்தை நகர்த்த முடியாதபோதினும் தனது கரங்களை நன்கு பயன்படுத்த தன் ஆண்டவர் செய்த கிருபைக்காக அவர்கள் அவருக்கு நன்றி ஸ்தோத்திரம் ஏறெடுத்துக் கொண்டேயிருந்தார்கள்.

அவர்களின் தலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. எனவே, நான் அவர்கள் அருகில் அவர்கள் முகத்தைப் பார்ப்பதைத் தவிர மற்றொன்றும் செய்ய இயலாதவனாக இருந்தேன். வார்த்தைகளால் நாங்கள் ஒருவருக்கொருவர் சம்பாஷித்துக் கொண்ட நாட்கள் முடிந்துவிட்டன. 1789 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் நாள் கர்த்தருடைய பரிசுத்த ஓய்வு நாளாகும். நான் அன்றைய நாளின் காலை ஆலய ஆராதனை தேவ செய்திக்காக என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் என்னை வரும்படியாக என் மனைவி எனக்கு என் வீட்டு வேலையாள் ஒருவனை அனுப்பியிருந்தார்கள். நான் உடனே அவர்களண்டை விரைந்து சென்றேன். அதுவேதான் எங்கள் பூவுலக கடைசி சந்திப்பின் நாள். நான் அவர்கள் அருகில் முகத்தண்டை சென்றதும் வழக்கம்போல வாய்க்குள் ஏதோ பேசினார்கள். தனது கரத்தை என்னண்டை நீட்டினார்கள். நான் அதைப்பற்றிப்பிடித்து அவர்களண்டை நின்று ஜெபித்தேன். பின்னர் அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. அதே சமயம் நானும் கண்ணீரை வடித்தவனாக அங்கு நின்று கொண்டிருந்தேன். அவர்களைவிட்டு நான் அதற்கப்பால் கடந்து சென்றுவிட்டு திரும்பவுமாக நான் துரிதமாக அவர்களண்டை வந்து நின்று " நான் என் தேவனில் நம்பிக்கை கொண்டிருப்பது போல நீயும் அவரில் அசையாத நம்பிக்கை கொண்டு அவருக்குள் மிகவும் சமாதானமுடையவளாக உனது இந்த மரணப்படுக்கையின் நேரத்தில் நீ இருக்கின்றாய் என்பதை நான் அறிந்தால் மட்டற்ற ஆறுதல் அடைவேன். நீ அந்தவிதமானதோர் மேன்மையான பரலோக நம்பிக்கையின் ஆனந்த நிலையில்தான் இருக்கின்றாய் என்றால் உன் கரத்தை எனக்கு உயர்த்திக் காண்பிக்கவேண்டும்" என்று நான்

அவர்களிடம் கேட்டுக்கொண்டேன். அதைக்கேட்ட அவர்கள் தன்னுடைய கரத்தை உடனே மேலே உயர்த்தி அதை பல தடவைகள் அங்குமிங்குமாக அசைத்தார்கள். அல்லேலூயா.

அந்த நாளின் மாலை வேளையில்தானே அவர்களின் பார்வை, கேட்கும் ஆற்றல் எல்லாம் முற்றும் விழுந்து போயிற்று. அந்த வாரத்தின் புதன் கிழமை வரை அதே நிலையில்தான் அவர்கள் இருந்தார்கள். அந்த புதன் கிழமை மாலை அவர்களின் சுவாசம் மிகவும் கஷ்டத்துடன் வெளி வந்தது. அவர்கள் சுவாசிக்கும் சத்தம் அறை எங்கும் கேட்டது. நான் அவர்கள் அருகில் அமர்ந்து சுமார் 3 மணி நேரம் எனது கரத்தில் மெழுகுவர்த்தியை பிடித்தவனாக அவர்களை கவனித்துக் கொண்டிருந்தேன். இரவு சரியாக 10 மணிக்கு சற்று முன்பதாக அவர்கள் ஜீவன் அவர்களிலிருந்து அமைதியாகப் பிரிந்து சென்றது. அதின் பின்னர் அவர்கள் முந்தைய விருப்பப்படி அவர்களின் மோதிரத்தை அவர்களின் விரலிலிருந்து கழற்றி என் விரலில் போட்டுக்கொண்டேன். உடன்தானே நான் எனது வீட்டின் வேலையாட்களை எல்லாம் அழைத்து மனைவியின் படுக்கை அருகில் யாவரும் முழங்காலூன்றி நான் தேவனுக்கு நன்றி செலுத்தி ஜெபித்தேன். அந்த நாளில்தானே நான் என்னையறியாமல் "தேவனே, நான் நாதியற்ற நீசன், தனியனான எனக்கு இரங்கும் ஐயா" என்று வாய் திறந்து தேவ சமூகத்தில் கண்ணீருடன் ஜெபித்தேன்.

தேவ பக்தனின் பூவுலக கடைசி நாட்களும் உச்சித பட்டண பிரவேசமும்.

80 வயதான தள்ளாத விருத்தாப்பிய நிலையிலிருந்த போதினும் இந்த சிறந்த தேவ பக்தன் ஜாண் நியூட்டன் கர்த்தருக்கு கனி கொடுப்பவராகவே இருந்து வந்தார் என்பதை அறியவே நமக்கு மகிழ்ச்சியும் ஆச்சரியமுமாக இருக்கின்றது. கிட்டத்தட்ட கண் பார்வை முழுவதுமாக போய், காது சரியாக கேட்காததால் சம்பாஷணைகளில் கலந்து கொள்ள இயலாதவராக இருந்தாலும் தம்முடைய வழக்கமான தேவ பணிவிடைகளை முந்தைய உற்சாகத்தோடேயே அவர் செய்து வந்தார். அவருடைய ஞாபகசக்தி குன்றிப் போன போதிலும் தேவ சத்தியங்களை குறித்த தெளிவு சற்றும் குன்றவில்லை.

வயது முதிர்ச்சியின் காரணமாக பெலன் குன்றி மிகவும் கஷ்டத்தோடே நியூட்டன் பிரசங்க பீடத்தில் தேவசெய்தியை

கொடுப்பதை அறிந்த அவரது சபை அங்கத்தினன் ஒருவன் அவரைப் பார்த்து "ஐயா, இனி நீங்கள் இத்தனை சரீர வேதனைகளுடன் தேவ செய்தி கொடுக்க வேண்டாம். உங்கள் தேக நலன் கருதியாவது இனி நீங்கள் பிரசங்கிக்க வேண்டாம்" என்றபோது நியூட்டன் அந்த மனிதனைப் பார்த்து " என்ன சொல்லுகின்றீர்கள், பிரசங்கத்தை நிறுத்துவதா! இந்த ஆப்பிரிக்க தூஷணைக்காரன் பேச வலுவிருக்கும் வரை பிரசங்கித்தே தீருவான்!" என்று பதிலளித்தார். வர வர அவர் பெலன் ஒடுங்கி அவரிடம் எந்த ஒரு கேள்வியை கேட்பது என்பது கூட துயரமான வேதனையின் காரியமாயிற்று.

ஜான் நியூட்டன் மரிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக "ஆத்துமாவும், சரீரமும் பெலவீனமடைந்தாலும் தேவன் எனது ஆத்துமாவின் பெலனாகவும் அவரே சதா காலமும் என் பாத்திரத்தின் பங்குமாக இருக்கின்றார். நான் விவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புவித்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" " இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருள்வார்" என்று சொன்னார்.

பின்பு அவருடைய நெருங்கிய இனத்தவரில் ஒருவரிடம் " தேவனுக்குப்பயந்தவர்களே நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள், அவர் என் ஆத்துமாவுக்கு செய்ததை சொல்லுவேன்" என்ற தேவ வசனத்தையே நான் தியானித்த வண்ணமாக இருக்கின்றேன் என்று கூறினார்.

மற்றொரு சமயம் அவர் "அதிக ஒளி, அதிக தேவ அன்பின் பிரவாகம், அதிக சுயாதீனம், இந்த உலகத்தில் நான் என் கண்களை மூடுவேனானால் இனிமேல் என் கண்களை மாட்சிமை நிரம்பிய மறு உலகத்திலேயே திறப்பேன். சர்வ வல்லவரின் செட்டைகளின் நிழலில் சதா காலமும் வாழ்வது எத்தனையானதொரு பேரானந்தத்தின் காரியம்! பூலோகத்தார் யாவரும் போகிற வழியாகவே நான் போகிறேன்" என்று சொன்னார். "தேவன் கிருபை நிறைந்தவர்" என்று யாரோ ஒருவர் அவரிடம் சொன்னபோது அவர் " அப்படியில்லாதிருந்தால் அந்த ஆண்டவருக்கு முன்பாக என்னைப்போல படு பாவி எவ்வாறு நிற்க இயலும்?" என்று சொன்னார்.

அவர் மரித்த புதன் கிழமை அவரிடம் "உங்கள் மனம் கர்த்தரில் ஆறுதலாக அமரிக்கையுடன் இருக்கின்றதா?" என்று கேட்டதற்கு அவர் "என் தேவனின் தயவுள்ள சித்தத்தால் நான் நிறை பூரண திருப்தியுடையோனாய் இருக்கின்றேன்" என்று பதிலளித்தார். ஜாண் நியூட்டன் தம்முடைய மரணத்தின் கடைசி நேரம் வரை முற்றும் சுய உணர்வோடு இருந்தார். அவர் 1807 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் நாள் தன் ஆண்டவருடைய பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். அவருடைய சரீரம் 10 நாட்களுக்குப் பின்னர் செயிண்ட் மேரி உல்நாத் என்ற இடத்திலுள்ள தேவ ஆலயத்தின் கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது. அந்த ஆலயத்தில்தான் அவர் கடைசியாக தன் ஆண்டவருக்கு ஊழியம் செய்திருந்தார்.

தேவ மனிதன் ஜாண் நியூட்டனின் வாயிலிருந்து உதிர்ந்த முத்து மணிகள்.

"ஒரு பயனுள்ள பிரசங்கியாரின் வாயை அடைப்பதின் மூலம் ஆண்டவர் தம்முடைய மகிமையின் சுவிசேஷத்திற்கு ஒரு மகத்தான வாசலை திறந்து கொடுக்கின்றார் என்று சொன்னால் அது நம்முடைய அற்ப அறிவினால் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாகும். ஆம், அப்படித்தான். தேவ பக்தனாகிய ஜாண் பன்னியன் பெட்ஃபோர்ட் நகரத்து சிறைக்கூடத்தில் அடையுண்டு கிடக்காமல் அந்த நகரத்தில் பிரசங்கங்களே பண்ணிக் கொண்டிருந்திருப்பாரானால் அவர் ஆற்றியுள்ள மொத்த தேவ பணியில் பாதி கூட செய்திருக்கமாட்டார். அவரைப் பிடித்து சிறைக்கூடத்தில் போட்டதன் காரணமாகத்தான் "மோட்ச பிரயாணம்" என்ற வேத புத்தகத்திற்கு அடுத்தபடியாக கருதப்படுகின்ற பக்தி பரவச நூல் அவரால் எழுதி வெளி வந்தது."

"நான் உட்கார்ந்து வாசித்து முடிக்கக்கூடாத ஏராளமான புத்தகங்கள் என் வசம் உண்டு. உண்மையில் அவைகள் நல்ல சிறந்த பக்தி நூல்கள்தான். அவற்றில் சில வெள்ளிப் புத்தகங்கள், ஏன் சில தங்கப் புத்தகங்கள் கூடத்தான் இருக்கின்றன. ஆனால் அந்த எல்லாப் புத்தகங்களையும் விட என்னிடத்தில் மாட்சிமையானதொரு புத்தகம் உண்டு. பரிசுத்த வேதாகமம் என்ற அந்த புத்தகம் முழுவதும் பரலோக வங்கியின் விலையேறப்பெற்ற செக்குகளாக(காசோலைகளாக) உள்ளன."

"ஒரு மெய் தேவ பக்தன் மனந்திரும்பாத பாவிகளை "புத்தியற்ற குதிரைகளாக கூண்கின்றான். அந்த மக்களின் ஆஸ்தி,ஐசுவரியம்,படிப்பு, அந்தஸ்து, சமுதாய மரியாதை, வீண் டம்பம், வீராப்பு எல்லாம் அவன் கண்களுக்கு முன்பாக ஒன்றுக்கும் உதவாத வெறும் குப்பைகளாக மாத்திரம் தெரிகின்றது"

"கிறிஸ்தவ மக்களை ஈவிரக்கமின்றி சித்திரவதை செய்து கொன்ற கொடிய போப் ஆண்டவர்களைப்பற்றி நான் படித்திருக்கின்றேன். ஆனால் அவர்கள் எல்லாரிலும் கொடிய போப் ஆண்டவன் எனக்குள்ளேயே இருக்கின்றான். அவன்தான் என் "சுயம்" என்பவன்."

"சாத்தான் ஒரு கிறிஸ்தவனை பெரியதொரு பாவச் சோதனைக்குட்படுத்தி அவனை படு குழியில் தள்ளுவது என்பது மிகவும் அபூர்வமாகும். அப்படி அவன் தன் முழு பெலத்தையும் கொண்டு கிறிஸ்தவனோடு போராட வேண்டிய அவசியமில்லை. அவன் செய்வதெல்லாம் சிறிய பாவ சோதனைகளை கொடுத்து அவற்றைக் கொண்டே அந்தக் கிறிஸ்தவனை அதம் பண்ணுவதுதான். ஒரு சிறிய உதாரணம் பாருங்கள். ஒரு பெரிய பச்சையான மரத்தடியுடன் எரிந்து கொண்டிருக்கும் ஒரு மெழுகுவர்த்தியை ஒன்று சேருங்கள். கொஞ்சம் மரச்சீவல்களை அதின்மேல் போடுங்கள். தீ எரிய ஆரம்பித்ததும் கொஞ்சம் காய்ந்த சிறிய சுள்ளிகளை அதின்மேல் வையுங்கள். அதின்பின்னர் சற்று பெரிய மரக்குச்சிகளைப் பரப்புங்கள். சற்று நேரத்தில் அந்த பெரிய பச்சை மரத்தடி தீயில் வெந்து சாம்பலாகிப் போய்விடும். சாத்தானாம் பிசாசும் கிறிஸ்தவனுக்கு அதைத்தான் செய்கின்றான்."

"ஒரு கஞ்சன் ஆண்டவரிடத்தில் தனக்குப் பொன் வேண்டுமென்று மனதுருகி மன்றாடி நிற்கின்றான். அவன் விசுவாசிக்கும் பட்சத்தில் அந்தப் பொன் அவனுக்குக் கிடைக்கத்தான் செய்கின்றது. ஆனால், தேவன் அந்தக் கஞ்சனுக்கு ஒரு பெரிய தயை செய்ய நினைப்பாரானால் அவர் அவனுக்குச் செய்யும் முதலாவது காரியம் அவனுடைய பொன்னை அவனுடைய கரங்களிலிருந்து தட்டிப்பறிப்பதுதான். ஒரு குழந்தை தனது தந்தையுடன் வசந்த காலத்திலே ஒரு தோட்டத்தின் உள்ளே செல்லுகின்றது. அதின் கண்களிலே செரி பழங்கள் தென்படுகின்றன. அவை சுவை மிகுந்த பழங்கள் என்பது அதற்குத் தெரியுமாதலால் தந்தையிடம் அவற்றைப் பறித்து தரும்படியாகக் கேட்கின்றது. "இல்லை, என் அன்புக் குழந்தாய், அவைகள் இன்னும் கனிந்து பழுக்கவில்லை. உன் பார்வைக்குத்தான்

அவைகள் பழங்களைப் போலத் தெரிகின்றன. அதினுடைய பருவ காலம் வரைக்கும் நீ பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்" என்று தந்தை கூறுகின்றார். மெய்தான், ஆண்டவருக்குத் தம்முடைய பிள்ளைகளுக்கு எதை எந்த நேரத்தில் கொடுக்க வேண்டும் என்று நன்கு தெரியும்."

"தேவ ஊழியனே, உன் இருதயத்தையும், உன் நெஞ்சின் நோக்கங்களையும் நன்கு பரிசோதித்துப் பார். எல்லா எண்ணங்களையும், எண்ணங்களின் தோற்றங்களையும் கூட ஆராய்ந்து அறிகின்ற தேவனிடத்தில் "ஐயா, நான் உம்முடைய பரிசுத்த ஊழியத்தை உலகத்தின் எந்த ஒரு இழிவான ஆதாயத்தின் பொருட்டாக செய்யாமல், உத்தமமான உள்ளத்தோடும், என் நல் மீட்பர் இயேசு ராஜாவின் ராஜ்யம் பூமி எங்கும் பரவ வேண்டுமென்ற ஒரே தாழ்மையான ஏக்கத்தின் பெரு மூச்சோடு மாத்திரமே எடுத்துச் செய்கின்றேன்" என்று சொல்லக் கூடுமா? ஆம். அதற்காகவேதான் என்று நீ தைரியமாக சொல்லுவாயானால் நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவன். நீ உன் ஆண்டவரை முற்றுமாக சார்ந்திருக்கலாம். அவர் உன்னை ஒருக்காலும் மோசம் போக்கமாட்டார். உனக்காக, உன் தேவைகளுக்காக நீ ஊற்றுகளைத் தோண்ட அவசியமே கிடையாது. உன் தேவைகளைச் சந்திக்க ஒரு ஊற்று எப்பொழுதும் பொங்கி வழிந்து ஓடிக்கொண்ட இருக்கின்றது. உனக்குத் தேவையான போதெல்லாம் நீ அதினிடத்திற்குச் சென்று அதிலிருந்து மொண்டு எடுத்துக்கொண்டு வரவேண்டியதுதான்."

John Newton had composed his own epitaph and requested that this and nothing else should be carved on a plain marble tablet; there was to be no other monument :

JOHN NEWTON
CLERK
ONCE AN INFIDEL AND LIBERTINE,
A SERVANT OF SLAVES IN AFRICA,
WAS
BY THE RICH MERCY OF OUR LORD AND SAVIOUR
JESUS CHRIST
PRESERVED, RESTORED, PARDONED,
AND APPOINTED TO PREACH THE FAITH
HE HAD LONG LABOURED TO DESTROY.

"எனக்கோ தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்" (சங் 73:28)
"தேவனை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்" (சங் 2:12)

கர்த்தருக்குள் எனக்கு மிகவும் பிரியமானவர்களே,

"உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உனது வலது கையைப்பிடித்து பயப்படாதே, நான் உனக்கு துணை நிற்கிறேன்" என்று திருவுளம் பற்றிய நம் சர்வ வல்ல கர்த்தரின் பரிசுத்தமும், வல்லமையுமுள்ள நாமத்தில் நான் உங்களை வாழ்த்துகின்றேன்.

ஆண்டவரின் அளவற்ற அன்பின் கிருபையால் சகோதரன் நார்ட்டன் அவர்களும், நானும் தேவ ஊழியத்தின் பாதையில் வடக்கே சென்றுவிட்டு சுகமாக இங்கு திரும்பி வந்து சேர்ந்தோம். நேச இரட்சகரின் இரக்க கிருபையாலும், தேவ பிள்ளைகளாகிய உங்களுடைய உருக்கமான ஜெபங்களின் காரணமாகவும் ஊழியங்கள் ஆசீர்வாதமாக இருந்தன. கடந்த ஆண்டுகளில் நாங்கள் சென்றிருந்த இடங்களுக்கும், வேறு சில புதிய இடங்களுக்கும் நாங்கள் சென்று வந்தோம். எங்களுடைய ஊழியத்தின் பெரும்பாலான நாட்கள் இமயமலைகளில் செலவிடப்பட்டன. கொஞ்ச நாட்களை ராஜஸ்தான் மாநிலத்தில் ஊழியத்தின் பாதையில் செலவிட்டுவிட்டு இங்கு வந்து சேர்ந்தோம்.

இந்த கடினமான தேவ ஊழியத்தை வடக்கே செய்து வரும் எங்களுடைய கிரீடங்களில் நிறைய முத்துக்களை தேவன் தருவார் என்று ஒரு பரிசுத்த தேவ மகள் அன்பாக எழுதியிருந்தார்கள். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக. யாருடைய கிரீடங்களில் நிறைய முத்துக்கள் இருக்கும் என்பதை அவர்கள் சரியாக நிதானிக்கவில்லை என்றே நான் கருதுகின்றேன்.. கர்த்தருடைய உள்ளத்துக்கு உகந்த இந்த ஊழியங்களை நாங்கள் செய்து வரும்படியாக எங்களுக்கு பொருளாதார உதவிகளை அளித்து எங்களை வடக்கே அனுப்பி வைத்தும், எங்களுடைய ஊழியங்களுக்காக பாரத்தோடு ஜெபித்து வரும் உங்களுடைய கிரீடங்களில்தான் நிறைய முத்துக்கள் இருக்கும். நாங்கள் உங்கள் பணி ஆட்கள் மாத்திரமே. இன்னும் தெளிவாக சொல்ல வேண்டுமானால் நாங்கள் உங்கள் வேலையாட்கள் மட்டுமே. எங்களுடைய வடமாநில தேவ ஊழியம் குறித்து நம் அருமை இரட்சகரின் பாஷையில் சொல்ல

வேண்டுமானால் " நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம்" (லூக் 17:10)

எங்களுடைய கிரீடங்களில் முத்துக்களையோ, மாணிக்கக்கற்களையோ நாங்கள் எதிர்நோக்கி இந்த தேவ ஊழியங்களைச் செய்யவில்லை. பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து எங்களை தமது ஆணி கடாவுண்ட அன்பின் கரங்களால் தூக்கி எடுத்து, எங்களது பாவங்களற எங்களைத் தமது கல்வாரியின் இரத்தத்தால் கழுவி சுத்திகரித்து, தமது நித்திய பரலோக வாழ்விற்கு எங்களை சுதந்திரவாளிகளாக்கின எங்கள் அன்பு நேசருக்கு நாங்கள் எங்கள் அற்பமான அன்பை வெளிப்படுத்தவும், பாவிகளை இரட்சிக்க உலகுக்கு வந்த இன்றும் ஜீவிக்கின்ற மெய்யான தேவன் இயேசு இரட்சகர் ஒருவர் மாத்திரமே என்பதை பாவ இருளில் ஜீவிக்கின்ற மக்களுக்கு அறிவிக்கவே இந்த தேவ ஊழியங்களை மிகுந்த பாடுகள், கஷ்டங்களுக்கு மத்தியில் எங்களை பலிபீடத்தில் சமர்ப்பித்துச் செய்து வருகின்றோம். "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை. அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ" (1 கொரி 9:16)

இந்த இதழ் உங்களுடைய கரங்களில் கிடைக்கும்போது நீங்கள் 2002 ஆம் ஆண்டுக்குள் நன்கு கடந்து சென்றிருப்பீர்களாதலால் உங்கள் எல்லாருக்கும் எனது புது வருட வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். இந்த புதிய ஆண்டு நீங்கள் உங்கள் சாரோனின் ரோஜாவாம் அருமை நேசரோடு மிகவும் நெருக்கமாக ஜீவித்த ஜெப ஆண்டாக இருக்கவும் உங்களுக்கும், உங்களுடைய குடும்பத்தின் அன்பான மக்கள் யாவருக்கும் ஆசீர்வாதமும், தேவ சமாதானமும் நிறைந்த மனமகிழ்ச்சியின் வருடமாக இருக்க பரலோக தகப்பன் கிருபை செய்வாராக. "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்"(மத் 28:20) என்று திருவுளம்பற்றிய நம் அருமை நேசர் இந்த ஆண்டு முழுவதும் உங்களோடிருந்து உங்களை தமது ஜீவ பாதையிலே வழி நடத்திச் செல்லுவாராக.

கிறிஸ்தவ வாழ்வின் ஆசீர்வாதத்திற்கும், வெற்றிக்கும் காரணம் நாம் நம் ஆண்டவரோடு எப்பொழுதும் நெருங்கி ஜீவித்தலாகும். " என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" (யோ 15:4) என்றார் அருமை இரட்சகர். " நீங்கள் கர்த்தரோடிருந்தால் அவர்

உங்களோடிருப்பார்"(2 நாளா 15:2) என்றார் தீர்க்கன். "எனக்கோ தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்"(சங் 73:28) என்று தாவீது ராஜா சொல்லுவார். மெய்தான், ஆண்டவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்தான்(சங் 2:12) இந்த நிலையில்லா பாழுலகில் ஆண்டவர் இயேசுவை அண்டி நெருங்கி ஜீவிப்போர் அடையக்கூடிய அளவற்ற ஆசீர்வாதம் குறித்து மூன்று குறிப்புகளை நான் உங்களுக்கு முன்பாக வைக்கின்றேன். கர்த்தர் தாமே அதை உங்களுக்கு ஆசீர்வதித்துத் தருவாராக.

இருள் சூழ்ந்த பாவ உலகில்
தேவ சமாதானத்தோடு வாழ தேவனை
அண்டிக்கொள்ளுங்கள்.

"மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக"(2 தீமோத்தேயு 3:1) என்று பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு எழுதினார். உலகம் தோன்றிய நாள் முதல் நாம் கேட்டிராததும், பார்த்திராததுமான கொடிய நிகழ்ச்சிகளை நாம் நமது கண்கூடாக கண்டு கொண்டு இருக்கின்றோம். கடந்த ஆண்டான 2001 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதி கிறிஸ்தவ நாடான அமெரிக்க தேசத்திலே நடந்த பயங்கரத்தை நீங்கள் நன்கு அறிந்திருக்கின்றீர்கள். கொடிய பயங்கரவாதிகள் அமெரிக்க நாட்டு பயணிகள் விமானத்தைக்கடத்தி அங்குள்ள 110 மாடிக் கட்டிடமான உலக வர்த்தக மையத்தில் மோதவிட்டு அதைத் தகர்த்து தூளாக்கினார்கள். ஒரு மணி நேரத்திற்குள் அந்த பிரமாண்டமான கட்டிடம் முற்றும் நொறுங்கி அழிந்துபோனதுடன் அதிலிருந்த 4000 மக்களும் மடிந்து போனார்கள். அந்த ஒரு மணி நேர அழிவில் அமெரிக்கா அடைந்த நஷ்டம் 4,27,500 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் டிசம்பர் மாதம் 13 ஆம் நாள் ஆயுதம் ஏந்திய தற்கொலைப் படையினர் நமது இந்திய தேசத்தின் பாராளுமன்றத்துக்குள் தீடீரென நுழைந்து சுட்டனர். அதில் நமது பாதுகாப்பு வீரர்கள் பலர் மடிந்தனர். தெய்வாதீனமாக அந்தக் கொடியவர்கள் நமது தேச பிரதமர், மந்திரிகள், மற்றும் அரசியல் தலைவர்களை சுட்டுக்கொல்லாதவாறு கர்த்தர் பாதுகாத்துக்கொண்டார். நமது கிறிஸ்தவ மிஷனரிகளை அக்கினியால் சுட்டெரித்து, நமது தேவ ஊழியர்களை கொலை செய்து, நமது ஆண்டவருடைய ஊழியங்களுக்கு இன்றுவரை தீங்கு செய்து கொண்டிருக்கும் மக்களுக்கு எதிராக மேற்கண்ட அரசியல் தலைவர்கள் எந்த ஒரு நீதியும் சரிக்கட்டாமல் மிகுந்த

அமைதியாக இருக்கின்ற போதினும் மன உருக்கம் நிறைந்த கர்த்தருடைய பார்வையில் டிசம்பர் மாதம் 13 ஆம் நாள் அவர்களுடைய ஜீவன் அருமையாக எண்ணப்பட்டு அவர்கள் அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டனர்.

நாள்தோறும் நமது தேசத்தில் குறிப்பாக காஷ்மீர் மாநிலத்தில் பயங்கரவாதிகள் அப்பாவி மக்களை கொன்று குவித்தவண்ணமாக உள்ளனர். செய்தி தாட்களை திறந்தால் அவை முழுவதும் கொலை,கொள்ளை,கற்பளிப்பு, அரசியல்வாதிகளின் பல கோடி ஊழல்களால் நிறைந்து காணப்படுகின்றது. தேவ பயமும், மனுஷ பயமும் முற்றும்அற்றுப்போன மனச்சாட்சியற்ற மனிதன் இன்று செய்யும் காரியங்கள் நமது இரத்தத்தை உறைய வைப்பதாக இருக்கின்றது. கடந்த ஆண்டின் கடைசிப்பகுதியில் தமிழ்நாட்டில் ஒரு அண்ணனும்,தம்பியுமான இரட்டையர்கள் 1000 பெண் மக்களின் கற்பை சூறையாடி வீடியோ படங்கள் எடுத்து அவைகளை இணைய தளங்களில் பதிவுசெய்து விற்பனை செய்து அநேக கோடிப்பணங்களை இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் விற்பனை செய்து பெற்ற செய்தியை நாம் துயரத்தோடு வாசித்தோம்.

நமது தேசத்தின் ஜனத்தொகை 100 கோடியை தாண்டிச் சென்றுவிட்டது. படித்துப்பட்டம் பெற்று வேலை வாய்ப்புகளை கண்ணீரோடு எதிர்நோக்கிக் காத்திருக்கும் மக்களின் எண்ணிக்கை பல கோடிகளாகும். நமது தமிழ் நாட்டிலேயே வேலைகளுக்காக 12 லட்சம் மக்கள் அரசாங்கத்தில் பதிவுசெய்து காத்திருக்கின்றனர். தற்பொழுது வேலையிலிருக்கும் மக்களின் வேலைகளையே தட்டிப்பறித்து வீட்டுக்கு அனுப்பத் துடிதுடித்துக் காத்துக்கொண்டிருக்கும் நமது அரசாங்கம், இந்த மக்களுக்கு எங்கேயிருந்து வேலை கொடுக்கப்போகின்றது? ஒவ்வொரு தனிப்பட்ட அரசியல் வாதியும் (எல்லாரும் அல்ல)மக்களின் வரிப்பணங்களை பல கோடிகளுக்கு வஞ்சித்து ஊழல் செய்து எடுக்க உபாய தந்திரங்களை எண்ணிக்கொண்டிருக்கும் வேளையில் மக்களுக்கு வேலைகள் எங்கிருந்து கிடைக்கும்? கர்த்தர்தான் ஏழை மக்களுக்கு இரக்கம் செய்ய வேண்டும்.

கணவனும், மனைவியும் வங்கியில் வேலை செய்யும் அலுவலர்கள். அன்றைய தினம் அவர்களுடைய சிறிய மகனுக்குக் காய்ச்சல். பள்ளியில் படிக்கும் அந்த மகனை வீட்டில் படுக்கையில் வைத்துவிட்டு வேலைக்குச்

சென்றுவிடுகின்றனர். அதை கவனித்த திருடர்கள் வீட்டிற்கு வந்து நகை நட்டுகள் எல்லாவற்றையும் கொள்ளையடித்து எடுத்துக்கொண்டு சுகயீனமாக படுக்கையிலிருந்த மகன் மூலமாக தங்களுக்கு எதிராக எவ்வித சாட்சியும் இல்லாமலிருக்க அந்த அப்பாவி பாலகனை படுக்கையிலேயே கொலை செய்து போட்டுவிட்டு துணிச்சலாகச் செல்லுகின்றனர். எத்தனை கொடூர நீசத்தனம் பாருங்கள்!

வீட்டில் தனித்திருக்கும் பெண்ணிடம் கொள்ளையர்கள் செல்லுகின்றனர். வீட்டிலிருந்த பொன்,வெள்ளி, பணங்களை எல்லாம் கொள்ளையடித்து எடுத்துக்கொண்ட பின்னர் அந்த பெண்ணின் காது கழுத்திலிருந்தவைகள் எல்லாவற்றையும் வலுக்கட்டாயமாக பிடுங்கி எடுக்கின்றனர். பெண்ணின் கையிலிருந்த தங்க காப்பு ஒன்றை எடுக்க இயலவில்லை. கொள்ளையர்களில் ஒருவன் அவளின் அந்த கரத்தை வெட்டி அதை எடுக்க அரிவாளை ஓங்குகையில் அந்தப் பெண் கண்ணீர்விட்டு கதறி அழுது அந்தக்கொள்ளையனை இரு கரங்களால் கும்பிட்டு "ஐயா, எனது கரத்தை வெட்ட வேண்டாம். கையில் சோப்பு போட்டு ஒரு நொடிப்பொழுதில் அதை நான் எடுத்துத் தருகின்றேன்" என்று கெஞ்சியபோது "அதுவரை எங்களால் காத்திருக்க இயலாது" என்று கூறி அவளின் கரத்தை வெட்டி துண்டாக்கி காப்பை எடுத்துச் சென்றதை செய்தி தாளில் நாம் பார்த்தோம். நமது தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு நடந்த உண்மை சம்பவம்.

எத்தனையோ காரியங்களை தொடர்ந்து எழுதிக்கொண்டு செல்லலாம். அவை எல்லாம் நம்மை இரத்தக் கண்ணீர் வடிய வைக்கும். அவை எல்லாம் உங்களுக்கு தெரியாதவைகள் அல்ல. மெய்யாகவே, நாம் காலத்தின் கடைசியில் கொடிய நாட்களில் இருக்கின்றோம். பாவ இருள் சூழ்ந்த உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எங்கும் காரிருள் மூடியிருக்கின்றது.

நீதி,நியாயம்,உண்மை எல்லாம் நமது சமுதாயத்திலிருந்து தங்களது செட்டைகளை அடித்துப்பறந்து போய்விட்டது. "ஐயோ, நான் நீதியை எங்கு பெற்றுக்கொள்ளுவேன்?" என்று ஒரு முதியவரான அரசியல் தலைவர் சமீபத்தில் கூறி பெருமூச்சுவிட்டார். அது இனி இந்த உலகத்தில் கிடைப்பதற்கில்லை. வரப்போகும் ஆண்டவர் இயேசுவின் ஆயிர வருட அரசாட்சியில்தான் அதை நாம் காண இயலும். "நீதி,சமாதானம் நிறைந்தே இருக்கும் ஜோதியின் ஆழுகையில்" என்று அதை பக்தன் பாடுவார்.

இதை கருத்தோடு வாசிக்கும் தேவ மக்களே, பாவ இருள் சூழ்ந்த இந்த உலகத்தில் நீங்கள் மிகுந்த தேவ சமாதானத்தோடு வாழ ஆண்டவர் இயேசுவை அண்டிக்கொள்ளுங்கள்."கர்த்தரின் நாமம் பலத்த துருகம். நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்"(நீதி 18:10) என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. நம்மைச்சூழ அநியாயங்களும், அக்கிரமங்களும், கொடுமைகளும், வஞ்சகங்களும், பேய்த்தனங்களும் தலை விரித்தாடினாலும், அவை எல்லாம் நம்மை அப்படியே எடுத்து விழுங்கி ஏப்பமிட்டுவிடுவதைப்போன்று சீறிப்பாய்ந்தாலும் தேவன் நமக்கு அடைக்கலமும்,பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையாக இருக்கின்றார். ''அவர் காற்றுக்கு ஒதுக்காகவும், பெரு வெள்ளத்துக்குப் புகலிடமாகவும், வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்களாகவும், விடாய்த்த பூமிக்கு பெருங்கன்மலையின் நிழலாகவும்"(ஏசாயா 32:2) நமக்கு இருக்கின்றார்.

தேவ ஊழியத்தின் பாதையில் நான் இமயமலைகளுக்குச் சென்றிருந்த ஒரு சமயம் இமயத்தின் அடிவாரத்திலுள்ள ரிசிகேசத்தில் கங்கை நதியின் கிளைக்கால்வாய் ஒன்றுக்கு மேலாக கட்டப்பட்டிருந்த ஒரு சிறிய பாலத்தின் கீழாக கங்கை நதி அலைமோதி, நுரைதள்ளி சத்தமிட்டுக்கொண்டு ஓடுவதை நான் கவனித்தேன். அதை நான் பார்த்துக்கொண்டிருந்த வேளையில் அந்த பாலத்தின் உட்புறமான மேற்கூரை விளிம்புகளில் மாடப் புறாக்கள் கூடுகட்டி தங்கள் கூடுகளில் தங்கள் குஞ்சுகளுடன் எந்த ஒரு பயமும்,சலனமும் இல்லாமல் மிகுந்த அமைதியாக படுத்திருப்பதை நான் கண்டு ஆச்சரியமுற்றேன். கங்கை நதி மோதி அடிக்கும் தண்ணீரும், நுரைகளும் புறாக்கள் கூடுகட்டியுள்ள இடம் வரை சென்ற போதினும் அவைகள் எதற்கும் அஞ்சாமல் தண்ணீரைப் பார்த்தவாறே படுத்திருப்பதை நான் கவனித்தேன்.

ஆண்டவர் இயேசுவை அண்டிக்கொண்ட யாவருடைய வாழ்வும் அந்தப்புறாக்களின் சமாதான வாழ்வுதான். ஏரோது ராஜா பேதுரு அப்போஸ்தலனை பட்டயத்தால் கொலைசெய்ய வெகு நிச்சயமாக தீர்மானித்தவனாக 16 போர்ச்சேவகர்களின் பாதுகாவலில் வைத்து பஸ்காபண்டிகைக்கு பின்பு அவரை கொலை செய்ய நிச்சயித்திருந்தான். இரவிலே ஒரு சங்கிலியால் அல்ல, இரண்டு சங்கிலிகளால் கட்டுண்டவராக, வலது இடது பக்கங்களில் இரண்டு போர்ச்சேவகர்கள் படுத்திருக்க மத்தியில் பேதுரு படுத்திருக்கின்றார். வெகு நிச்சயமான மரணம் தனக்கு முன்பாக இருக்கின்றது. அதுவும் கூர்மையான வாளால்

வெட்டிவீழ்த்தப்படும் கொடிய மரணம். எனினும், அப்போஸ்தலன் எதற்கும் அஞ்சாதவராக மிகுந்த தேவ சமாதானத்தோடு ஆழ்ந்த நித்திரை செய்கின்றார். எந்த ஒரு புலப்பமும்,கலக்கமும்,தடுமாற்றமும் இல்லாமல் குரட்டை போட்டுத் தூங்குகின்றார். அவருடைய குரட்டையின் சத்தத்தால் அவரை காவல் காத்த வலது இடது ப்க்க இரண்டு போர்ச்சேவகர்களின் நித்திரை நன்கு கலைந்து போயிருப்பதுடன் அவர்கள் மிகவும் ஆச்சரியமும்பட்டுப்போயிருப்பார்கள். ஆம், அத்தனையாதொரு ஆழ்ந்த இளைப்பாறுதல்!. பரத்திலிருந்து கிடைத்த தூக்கம் அல்லவா அது! தேவ தூதன் கூட அவரை விலாவிலே பலமாக த ட்டித்தான் எழுப்ப வேண்டியதானது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.தேவ மக்களுக்கு கிடைத்த ஒரு பரம சிலாக்கியம் அது(சங் 4:8, சங் 127:3)

கர்த்தர் இயேசுவை எப்பொழுதும் அண்டி ஜீவிப்போர், மரியாளைப்போல ஆண்டவரின் பொற்பாதங்களில் சதா தரித்திருப்போர், ஏனோக்கைப் போல தேவனுடன் சஞ்சரித்துக்கொண்டிருப்போர் எவராயினும் அவர்கள் பாவ இருள் சூழ்ந்த இந்த உலகத்தின் பாடு துயரங்களாகிய தண்ணீர்கள், ஆறுகள், அக்கினி ஊடாக கடந்து சென்றாலும்(ஏசா 43:2) பூரண தேவ சமாதானத்தோடு அவர்கள் அதை கடந்து செல்லுவார்கள்.

கொடிய விருத்தாப்பியத்தை தைரியத்தோடு சந்திக்கதேவனை அண்டிக்கொள்ளுங்கள்.

"இளமை ஒரு தவறு. விருத்தாப்பியம் ஒரு துயரம்" என்று லோக ஞானி பேசுவான்.

அவனுடைய வார்த்தையின்படித்தான் உலக மக்களுடைய விருத்தாப்பியமும் இருக்கின்றது. நாங்கள் இந்த தடவை தேவ ஊழியத்தின் பாதையில் வடக்கே இமயமலைகளிலுள்ள பாகேஷ்வருக்கும் சென்றிருந்தோம். ஒரு நாள் அதின் கடை வீதியில் நாங்கள் இருந்தபோது ஒரு விருத்தாப்பியமான மனிதர் தனக்கு முன்பாக நடந்து போன தனக்குத் தெரிந்த ஒரு நடுத்தர வயதினான மனிதர் ஒருவரை தன்னுடன் பேச வரும்படியாக அழைத்தார். ஆனால் அந்த மனிதனோ அவரது வார்த்தையை அல்லத்தட்டிவிட்டு தன் வழியில் போய்விட்டான். விருத்தாப்பியமான மக்களுடன் அவர்களைவிட வயது குறைந்தவர்கள் பொதுவாக பேச விரும்புவதில்லை.

"மாதந்தோறும் நான் உனக்கு பணம் தருகின்றேன். நீ தினமும் என்னண்டை வந்து ஒரு மணி நேரம் என்னுடன் பேசிவிட்டுச் செல்" என்று ஒரு விருத்தாப்பிய மனிதர் தனக்கு இனத்தவரான ஒரு சகோதரனை அழைத்ததாக நான் கேள்விப்பட்டேன். விருத்தாப்பியத்தில் நம்மிடம் பேசக்கூட ஆட்கள் வரமாட்டார்கள்.

ஆண்டவர் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத முதிர்வயதான மக்களின் நிலை மிகவும் துயரமானதாகும். அதிலும், கணவனோ அல்லது மனைவியோ மரித்து அவர்கள் தனிமையாகிவிட்டால் அவர்களுக்கு பைத்தியமே பிடித்துவிடும். .சில மணி நேரம் செய்தி தாட்களை வாசிப்பார்கள். பின்னர் அப்படியே பார்பர் ஷாப்பிற்குச் சென்று பார்பரிடம் ஓரிரு மணி நேரங்களை செலவிட்டுவிட்டு, லாண்டரிக்குச் சென்றுஅங்கு நேரம் செலவிடுவார்கள். அதின் பின்னர் தங்கள் விருத்தாப்பிய ஒன்றிரண்டு நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு அப்படியே பேருந்து நிலையம் அல்லது ரயில் நிலையம் போய் அங்கு அரட்டை அடித்துக்கொண்டிருப்பார்கள். பின்னர், கண்கள் எரிக்கும் வரை இரவில் டி.வி. முன் உட்கார்ந்து அதைப்பார்த்துவிட்டு இரவின் பிந்திய நேரம் படுக்கைக்குச் செல்லுவார்கள். தங்களுடைய ஒவ்வொரு நாளையும் எப்படி முடித்துக்கட்டலாம் என்றுஅவர்கள் வகைதேடி சுற்றியலைவார்கள். அவர்களிடம் பேச்சிலே விழுந்தவர்கள் கரை ஏற வெகுபாடுபடுவார்கள். தேவனற்ற விருத்தாப்பியர்களின் நிலை கொடுமையாகும்.

ஆனால் ஆண்டவரை தங்கள் வாழ்வின் நாயகனாகக் கொண்ட தேவப்பிள்ளைகளின் விருத்தாப்பியம் மிகுந்த ஆசீர்வாதமாகும். வாழ்வின் அஸ்தமன காலத்தில் அவர்கள் இருப்பதால் தங்களது பரம அழைப்பு எப்பொழுது வராது என்று அவர்கள் ஆசை ஆவலோடு தினமும் காத்திருப்பார்கள். தாங்கள் தங்கள் வாழ்வில்முழுக்க முழுக்க தங்கள் இரட்சகரை அனுபவித்து, ஆனந்தித்து,குரல் கேட்டு வாழ்ந்த அவர்கள் இப்பொழுது அவரை முகமுகமாக தரிசிக்கப்போவதை நினைத்து உள்ளம் பூரிப்பார்கள். தங்கள் அன்பின் நேசருடைய உருவத்தையும், அவரது பரலோக பாக்கிய தேசத்தையும் நாளெல்லாம் கற்பனை செய்து மகிழ்ந்து கொண்டிருப்பார்கள். தங்களது நேரத்தின் ஒரு வினாடியைக்கூட அவர்கள் தேவையற்ற விதத்தில் செலவிடமாட்டார்கள். தங்களது விலையேறப்பெற்ற காலத்தைப் பாழ்க்கடிக்கப்பண்ணக்கூடிய மக்களை அவர்கள் கண்டால் விலகியோடுவார்கள். தங்களது நேரத்தையும்,

காலத்தையும் தேவனுடைய பாதங்களில் ஜெப தியானத்தில் செலவிட்டுக்கொண்டிருப்பார்கள். ஆண்டவர் இயேசுவின் சமூகம் அவர்களுக்கு இன்பமாக இருக்கும்." உம்முடைய சமூகத்தில் பரபூரண ஆனந்தமும், உமது வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு"(சங் 16:11) என்ற சங்கீதக்காரரின் பேரானந்தத்தை அவர்களும் பெற்றிருப்பார்கள். ஆண்டவர் இயேசுவை தனது ஆத்தும மணவாளராகக் கொண்ட ஒரு விருத்தாப்பிய ஐயா எனக்கு இவ்விதமாக கடிதம் எழுதியிருந் தார்கள்" சகோதரனே, எனது மனைவியின் மரணத்திற்குப்பின்னர் எனது பிள்ளைகள் தங்களோடு வந்து இருக்கும்படியாக என்னை நிர்ப்பந்தம் செய்கின்றனர். ஆனால் எனக்கோ பிள்ளைகளிடம் போய் இருக்க மனதில்லை. காரணம், இங்கு எனக்கு தனிமை வாழ்க்கை. எனது ஆண்டவரும், அவரது தேவ தூதர்களும் என்னோடு இருக்கின்றார்கள். காலை,மாலை ஜெப தியானங்கள் பேரானந்தமாக இருக்கின்றன. பிள்ளைகளிடம் போனால் ஆண்டவர் இயேசுவோடு வாழக்கூடிய தனிமை எனக்குக் கிடைக்காது. பேரப்பிள்ளைகளின் அன்புத்தொல்லைகளால் எனது இரட்சகரின் சமூக பிரசன்னத்தை நான் இழந்துபோவேன். ஆகவே, வீட்டோடு தனிமையாகவே இருந்து என் பரம தகப்பனோடு உறவாடி மகிழ்ந்து வருகின்றேன்" என்று எழுதியிருந்தார்கள்.

மெய்தான், இயேசு தகப்பனை அண்டி நெருங்கி வாழ்வோரின் விருத்தாப்பியம் ஆனந்தமாகும். அவர்கள் வீண்வார்த்தைகள் பேசி தங்கள் காலத்தை வீணாக்கமாட்டார்கள். டி.வி. பெட்டிக்கு முன்பாக நீங்கள் அவர்களை காண இயலாது. ரயில், பேருந்து நிலையங்களில் தங்கள் நண்பர்களோடு சேர்ந்து வீண்வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கமாட்டார்கள். ஆண்டவர் இயேசுவுக்கடுத்த ஊழிய காரியங்களிலும், ஜெப தியானங்களிலும்,கர்த்தரைப் பாடித் துதிப்பதிலுமே நீங்கள் அவர்களைக் காண இயலும். காலஞ் சென்ற எனது பரிசுத்த தகப்பனாரை அவர்களது விருத்தாப்பியத்தில் எந்த ஒரு மனிதரிடமும் வீண் வார்த்தைகள் பேசி தனது காலத்தை வீணடித்ததை நான் காணவே இல்லை. யாரும் அவர்களிடம் வலியவந்து வீண்வார்த்தைகள் பேசினாலும் அதை அவர்கள் தனது காதுகளில் கூட எடுத்துக்கொள்ளமாட்டார்கள். தனது பூமிக்குரிய வாழ்வின் கடைசி நாட்கள் யாவையும் தனது ஆண்டவருடைய பரிசுத்த பாதங்களில் மாத்திரமே அவர்கள் செலவிட்டார்கள். இரவும் பகலும் நேச இரட்சகரின் பாதங்களே அவர்களின் வாஞ்சையும், கதறுதலுமாக இருந்தது.

ஓ, நான் இப்பொழுது உலகத்தை அனுபவிக்கும் வாலிபன். எனக்கும்,முதுமைக்கும் வெகு தூரம் உண்டு. அதைக்குறித்து இப்பொழுது கவலை கொள்ள அவசியம் இல்லை, விருத்தாப்பியம் வரும்போது அதை பார்த்துக்கொள்ளலாம் என்று இறுமாப்பாக இருக்க வேண்டாம். மனிதனின் வாழ்நாட் காலம் "நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது" என்றும், "அஞ்சற்காரர் ஓட்டத்திலும் தீவிரமாயிருக்கிறது" என்றும் "வேகமாய் ஓடுகிற கப்பல்களைப்போலவும்" "இரையின் மேல் பாய்கிற கழுகைப்போலவும்" இருக்கின்றது என்று கர்த்தருடைய தாசனாகிய யோபு சொல்லுவார். காலங்கள் வெகு வேகமாக பறந்தோடிக்கொண்டிருக்கின்றது. நீங்கள் நினைப்பதற்கும் முன்பாகவே முதுமை வந்து உங்கள் கதவைத்தட்டிக்கொண்டு நிற்கும். உலகத்தாரால் உக்கிரமாகையாக வெறுத்துத்தள்ளும் கொடிய விருத்தாப்பியத்தை மிகுந்த களிகூருதலோடு சந்திக்க இரட்சகர் இயேசுவை இன்றே அண்டிக்கொள்ளுங்கள். தங்கள் உள்ளங்களில் கர்த்தர் இயேசு இல்லாத காரணத்தால் வயதான மக்கள் "எங்கே ஓடுவேன்? பாதகன் ஆனேன்" என்று புலம்பிக்கொண்டிருக்கின்றனர். தங்கள் நிர்ப்பந்தமான வாழ்வை எண்ணி ஓலமிடுகின்றனர். வயதின் காரணமாக பெற்ற பிள்ளைகளும், இனஜன பெந்துக்களும் அவர்களை வெறுத்து ஒதுக்குகின்றனர். ஒளிர்விட்ட அவர்களின் இளமைக்காலத்தில் ஆண்டவராகிய தம்மை அண்டிக்கொள்ளும்படியாக கூவி கூவி அழைத்த தங்கள் அன்பு நேசரை தங்கள் வாழ்வின் எல்லையிலிருந்து அன்று துரத்தியடித்து விரட்டிவிட்ட காரணத்தால் ஆண்டவரும் இப்பொழுது அவர்களைவிட்டுக்கடந்து சென்றுவிட்டார். ஓ, எத்தனை பரிதாபகரமான நிலை பாருங்கள்!

நித்திய இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்ள தேவனை அண்டிக்கொள்ளுங்கள்.

தேவனாகிய கர்த்தர் வானம், பூமி யாவற்றையும் ஆறு நாட்களில் சிருஷ்டித்து முடித்த பின்னர் ஏழாம் நாளில் அவர் ஓய்ந்திருந்தார். சிருஷ்டி கர்த்தாவுக்கும் ஓய்வு தேவைப்பட்டிருக்கின்றது. அந்த ஆறு நாட்களும் அவர் தமது பரலோக ஞானத்தை அத்தனையாகப்பயன்படுத்தியிருந்தார். மூன்று பங்கு சமுத்திர ஜலம் ஒரு பங்கு பூமியை மூடிப்போடாதிருக்க கடவாதிருக்கும் எல்லையை நியமித்தது அவர் ஞானம் அல்லவா! வண்ணத்துப்பூச்சிகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வித்தியாசமான நிறத்தையும்,வடிவமைப்பையும் கொடுத்து மலர்களில் பறக்கவிட்டது

அவரது ஞானம் தானே! அப்படியே வான வீதியிலே சிறகடித்து பறந்து செல்லும் பறவைகளுக்கெல்லாம் வித்தியாசமான அழகையும், வித்தியாசமான உடலமைப்பையும், வித்தியாசமான குரலையும் கொடுத்தது அவரது அனந்த ஞானம் அல்லவா! ஒவ்வொரு மலருக்கும் ஒவ்வொரு வாசனை, அதற்கேற்ற ஒவ்வொரு அழகான நிறம், இதழ்களின் சிறப்பான அமைப்பு. மனிதன் விரும்பி சாப்பிடும் வகையில் எத்தனையோ கனி வகைகள். ஒவ்வொரு பழத்திற்கும் ஒவ்வொரு மதுர வாசனை. ஒவ்வொரு பழத்திற்கும் ஒவ்வொரு இனிய சுவை. மனிதன் ஓய்வு எடுத்து இளைப்பாறும் நிழல் மரங்களின் கிளைகளை பக்கவாட்டில் விரிந்து வியாபித்து படரச்செய்த தேவன் அவனது வீட்டு உபயோகத்திற்கு பயன்படும் பொருட்களை செய்யக்கூடிய வைரம் பாய்ந்த மரங்களான கேதுரு, தேக்கு போன்ற மரங்களை பக்கவாட்டுக் கிளைகளின்றி வானளாவ வளர வைத்துள்ள ஆண்டவரின் அனந்த ஞானத்தை என்னவென்று சொல்லுவது! சிறிய வானம்பாடிப் பறவையின் தொண்டையில் விதவிதமான மெட்டுகளுடன் இனிமையாகப் பாடும் குரலைக் கொடுத்த சர்வ வல்லவர் அதைவிட பன்மடங்கு பெரிய காகத்தின் தொண்டையில் கா—கா— என்ற இரண்டே வார்த்தைகளுடன் தனது பாடலை நிறுத்திக்கொள்ள கற்பித்ததும் அவரது ஞானம்தான்! நமது உள்ளங்கையினுள் மறைத்து வைத்துக்கொள்ளும் அளவிற்கு அத்தனை சிறியதான தேன்சிட்டு பறவை கூட கூடுகட்டி தனது குஞ்சுகளுடன் இன்பமாக வாழும்போது காகத்தைப்போன்ற அத்தனை பெரிய குயில் பறவை திருட்டளவாக காகத்தின் கூட்டில் முட்டையிட்டுவிட்டு பறந்தோடிச்சென்றுவிட அனமதித்த சர்வவல்லவரின் ஞானம் என்னவோ! அந்த ஞானமுள்ள தேவன் குயில் பறவைக்கு குஞ்சுகளுடன் கூடிய குடும்ப வாழ்க்கையை கொடுக்காதது எதற்காகவோ! சின்னஞ்சிறிய தூக்கணாங் குருவி க்கு அத்தனை பெரிய அழகான கூட்டை தனது சிறிய அலகால் சித்திரத்தையாடையைப்போல பின்னி வாழ கற்றுக்கொடுத்த தேவன், சில சிறிய குச்சுகளில் பாதுகாப்பற்ற கூட்டை கட்டிக்கொள்ள புறாவுக்கு அனுமதி அளித்த அவரது ஞானத்தை நம்மால் புரிந்துகொள்ள இயலவில்லை!

பூனை, எலி, சிறிய பூச்சிகளுக்குக் கூட இரவில் நன்றாக பார்க்கக் கூடிய கண் பார்வையைக் கொடுத்த தேவன் தமது சாயலாக படைத்த மனிதனுக்கு இரவின் இருளில் காணக்கூடிய பார்வையை கொடுக்காமல் தமது அனந்த ஞானத்தை வெளிப்படுத்தினார். மனிதன் இரவிலும்

பகலைப்போல பார்க்கக்கூடியவனாக படைக்கப்பட்டிருந்தால் அவனது அக்கிரமம் பூமியிலே பெருகிப்போகும் என்பது அந்த ஞானமுள்ள தேவனுக்குத் தெரிந்திருந்தது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு சாயல், ஒவ்வொரு குரல், ஒவ்வொரு குணாதிசயம் உள்ளது. ஒவ்வொரு மனிதனின் கரங்களின் ரேகைக் கோடுகள், மண்டை ஓட்டை பொருத்தியிருக்கும் வகை அவன் ஒருவனுக்கே உரியதானது. அவனைப்போல உலகில் வேறு யாருக்கும் கிடையாது. இனி பிறக்கக்கூடியவர்களுக்கும் அது கிடைக்கப்போவதில்லை. ஆண்டவருடைய எல்லையற்ற ஞானத்தை என்னவென்று சொல்லுவது! நமது தலைக்கு மேலிருக்கும் வானமண்டலத்தை யாரால் அறியக்கூடும்? சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்,பால் வெளி வீதிகள், கோளங்கள் யாவையும் தேவன் படைத்திருக்கும் விதங்களையும், அவைகளின் இயக்கங்களையும் முற்றுமாக யாரால் அறியக்கூடும்? "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது"(சங் 19:1) என்று சங்கீதக்காரன் சொல்லுவார். "வானங்களை ஞானமாய் உண்டாக்கினவரை துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது"(சங் 136:5) என்று நாம் வானத்தை அண்ணாந்து பார்த்து தேவனைத்துதிக்கும்படியாக சங்கீதக்காரன் நம்மை ஏவி எழுப்பிவிடுவார். அத்துடன் " கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவை எல்லாவற்றையும் ஞானமாய் படைத்தீர்" (சங் 104:24) என்பதாய் கூறுவார்.

வானம் பூமியை இத்தனை ஞானமாக ஆறு நாட்களுக்குள் படைத்த தேவனுக்கு இளைப்பாறுதல் தேவைப்பட்டது. அப்படியே அவர் ஏழாம் நாள் ஓய்ந்திருந்து அந்த நாளை ஆசீர்வதித்தார்(ஆதி 2:3) அவ்வாறே, தான் படைத்த மனிதனும் ஆறு நாட்கள் வேலைக்குப்பின்னர் ஏழாம் நாள் கட்டாயம் ஓய்ந்திருக்கும்படியாக தேவன் விரும்பி அதை தமது கட்டளைகளில் ஒன்றாகக் கொடுத்தார். அந்த நாளில் அவனது மிருக ஜீவன் கூட அவனுடனே கூட இளைப்பாற வேண்டும்(யாத் 20:10) என்று தேவன் விரும்பினார். பகலின் 12 மணி நேர வேலைக்குப்பின்னர் மனிதனின் சரீரம் ஓய்வை விரும்புகின்றது. மாலைப்பொழுதாகி இரவு நேரம் வர வர அவன் எப்பொழுது தூங்கி இளைப்பாறலாம் என்று பெரிதும் விரும்புகின்றான். அவனது தூக்கத்திற்கு வசதியாக தேவன் இருளை கட்டளையிட்டிருக்கின்றார். நாம் நித்திரைக்குச் சென்றதும் நமது அறையின் விளக்குகளை எல்லாம் அணைத்துவிடுகின்றோம் அல்லவா?

மனிதனுடைய இளைப்பாறுதலில் தேவன் எத்தனை கரிசனையாக இருக்கின்றார் பாருங்கள்.

அரசு அலுவல்களில் இருக்கும் மக்கள் ஆண்டுக்கு ஒரு தடவை லீவு எடுத்துக்கொண்டு தங்கள் மனைவி மக்களுடன் அழகான வெளியிடங்களுக்குச் சுற்றுலா சென்று இடங்களை கண்டு களித்து, மனங் குளிர பேசி சிரித்து மகிழ்ந்து, விதவிதமான உணவுகளை உண்டு நன்றாக ஓய்வு எடுத்துஆனந்தித்து மகிழ்கின்றனர். இதில் நமது நாட்டின் வங்காள மக்கள் பிரசித்தமானவர்கள். அவர்கள் ஆண்டுதோறும் தசரா காலத்தில் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சுற்றுலாவில் செல்லுகின்றனர். இமயமலைகளின் கடையாந்தரப் பகுதிகளுக்கும் கூட அவர்கள் வந்துவிடுகின்றனர். அதற்காகவே அவர்கள் தங்கள் சம்பளத்தில் மாதந்தோறும் ஒரு பகுதியை எடுத்து ஒதுக்கி வைப்பதாகக் கூறுகின்றனர்.

வேலைகளில் இருப்போர் தங்களது ஓய்வு காலத்தில் சந்தோசமாக ஓய்வு எடுத்து தங்களது மீதியாக உள்ள வாழ்நாள் காலத்தைக் களிப்பதற்காக பெரிய வீடு வாசல்களைக் கட்டுகின்றனர். அதில் எல்லா வசதிகளையும் செய்து வைக்கின்றனர். 2 படுக்கை அறை. 2 களிப்பறை. உட்கார்ந்து பேச பெரிய விசிட்டிங். ஹால், காற்று வாங்க மாடியில் ஒரு தனி அறை. இப்படி என்ன என்னவோ வைத்துக்கட்டி இறுதியில் அங்கு குடிபோன இடத்தில் கணவனோ அல்லது மனைவியோ மரித்துப்போனால் அந்த வீடு பாழான வீடாகிவிடுகின்றது. அந்த பெரிய மாளிகையை அரசாட்சி செய்ய வந்தஅந்த மக்களில் ஒருவர் அந்த மாளிகையின் ஒரு சிறிய அறையைத் தெரிந்து கொண்டு அதிலே தனித்த அடைக்கலான் குருவிபோல வாழ்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுகின்றனர். உலகப்பிரகாரமான அலுவலில் என்னோடு வேலை பார்த்த ஒரு ஐயா தனது ஓய்வு காலத்தில் கணவனும் மனைவியுமாக இருப்பதற்காக எல்லா வசதிகளோடும் கூடிய ஒரு பெரிய வீட்டை வாங்கினார்கள். தான் விரும்பின பூச்செடிகளை எல்லாம் தொட்டிகளில் வைத்து வீட்டினை அழகுபடுத்தினார்கள். இன்னும் அவர்கள் தனது மனதிலே தனது வீட்டை எப்படி எப்படி எல்லாம் அலங்கரிக்க வேண்டுமென்று நினைத்தார்களோ நமக்குத் தெரியாது. 15 நாட்கள் மாத்திரமே அந்த வீட்டில் வாழ்ந்த நிலையில் அவர்கள் திடீரென மாரடைப்பால் மரித்துப்போனார்கள். இந்தப் பாழுலகில் நாம் நிம்மதியாக இளைப்பாற இயலாது. காரணம் இந்தப்பிரபஞ்சம்

சாத்தானுக்குரியது. "உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது" (1 யோ 5:19) என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றது.

சாத்தானுடைய ஆதிக்கத்திலுள்ள பூமியில் நாம் நிம்மதியாக இளைப்பாற இயலாது. அதின் காரணமாகத்தான் நமது அருமை இரட்சகரும் துக்கம் நிறைந்தவரும், பாடுகள் அனுபவித்தவருமாக இந்த உலகத்தை கடந்து செல்ல வேண்டியதானது(ஏசா 53:3) அப்போஸ்தலர்கள் எல்லாரும் பாடுகள் வழியாக பரலோகம் சென்றவர்கள்(அப் 14:22) தேவ மக்களுக்கு பூலோகத்திலும் இளைப்பாறுதல், பரலோகத்திலும் இளைப்பாறுதலுக்கு சத்துருவாம் பிசாசு அத்தனை இலகுவாக சம்மதிப்பானா? தன்னால் முடிந்த அளவு கர்த்தருடைய பிள்ளைகளை கசக்கிப் பிழிந்து விடுகின்றான். "நான் கர்ப்பத்தில்தானே அழியாமலும், கர்ப்பத்திலிருந்து புறப்படுகிறபோதே சாகாமலும் போனதென்ன?"(யோபு 3:11) என்று பிரலாபித்து புலம்பி அழுகின்ற அளவிற்கும் தங்களுடைய பிறந்த நாளை சபித்து சாபமிடும் அளவிற்கும்(யோபு 3:1) ஆண்டவருடைய அடியார்களுக்கு துன்ப துயரங்களை அவன் அதிகரிக்கப்பண்ணுகின்றான்.. எல்லா வசதி வாய்ப்புகளும், ஆனந்த பாக்கியங்களும் தனது அரண்மனை வாழ்வில் இருந்தபோதினும் அதிலும் தனது இளைப்பாறுதலை கண்டடையாமல் "பயமும் நடுக்கமும் என்னைப் பிடித்தது, அருக்களிப்பு என்னை மூடிற்று. ஆ, எனக்குப் புறாவைப்போல் சிறகுகள் இருந்தால் நான் பறந்துபோய் இளைப்பாறுவேன்" (சங் 55:5,6) என்று தாவீது ராஜா கதறுவதை நாம் காண்கின்றோம்.

மெய்தான், கர்த்தாவின் கல்வாரி இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்த தேவ ஜனத்திற்கு இந்த உலகத்தில் இளைப்பாறுதல் கிடையாது. அவர்களுடைய இளைப்பாறுதல் பரலோகத்தில் மாத்திரமே உள்ளது. எனவேதான், எபிரேயர் நிருப ஆக்கியோன் " தேவனுடைய ஜனத்திற்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது"(எபி 4:9) என்று எழுதி வைத்தார்.

தேவன் தம்மில் அன்புகூருகிற தமது பிள்ளைகளின் இளைப்பாறுதலுக்காக பரலோகில் ஆயத்தம் செய்து வைத்தவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை(1 கொரி 2:9) என்று நாம் பார்க்கின்றோம். முதலாம் நூற்றாண்டிலேயே "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக

ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்"(யோவான் 14:2,3) என்று கூறிய பொய்யுரையாத தேவன் கடந்த 2000 ஆண்டுகளாக நமது நித்திய பேரின்ப இளைப்பாறுதலுக்காக பரலோகில் கை வேலையில்லாத வீடுகளை ஆயத்தம் செய்து கொண்டே இருக்கின்றார். ஒருவரும் எண்ணக்கூடாத திரள்,திரளான தேவ ஜனம் முடிவில்லா யுகா யுகங்களாக, ஊழி ஊழி காலமாக மோட்சானந்த பாக்கியங்களை பெற்று அனுபவித்து தங்கள் சீயோன் மலை அதிபராம் இயேசு ராஜாவோடு பேரானந்ததுத்துடன் வாழ இத்தனை காலங்களாக அவர் மணவாட்டியை அலங்கரிப்பது போல பரலோகத்தை அலங்கரித்து ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்றார்.

அந்த நித்திய இளைப்பாறுதலை நாம் பெற்றுக்கொள்ள இந்த கிருபையின் காலத்தில் ஆண்டவர் இயேசுவை அண்டிக்கொள்ள வேண்டும். மற்ற பெயர் கிறிஸ்தவர்கள், தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல தேவனுடைய பரிசுத்த உள்ளத்தை வேதனைப்படுத்தக்கூடிய பாவ வழிகளில் நாம் வாழக்கூடாது. தாம் தெரிந்துகொண்ட தமது சொந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் அந்த நித்திய இளைப்பாறுதலை வாக்குத்தத்தம் செய்திருந்தார். ஆனால், முரட்டாட்டமுள்ள பொல்லாத அந்த இஸ்ரவேலர் அதை சுதந்தரிக்கக் கூடாதவர்களானார்கள். காரணம், அவர்கள் ஆண்டவருடைய வழிகளை அறிந்து அதற்கு பணிந்து நடக்க மனமற்ற வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனங்களாக இருந்தபடியால்தான். "நாற்பது வருஷமாய் நான் அந்த சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்"(சங் 95:10,11) என்று தேவனே கூறியுள்ளார். இந்தக்கடைசி காலத்தில் நாமே அந்த பொல்லாத இஸ்ரவேலராக இராதபடி கர்த்தர் நம்மைப் பாதுகாத்துக்கொள்ளுவாராக. எல்லாம் எனது நினைவுகளும், எனது வழிகளும் மாத்திரமே நடக்கவேண்டும், எனது உள்ளத்தின் ஆசைகள் மாத்திரமே முழுமையாக நிறைவேறவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. அந்த இடத்தில்தான் தேவனுக்கும், தமது ஜனமாகிய இஸ்ரவேலருக்கும் பகைமை ஏற்பட்டது. தொட்டதெல்லாவற்றையும்

கர்த்தர் பொன்னாக்கித்தரவேண்டும் என்று தேவ மக்கள் வாஞ்சித்துக் கதறக்கூடாது. எந்த நிலையில் தேவன் நம்மை வைத்திருந்தாலும் அவருடைய வழிகளை முழுமையாக நாம் ஏற்று அவரது பலத்த கரத்துக்குள் அடங்கியிருக்க வேண்டும்(1 பேதுரு 5:6) நாம் ஆண்டவருக்கு அடங்கி ஜீவித்தால் நமது நித்திய வாழ்வு நன்மையான செல்வ வாழ்வாக இருக்குமென்று யோபு பக்தன் சொல்லியிருக்கின்றார் (யோபு 36:11).

இதை கருத்தோடு வாசிக்கும் என் அன்பான தேவப்பிள்ளையே, உனது வாழ்வின் காலங்கள், மணி நேரங்கள் எப்படியாக செலவிடப்பட்டுக்கொண்டிருக்கின்றது? தினமும் எவ்வளவு நேரத்தை உன்னை உன் தாயில் கர்ப்பத்தில் தெரிந்துகொண்டவரும், உனக்காக பேரின்ப நித்திய இளைப்பாறுதலை பரலோகில் ஆயத்தம் செய்து கொண்டிருப்பவருமான அருமை நேசரோடு செலவிட்டு வருகின்றாய்? உனக்கும் உன் ஆண்டவருக்குமுள்ள உனது ஐக்கிய உறவு எவ்வாறு உள்ளது? அவரது சமூகத்தில் ஜெபத்தில் நீ செலவிடும் நேரங்கள் உனக்கு களிகூருதலை கொண்டு வருகின்றதா? சங்கீதக்காரனின் ஆத்துமா மானானது நீரோடைகளை வாஞ்சித்து கதறியது போல கர்த்தரை வாஞ்சித்துக்கதறியதே! உனது ஆத்துமாவும் ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ளும் ஜெப வேளையை வாஞ்சித்து கதறுகின்றதா? கோழிக்குஞ்சுகள் தங்கள் தாயின் செட்டைகளின் மறைவில் எப்பொழுதும் இருப்பதுபோல நீயும் உன்னதமானவரின் செட்டைகளின் மறைவில் எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றாயா?

சூதும் வாதும், மாய்மாலமும் கபடும், அக்கிரமமும் அநீதியும், இரக்கமின்மையும் ஏமாற்றமும் நிறைந்த கொடிய உலகில் மனம் பதறாமல் சந்தோச சமாதானத்துடன் வாழ ஆண்டவர் இயேசுவை அண்டிக்கொள்ளுங்கள். முழு உலகமும் வெறுத்து ஒதுக்கித்தள்ளும் முதுமையை மிகுந்த களிகூருதலோடு சந்தித்து அதில் மோட்ச இன்ப நாட்டின் முன் ருசியை அனுபவித்து ஆனந்திக்க, அந்த முதுமையில் கர்த்தருக்கேற்ற கனி கொடுக்க அன்பின் ஆண்டவரை அண்டிக்கொள்ளுங்கள். முடிவில்லா நித்தியத்தை இரட்சகர் இயேசுவோடும், அவருடைய பரிசுத்தவான்களின் திரள் கூட்டத்தோடும், இரத்த சாட்சிகளின் தைரிய சேனையோடும், தேவ தூதர்களின் திரளோடும் கை வேலையில்லாத மோட்ச இன்ப வீட்டில் செலவிட ஆண்டவர் இயேசு தகப்பனை இன்றே அண்டிக்கொள்ளுங்கள்.

அதற்கான தேவ கிருபைகளை, கர்த்தர் உங்களுக்கும், எனக்கும் இரக்கமாகத் தந்தருள்வாராக. ஆமென்.

"எனக்கோ தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்" (சங்கீதம் 73:28)

"தேவனை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்" (சங்கீதம் 2:12)



சோர்புக்கு இடம் கொடாதே, துதிக்கத் தொடங்கு!

தேவனை ஸ்தோத்தரிக்கத் தொடங்கும்போது உன் விசுவாசம் பலுகிப் பெருகுவதை நீ எப்பொழுதாவது கவனித்திருக்கின்றாயா? பரிந்துபேசும் ஜெபம் ஒன்றைத் தேவனிடம் ஏறெடுப்பதைக்காட்டிலும் அவரை உளமார வாழ்த்தி ஸ்தோத்தரிப்பதே மிகவும் ஏற்றது என்ற சத்தியத்தை நீ கண்டிருக்கின்றாயா? துதியானது பயமுறுத்தும் சூழ்நிலைகளிலிருந்து உனது கண்களை விலக்கி சர்வவல்லமையுள்ள உன் அன்பின் பரலோக பிதாவை உற்று நோக்கச் செய்கின்றது. உன் வாழ்வில் நிகழும் ஒவ்வொரு சந்தர்ப்ப சூழ்நிலையும் தேவனுடைய அனுமதியின்றி வரவில்லை. அவை ஒவ்வொன்றும் தேவனுடைய நித்திய மகிமைக்கும், உனது நன்மைக்கும் சேர்ந்து கிரியைசெய்ய உன் அன்பின் கர்த்தரால் அனுமதிக்கப்படுகின்றது.


துதியானது யுத்தக்களத்திலிருந்து உன் கண்களை விலக்கி ஜெயகெம்பீரமான இயேசுவிடம் உள்ள உனது வெற்றியை காணச்செய்கின்றது.

உனக்கு விசுவாசம் தேவையானால் நீ மேற்கொள்ள வேண்டிய படிகள் இரண்டு உள்ளன. ஒன்று, தேவனுடைய வசனத்திலுள்ள அவருடைய வாக்குத்தத்தத்தை பற்றிப்பிடித்தல், மற்றொன்று, அவரை உளமார துதித்தலாகும். இவை இரண்டும் ஒரே நேர்கோட்டில் வழிவிலகாமல் ஒன்றுக்கொன்று இணையாகப் பயணம் செய்கின்றன. ஹைடிரஜனும் ஆக்ஸிஜனும் சேர்ந்து தண்ணீரைப் பிறப்பிப்பதைப் போன்று இவை இரண்டும் ஒன்றாக இணைந்தே எப்பொழுதும் செயல்படுகின்றன.

கவலைப்படுவதையும், பயந்து நடுங்குவதையும் கைவிட்டுவிட்டுக் கர்த்தரைத் துதிக்கத் தொடங்கு. உன் தலையில் பரம ஆசீர்வாதங்களை கொட்டி குவிக்கும் பரம சஞ்சீவி துதி ஒன்றைத் தவிர வேறெதுவுமேயில்லை.

இமயமலைகளிலுள்ள ருத்ரபிரயாக் என்ற இடத்தில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்

கர்த்தருடைய பரிசுத்த ஊழியத்தின் பாதையில் நாங்கள் இந்த தடவை இமயமலைகளிலுள்ள ருத்ரபிரயாக் என்ற இடத்திற்குச் சென்றிருந்தோம். இந்த இடம் இந்து மக்களின் புண்ணிய ஸ்தலமாகக்



கருதப்படுகின்றது. அந்த மக்களுடைய தெய்வங்களில் ஒன்று இந்த இடத்தில் ருத்ரதாண்டவ நடனம் ஆடியதாகக் கூறப்படுகின்றது. இமயமலைகளின் இரண்டு பெரும் மலை இடுக்குகளின் வழியாக அலக்நந்தா மற்றும் மந்தாகினி என்ற இரண்டு பெரிய நதிகள் ஓடி வந்து இந்த இடத்தில் ஒன்று கலந்து சங்கமமாகி பகீரதி என்ற ஒரே நதியாக இங்கிருந்து செல்லுகின்றது. அந்த நதிகளின் சங்கம ஸ்தானமும் இந்து மக்களின் வணக்கத்திற்கு உரியதாகவே விளங்குகின்றது. மந்தாகினி, அலக்நந்தா ஆகிய இரண்டு நதிகள் ஒன்று சேருவதை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

நாங்கள் இந்த இடத்திலுள்ள பாபா காலி கம்லிவாலா என்ற இந்து தர்மசாலையில் தங்கி சில தினங்கள் தேவனுடைய ஊழியத்தைச்

செய்தோம். நதிகளின் சங்கம ஸ்தானத்திற்கு முன்னால் மலையின்மேல் ஒரு சிறிய கிராமம் உள்ளது. நாங்கள் அந்தக்கிராமத்திற்குச்சென்று தேவனுடைய பிரதிகளை அங்குள்ள மக்களுக்கு கொடுத்து சுவிசேஷம் அறிவித்தோம். அவர்கள் கூட்டமாகக்கூடி அமர்ந்து தேவனுடைய வார்த்தைகளை ஆவலுடன் கேட்டனர்.

இந்து மக்களின் புண்ணிய ஸ்தலமான கேதார்நாத் என்ற இடத்திற்கும் இந்த ருத்ரபிரயாக் என்ற இடத்திலுருந்துதான் மலைப்பாதை பிரிந்து செல்லுகின்றது. நாங்கள் அந்த கேதார்நாத் செல்லும் பயங்கரமான மலைப்பாதையில் சில கி.மீ. தூரம் வரை நடந்து சென்று தேவனுடைய பிரசுரங்களை மக்களுக்கு விநியோகித்தோம். நாங்கள் நடந்து சென்ற உயரமான இமயமலைப்பாதையின் பயங்கரத்தை இங்கு விவரிக்க இயலாது. ஒரு பலமான காற்று அங்கு வீசியிருந்தாலும் கூட நாங்கள் கெடு பாதாளத்தில் நிலை தடுமாறி விழவேண்டியதாக இருந்திருக்கும். எங்களுக்கு எதிராக வாகனம் எதுவும் திடீரென வரும்போது நாங்கள் மலையை ஒட்டி நின்று கொண்டோம். அல்லது வெகு தொலைவில் வாகனம் ஏதாவது வருவது தெரிந்தால் நாங்கள் துரிதமாக பாதுகாப்பான இடத்தில் போய் நின்று கொள்ளுவோம். நாங்கள் சென்ற மலைப்பாதையில் காணப்பட்ட குக்கிராமங்களில் நாங்கள் சந்தித்த மக்களுக்கு தேவனுடைய பிரசுரங்களை ஜெபத்தோடு கொடுத்துக்கொண்டே சென்றோம்.


நாங்கள் எங்கள் ஊழியத்தின் பாதையில் தில்வாடா என்ற கிராமம் நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். வழியில் ஒரு பள்ளிக்கூடம் மலை மேல் இருந்தது. பள்ளிக்கூட மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சுவிசேஷ பிரதிகளை கொடுத்துவிடலாம் என்ற ஆவலில் மத்தியான வெயிலில் மிகவும் கஷ்டப்பட்டு மலை உச்சி ஏறி பள்ளியை வந்தெட்டிப்பிடித்தோம். ஆனால், பள்ளிக்கூடம் மூடிக்கிடந்தது. தசரா பண்டிகைக்காக பள்ளிக்கு விடுமுறை விட்டிருந்தனர். மூடிக்கிடந்த பள்ளியின் வகுப்பு அறைகளுக்குள் தேவனுடைய பிரசுரங்கள் சிலவற்றை ஜெபத்துடன் போட்டுவிட்டு மிகவும் கவனமாக கீழே இறங்கி ரஸ்தாவை வந்தடைந்தோம். எப்படித்தான் பள்ளிப் பிள்ளைகள் அந்த மலை உச்சியிலுள்ள பள்ளிக்குச் சென்றுவிட்டு திரும்பி வருவார்களோ என்பதை எண்ணி நாங்கள் ஆச்சரியம் அடைந்தோம். வெயிலின் கடுமை, மலை ரஸ்தாவின் பயங்கரமான நிலை காரணமாக நாங்கள் தில்வாடா கிராமம்

வரை போய்ச் சேர இயலவில்லை. எனினும் வழியில் தேவன் எங்களுக்கு நல்ல ஊழியவாய்ப்புகளைத் தந்தார். அடுல் ராவத், சுரீந்தர் சிங், யுத்வீர்சிங், கைலாஷ்சந்த் போன்றவர்களோடு தனிப்பட்டவிதத்தில் பேசி சுவிசேஷம் கொடுக்க கர்த்தர் உதவி செய்தார்.

மக்களை ஓட , ஓட, முட்டித் துரத்தும் முரட்டுக்காளை மாடு.

ருத்ரபிரயாக் ஊரின் ஒரே பஜாரின் மையப்பகுதியில் மிகப்பெரிய அரச மரம் ஒன்று உள்ளது. அதற்கு கீழாக சில காளை மாடுகள் எப்பொழுதும் நின்றுகொண்டிருப்பதை நான் கவனித்தேன். காளை மாடுகளை நம் ஊர்களைப்போல இங்கு உழவுத்தொழிலுக்குப் பயன்படுத்துவது கிடையாது. அத்துடன் அவற்றை விற்பதும் கூட கிடையாது. தாங்கள் வழிபடும் தங்கள் தெய்வங்களின் இஷ்ட மிருகங்களாக அவைகள் இருப்பதால் அந்த காளைகளுக்கு எந்த ஒரு தீங்குமே செய்ய அவர்கள் விரும்புவதில்லை. அவைகள் தாங்களாகவே மூப்படைந்து சாக விட்டுவிடுகின்றனர்.

அந்த மாடுகளில் ஒரு குறிப்பிட்ட காளை மாடு பயங்கரமான முட்டு மாடாகும். எனது கண் காணவே ஒரு நாள் அந்த மாடு அங்கிருந்த மனிதர் ஒருவரை பாய்ந்து சென்று முட்டியது. தெய்வாதீனமாக அந்த மனிதர் ஓடித்தப்பிக்கொண்டார். சற்று ஏமாந்திருந்தாலும் அவருக்குத் தீங்கு நேரிட்டிருக்கும். அப்படி அந்த மாடு மக்களை முட்டினாலும் அந்த



மாட்டை அங்கேயேதான் நடமாட அவர்கள் விட்டிருப்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பின்வந்த நாட்கள் ஒன்றில் அந்த மாடு யாரோ ஒரு மனிதரை பலமாக முட்டி காயப்படுத்தியிருக்க வேண்டும். அதின் காரணமாக சில போலீஸ்காரர்கள் கைகளில் தடியுடன் ஒரு நாள்இரவு அந்த மாட்டைத் துரத்திக்கொண்டு தெரு வழியாக ஓடுவதை நான் கண்டேன். இன்றுடன் அந்தமாட்டின் கதை முடிந்தது என்று நான் நினைத்தேன். ஆனால், என்ன ஆச்சரியம்!. அடுத்த நாள் அதே மாடு மற்ற மாடுகளுடன் அரச மரத்துக்குக் கீழாகவே முக்காரமிட்டு உறுமிக்கொண்டு திடமாக நின்றுகொண்டிருந்தது. மாடுகளைத் தங்கள் கரங்களால் தொட்டு அவற்றை தெய்வமாக வணங்கும் மக்கள் அங்கு இருக்கும் வரை அந்த மாடுகளுக்கு எந்த ஒரு தீங்கும் நேராது என்பதை நான் மனதிலே யூகித்துக்கொண்டேன். ருத்ரபிரயாக் ஊரின் முக்கியமான பஜாரிலும் நாங்கள் கொஞ்சம் பேர்களுக்கு ஆண்டவருடைய கைப்பிரதிகளைக் கொடுத்து ஊழியம் செய்தோம். மலையின் மேலுள்ள அந்த ஊரின் ஒரு பகுதியை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

கழுத்தில் மனித மண்டை ஓட்டுடன் நடந்து சென்ற சாது

ஒரு நாள் ருத்ரபிரயாக் கிராமத்தின் தெருவில் ஒரு இந்து சாது தனது கழுத்தில் ஒரு பெரிய மனித மண்டை ஓட்டையும், மனிதகால் எலும்பு ஒன்றையும் மாலையாகக் கட்டி தொங்க வைத்தவராக, உடல் முழுவதும் வெண் சாம்பலை பூசிக்கொண்டு சென்று கொண்டிருந்தார். அவரது தலையின் ரோமங்கள் எல்லாம் சடைகளாகத் தொங்கிக்கொண்டிருந்தன. அவரைப் பார்க்கின்ற எந்த ஒரு மனிதனும் பயமும் நடுக்கமும் கொள்ளும் வகையில் அவரது ரூபம் அத்தனை கோரமாக இருந்தது.

சர்வவல்ல தேவன் தமது தேவ சாயலாகவும் தமது ரூபத்தின்படியும் சிருஷ்டித்த மனிதன்(ஆதி 1:27) தன்னை எத்தனையாகக் கெடுத்து தன்னை சாத்தானுடைய ரூபத்தில் மாற்றிக்கொண்டிருப்பதை நினைத்து உள்ளம் உருகினேன். மேற்கண்ட சாது தனது கழுத்தில் அணிந்திருந்த மாலையை தான் நித்திரை செய்யும்போதும் தனது கழுத்தில் அணிந்தவராக தூங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படி இல்லாவிடினும் அந்த மண்டை ஓடும், கால் எலும்பும் அவரது குடிசையில் அவருடனேயேதான் இருக்கும். காரணம், அது அவர் எப்பொழுதும் தனது கழுத்தில்

போட்டுக்கொள்ளும் மாலை அல்லவா? இப்படியான ஒரு அருவருக்கத்தக்க பழக்கத்தை அந்த சாது எப்படிக்கற்றுக்கொண்டார்? அவர் வழிபடும் தெய்வங்கள் அப்படிச்செய்ய அவருக்குக் கற்றுக்கொடுத்தது. அவரைப் பார்ப்போர் அவரைக்கண்டு பயந்து நடுங்கி மறைந்து கொள்ளுகின்ற அளவுக்கு அவர் தன்னை அலங்கோலமாக அலங்கரித்துக்கொள்ள அவரது தெய்வங்கள் அவருக்கு கற்பித்தன. மனிதன் எத்தனை அழகானவன்! எத்தனை கெம்பீரமான அலங்காரமானவன்! ஆனால், அவரை ஆட்கொண்ட சத்துருவான பிசாசானவன் தனது அவலட்சமான ரூபத்தின்படி அவரை மாற்றிப் போட்டான்.

கர்த்தரை தங்களுக்குத் தெய்வமாக கொண்ட ஜாதியும், அவர் தமக்கு சுதந்திரமாக தெரிந்து கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எத்தனைபாக்கியசாலிகள்! மேலே நாம் கண்ட சாதுவை சத்துருவாகிய பிசாசானவன் மரித்துப்போன மனிதர்களின் தலை எலும்பு, கால் எலும்புகளால் மாலை போட்டு அவரைக்காண்கின்ற மக்கள் கதிகலங்கி ஓடும்படியான ரூபத்தில் வேஷம் கட்டிவிட்டான். ஆனால் நமது பரிசுத்த தேவன் நம்மை அவ்விதமாக அலங்கரித்து வைக்காமல் நம்மை எப்படியானதொரு மகிமை சொரூபிகளாக அலங்கரித்து வைத்திருக்கின்றார் என்பதை தேவனுடைய வார்த்தைகள் எத்தனை அழகாக நமக்கு விளக்கிக்கூறுகின்றது. "சித்திரத்தையலாடையை உனக்கு உடுத்தி, சாயந்தீர்த்த பாத ரட்சைகளை உனக்குத்தரித்து, கட்ட மெல்லிய புடவையையும், மூடிக்கொள்ள பட்டுச்சால்வையையும் உனக்குக்கொடுத்து, உன்னை ஆபரணங்களால் அலங்கரித்து, உன் கைகளில் கடகங்களையும், உன் கழுத்திலே சரப்பணியையும் போட்டு, உன் நெற்றியில் நெற்றிப்பட்டத்தையும், உன் காதுகளில் காதணியையும், உன் தலையின் மேல் சிங்காரமான கீரீடத்தையும் தரித்தேன். இவ்விதமாய் பொன்னினாலும், வெள்ளியினாலும் அலங்கரிக்கப்பட்டாய். உன் உடுப்பு மெல்லிய புடவையும், பட்டும், சித்திரத்தையலாடையுமாயிருந்தது. மெல்லிய மாவையும், தேனையும், நெய்யையும் சாப்பிட்டாய். நீ மிகவும் அழகுள்ளவளாகி, ராஜ்யத்தை சுதந்தரிக்கும் சிலாக்கியத்தையும் பெற்றாய்" *(எசேக்கியேல் 16:10-13).*

ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகளாக நாம் இருப்பது எத்தனை பாக்கிய சிலாக்கியம் என்று பாருங்கள்! இல்லையெனில், முரட்டுக் காளைகளிடம் நன்றாக முட்டுப்பட்டுக்கொண்டும், சாத்தான் நம்மை எந்த எந்த கோலத்தில் அலைக்கழிக்க வேண்டுமென்று விரும்புவானோ அந்தக் கோலத்தில் குரங்கு கை பூமாலையாக அவனால் நாம் அலைக்கழிக்கப்பட்டுக்கொண்டு காலமெல்லாம் நாம் நிர்ப்பந்தமான மாந்தர்களாக கண்ணீர் கடலில் வாழ்வதைத்தவிர நமக்கு வேறே கதியே கிடையாது.

சாத்தானுக்கு அடிமைப்பட்ட மக்கள் அவனுடைய கொடிய ஆதிக்கத்தின் கீழ் என்ன, என்ன கொடிய சாபங்களையும், வேதனைகளையும், சித்திர வதைகளையும் அனுபவிக்க வேண்டுமென்பதை அறிந்த சர்வவல்ல தேவன் தம்மை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரது பரிசுத்த அடியார்களாக இருக்கும் தமது மக்களுக்குள்ள பாக்கிய சிலாக்கியங்களையும், பரலோகிலுள்ள அவர்களது நித்திய பேரின்ப ஆனந்த வாழ்வையும் எண்ணியவராக " கர்த்தரை தங்களுக்குத் தெய்வமாகக் கொண்ட ஜாதியும், அவர் தமக்கு சுதந்திரமாக தெரிந்து கொண்டஜனமும் பாக்கியமுள்ளது" (சங் 33 : 12) என்று அருமையாக எழுதி வைத்தார்.

ஆண்டவர் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல், பாவ அடிமைத்தனத்தில் ஜீவித்துக்கொண்டு, சாத்தானுடைய குரலுக்குக் கீழ்ப்படிந்து அவன் விரும்பும் வழிகளில் நடப்போர் யாவரும் தனது கழுத்திலே மனித மண்டை ஓட்டு மாலையுடன் காணப்பட்ட ருத்ரபிரயாக் சாதுக்களேதான். அந்த மனிதருக்கும், ருத்ரபிரயாக் சாதுக்களுக்கும் எந்த ஒரு வித்தியாசமுமே கிடையாது. கர்த்தர் தங்களுடைய உள்ளத்தில் இல்லாத காரணத்தால் இன்று கிறிஸ்தவ மக்கள் செய்யும் அநியாய அக்கிரமங்கள் கொஞ்சமல்லவே! ஆ, எத்தனை புறமதஸ்தர் ஆண்டவர் இயேசுவை தங்கள் ஆண்டவரும், இரட்சகருமாக ஏற்றுக்கொள்ள எத்தனை ஆசை ஆவலாக இருக்கின்றனர். ஆனால், தங்களைச் சுற்றிலும் இருக்கின்ற கிறிஸ்து அற்ற கிறிஸ்தவர்களான மக்களுடைய சாட்சியற்ற வாழ்க்கையாகிய மனித மண்டை ஓட்டு மாலையை அவர்கள் கழுத்திலே காண்கின்ற வேளையில்தானே " ஐயோ, இந்த இயேசுவும் வேண்டாம், இந்த கிறிஸ்தவ மார்க்கமும் எங்களுக்கு வேண்டாம்" என்று கூறி தலைதெறிக்க ஓட்டம் பிடிக்கின்றனர்.

கிஷோர், நீ தற்கொலை செய்து உனது உலக வாழ்வை முடித்துவிடு.

(ஒரு திடுக்கிடும் அனுபவ சாட்சி)

"திருடன், திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்.. நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்"(யோ 10:10)

"அவன் ஆதி முதற்கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான்" (யோ 8:44)

கர்த்தர் .இயேசுவின் பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம். எனது பெயர் கிஷோர். நான் வட இந்திய சிந்தி குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் மிகவும் வைராக்கியமான இந்துக்குடும்பத்தில் பிறந்தவன். குருநானக்கையும், இதர இந்து தேவதா தேவிகளையும் நான் உண்மையும், உத்தமத்தோடும், பக்தி வைராக்கியமாக வணங்கி ஆராதித்து வந்தேன். இந்து தெய்வங்களும், இந்து வேதங்களும் எனது உள்ளத்தை முழுமையாக கவர்ந்திருந்தன. யாராவது என்னண்டை வந்து ஆண்டவர் இயேசுவைக் குறித்து கூறினால் நான் அவர்களை பரியாசம் செய்தேன். அத்துடன், நான் படிப்பதற்காக அவர்கள் எனக்குக் கொடுக்கும் வேதாகமத்தையும், தேவனுடைய பிரசுரங்களையும் அவர்கள் என்னைவிட்டு போனபின்னர் நான் தூரமாக வீசி எறிந்திருக்கின்றேன். இப்படி நான் பல தடவைகளும் செய்திருக்கின்றேன்.

பொதுவாக சிந்தி குல மக்கள் நல்ல செல்வந்தர்களாவார்கள். ஆனால், எனது பெற்றோர் வறுமைப்பட்டுப் போனார்கள். அதின் காரணமாக நான் நல்ல தரமான கல்வியை பெற இயலவில்லை. சென்னை பட்டணத்து மாநகர பள்ளி ஒன்றில் நான் எனது படிப்பை தொடங்கி அங்கேயே எனது கல்வியை முடித்தேன்.

எனது படிப்பிற்குப் பின்னர் சென்னையிலுள்ள ஒரு பிரபலமான துணிக்கடையில் எனக்கு வேலை கிடைத்தது. அந்த துணிக்கடையில் நான் உண்மையும், நேர்மையுமாக நடந்து எல்லாருடைய அன்பையும், நம்பிக்கையையும் பெற்று நாளடைவில் அந்த பெரிய துணிக்கடையில்

மேலாளர் பதவிக்கு உயர்ந்து மாதந்தோறும் ரூபாய் 18000 சம்பளம் பெற்று வந்தேன்.

கை நிறைந்து வழியும் அளவுக்கு பெரிய சம்பளம் எனக்கு கிடைத்ததால் நான் வாழ்வில் முன்னேறி வந்தேன். நல்ல வசதியான பெரிய குடும்பத்தில் நான் திருமணமும் செய்து கொண்டேன். கர்த்தர் எனக்கு ஒரு ஆண் மகவையும், ஒரு பெண் மகவையும் கொடுத்தார். எனது அன்பான மனைவி என்னையும், எனது குழந்தைகளையும் அதிகமாக நேசித்தார்கள். அவர்களும் வைராக்கியமான இந்துவாக இருந்தபோதினும் ஆண்டவர் இயேசுவின் கல்வாரி அன்பை தேவ ஊழியர்கள் அவர்களுக்குச் சொல்லவே கிறிஸ்தவ மார்க்கத்தில் ஒரு பற்றும், பாசமும் அவர்களுக்கு ஏற்பட்டதுடன் அவர்களுடைய இருதயத்தில் அந்த இயேசு இரட்சகர் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்து அவர்களை வழிநடத்தி வந்தார். நான் இந்து மார்க்கத்தில் வைராக்கியமான பற்று வைத்திருந்தபடியால் கிறிஸ்தவ காரியங்களில் அதிகமாக ஈடுபாடு கொள்ள அவர்கள் தயக்கம் காண்பித்தபோதினும் ஒரு பரிசுத்த தாயார் நடத்தும் தேவ ஆராதனைகளுக்கு அவ்வப்போது அவர்கள் போய் கலந்து வந்தார்கள். நானும் எனது மனைவிக்கு அந்தக்காரியத்தில் தடை எதுவும் போடவில்லை. கிறிஸ்தவ காரியங்களில் எனக்கு எந்த ஒரு நாட்டமும், தேட்டமும் இல்லாதிருந்தது.

எனக்கு நல்ல சம்பளம் இருந்ததால் உலகப்பிரகாரமான எந்த ஒரு குறைவும் எனக்கு இல்லாதிருந்தது. அத்துடன் என்னிடம் புகைப்பழக்கம், மதுப்பழக்கம் போன்ற எந்த ஒரு கெட்ட பழக்க வழக்கங்களும் கிடையாது. மிகவும் ஒழுக்கமான துப்புரவானதோர் வாழ்க்கையை நான் எல்லாருக்கும் முன்பாக கண்ணியமாக நடத்திக்கொண்டிருந்தேன். உலகப்பிரகாரமான எல்லா சீரும், சிறப்பும் எனக்கு இருந்தபோதினும் தேவனுடைய சமாதானம் (யோ 14:27) எனக்கு இல்லாதிருந்தது. தேவனுடைய சமாதானம் எனக்கு இல்லாதிருந்தபடியால் எனது உள்ளம் வெறுமையாகவும், இருள் சூழ்ந்ததாகவும் இருந்தது. "துன்மார்க்கனுக்கு சமாதானம் இல்லை"(ஏசாயா 48:22) என்று தேவனுடைய வார்த்தை கூறுவதுடன். அவர்கள் தேவ சமாதானம் இல்லாமல் கொந்தளிக்கும் கடலைப்போல இருக்கின்றார்கள்(ஏசாயா 57:20) என்று அது தொடர்ந்து பேசுகின்றது. அந்த தேவ சமாதானம் எனக்கும் இல்லாத காரணத்தால் நானும் கொந்தளிக்கும் கடலைப்போலத்தான் இருந்தேன்.

இப்படியிருந்த காலத்தில் ஒரு நாள் எனது காதிற்குள் ஒரு சத்தம் கேட்டது. "நீ தற்கொலை செய்து உனது உலக வாழ்க்கையை முடித்துவிடு" என்று அந்த தொனி ஒலித்தது. நான்ஏன் தற்கொலை செய்து கொள்ள வேண்டும்? வாழ்க்கையில் எனக்கு எந்த ஒரு பிரச்சினைகளும் இல்லையே. நான் எவருக்கும் கடன்கள் கொடுக்க வேண்டியதில்லையே. நான் எல்லாவசதிகளோடும், குறைவில்லாமலும், சமுதாயத்தில் மிகுந்த கண்ணியத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும்போது எனக்கு எதற்கு தற்கொலை! ஆனால், அந்த சத்தம் அதின்பின்னர் என்னைத் தொடருவதாக இருந்தது. தினந்தோறும் அந்தக் குரல் என் காதிற்குள் ஒலிக்கத் தொடங்கியது. நான் படுத்திருந்தாலும், எழுத்திருந்தாலும், எங்கு சென்றாலும் "நீ ஏன் உலகத்தில் உயிர் வாழவேண்டும்? உடனடியாக தற்கொலை செய்து உனது வாழ்வை முடித்துவிடு'' என்ற தொனி டெலிபோன் மணி அடிப்பது போல எனது காதுகளில் கணீர், கணீரென ஒலித்துக்கொண்டேயிருந்தது. இப்படி என்னுடன் பேசிக்கொண்டிருந்த சாத்தானின் சத்தம் எனது மூளையை நன்கு சலவை செய்து என்னை இருளின் ஆதிக்கத்தில் கட்டி வைத்தது.

இப்படி அந்த சாத்தானின் சத்தம் எனக்குக் கேட்டுக் கொண்டேயிருந்தபடியால் கடைசியாக நான் அவனது கொடிய குரலுக்கு கீழ்ப்படிய திட்டமான தீர்மானம் எடுத்தேன். எனது முடிவை வரவேற்ற சாத்தானின் குரல் " அப்படியானால், உனக்கு மனைவியும் பிள்ளைகளும் உண்டே. உனது காலத்திற்குப்பின்னர் அவர்கள் ஏன் கஷ்டம் அனுபவிக்கவேண்டும்? எனவே, முதலாவது உனது மனைவி பிள்ளைகளை கொன்றுவிட்டு பின்னர் நீ உன்னை மாய்த்துக்கொள்" என்று என்னிடம் பேசியது. அவ்வாறே நான் எனது மனைவி, பிள்ளைகளை கொன்றுவிட்டு என்னையும் கொல்லுவதற்காக 45 நாட்கள் பல காரியங்களையும் தீவிரமாக யோசித்து பிரயாசம் எடுத்தேன். அந்த 45 நாட்களும் இந்த கொடிய தற்கொலை பாதக எண்ணம் என்னை முழுமையாக மேற்கொண்டு ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்ததது. எனது அருமை மனைவி, கண்மணி குழந்தைகளை நான் கொல்லுவது எப்படி? பாலில் அதிக அளவில் தூக்க மாத்திரைகளை கலந்து அவர்களுக்குக் குடிக்கக்கொடுத்து கொல்ல நிச்சயமான தீர்மானம் மேற்கொண்டேன். அப்பொழுது எனது மூத்த மகனுக்கு 8 வயதும், எனது பெண் குழந்தைக்கு 3 மாதமும் ஆகியிருந்தது. எனது 3 மாத பெண் பெண் குழந்தையை நான் தனிமையில் எனது மனைவி, சின்ன மகன்

இல்லாதபோது பார்த்து " இந்தப் பச்சிளம் குழந்தை கொல்லப்பட இது என்ன பாவம் செய்தது?" என்று நினைத்து நான் கண்ணீர் சிந்தி கதறி அழுதேன்.

இந்தக்கடைசி நேரம் நான் கையெடுத்து வணங்கிக் கும்பிட்ட எனது எல்லா தேவதா தேவியரையும் எங்களைக்காப்பாற்ற வரும்படியாக கண்ணீருடன் வருந்தி அழைத்தேன். என்னை அடக்கி அடிமைப்படுத்தியிருக்கும் தற்கொலை முயற்சியிலிருந்து என்னை விடுவிக்க நான் அவர்களை கெஞ்சி கதறினேன். அது ஒரு இரவு நேரம். உலகில் மெய்யான தேவன் என்று ஒன்று இருக்குமானால் அந்த தேவன்தான் இந்த எங்கள் குடும்ப தற்கொலைக்கு பொறுப்பேற்கவேண்டும் என்று எனது ஆறாத துயரத்தில் கூறிவிட்டு எனது துயரம் தாளாது என்னை அறியாமலே தூங்கிவிட்டேன். அந்த இரவில் ஆண்டவர் இயேசு எனக்கு எனது கனவில் காட்சியளித்தார். நான் வணங்கி சேவிக்காதவரும், நான் வெறுத்து ஒதுக்கித்தள்ளுபவருமான இயேசு எனக்கு காட்சி அளித்தும் கூட நான் அவரை விசுவாசித்து ஏற்கவில்லை.

அடுத்துவந்த ஒரு நாள் இரவில் நான் அந்த தற்கொலை திட்டத்தை நிறைவேற்றி முடிக்க திட்டமாக தீர்மானித்தவனாக, எனது இனஜனபெந்துக்கள் யாவரையும் கடைசியாக ஒரு தடவை பார்த்துவிட்டு வந்துவிடலாம் என்ற ஆவலில் அவர்களைப்பார்த்துவிட்டு வந்துவிடலாம் என்ற ஆவலில் அவர்களைப் பார்த்து வர சிக்கிரமாக புறப்பட நான் எனது மனைவியை துரிதப்படுத்தினேன். நான் மரண பீதி அடைந்தவனாக மிகவும் களைப்பும், சோர்புமாக காணப்பட்டபடியால் எனது மனைவி என்னைப்பார்த்து " நீங்கள் மிகவும் சோர்போடும், பயத்தோடும் காணப்படுகின்றீர்கள். பக்கத்திலுள்ள ஜெப வீட்டுக்கு நாம் போய் வரலாம் வாருங்கள்" என்று என்னை அன்பாக அழைத்தாள். அவளுடைய குரலுக்கு நான் செவி கொடாமல் "நான் அங்கு வரமுடியாது" என்று கூறிவிட்டு குளிப்பதற்காகச் சென்றுவிட்டேன். நான் குளியலறையில் இருந்தபோது ஒரு சத்தம் கேட்டது. அந்தக் குரல் முற்றும் வித்தியாசமாக எனக்கு மிகவும் நம்பிக்கையூட்டும் ஒரு ஆறுதலின் குரலாக கேட்டது. " இந்தியன் பீனல் கோட்"(இந்திய குற்றவியல் சட்டம்) என்று அது பேசியது. அந்த வார்த்தையை சொன்ன நபரை நான் காண்பதற்காக சுற்றும் முற்றும் பார்த்தேன். ஆனால் எவரும் காணப்படவில்லை. திரும்பவும் அதே

வார்த்தை எனக்குக் கேட்டது. பின்னர் அந்த வார்த்தை இவ்விதமாக பேசியது. "இந்திய தண்டனை சட்டத்தின்படி ஒரு மரண தண்டனை பெற்ற கொலை குற்றவாளியைக்கூட அவனது கடைசி ஆசை என்னவென்று கேட்டு அதை நிறைவேற்றிய பின்னர்தான் அவனை தூக்கிலிடுவார்கள்.

உனக்கு முன்பாகஉனது மனைவி கொலை குற்றவாளியாக உன்னால் தூக்குமேடை ஏற வேண்டியநிலையில் இருக்கின்றாள். அவளது ஆசையை நிறைவேற்றிவிட்டு அவளுக்கு நீ விரும்புவதைச்செய்" என்று சொல்லுவதாக தெரிந்தது. அதற்கு நான் " என் மனைவியிடம் நான் எப்படிச்சென்று "நான் உன்னை இன்று கொல்லப்போகின்றேன். உனது கடைசி ஆசை என்னவென்று என்னால் கேட்க முடியாதே" என்று பதில் அளித்தேன். உடனே அந்தக் குரல் "உனது மனைவி உன்னை அந்த ஜெப வீட்டுக்கு ஆசையாகக் கூப்பிடுகின்றாள் அல்லவா? அந்த அவளது ஆவலே அவளது கடைசி ஆசை என்பதாக எடுத்துக்கொண்டு அவளுடன் ஜெப அறைக்குச் சென்று வா" என்று கூறினது. அந்த பரலோக குரலுக்கு நான் கீழ்ப்படிந்தவனாக எனது மனைவியுடன் எனது வாழ்வில் முதன் முறையாக அந்த ஜெப அறைக்குச் சென்று அமர்ந்தேன்.

தேவ மக்கள், பாடல்கள் பாடி கர்த்தரை நன்கு துதித்த பின்னர் அந்த ஜெப வீட்டின் தாயார் தனது தேவச் செய்தியின் போது "இங்கு ஒரு வாலிபன் வந்துள்ளான். அவன் தற்கொலை செய்து கொள்ள திட்டமான முடிவெடுத்துள்ளான். அவன் மரிப்பதானால் அவன் எங்கே போவான் என்று அவனுக்குத் தெரியுமா? என்று கர்த்தர் அவனைப்பார்த்துக் கேட்கச் சொல்லுகின்றார்" என்று கூறினார்கள். அந்த வார்த்தைகளைக் கேட்டதும் எனக்கு ஒரு பக்கம் மிகுந்த ஆச்சரியமும், அடுத்த பக்கம் நான் தற்கொலை செய்து கொள்ள எடுத்த முடிவான தீர்மானம் அவர்களுக்கு எப்படி தெரியும் என்றும் யோசித்துக்கொண்டிருந்தேன். அந்தச் சமயம் சத்துருவாகிய பிசாசு என்னண்டை வந்து "இதோ பார்,உன்னைப்போல அநேகம் வாலிபர்கள் உன்னைச் சுற்றிலும் உட்கார்ந்திருக்கின்றார்கள். அவர்களில் யாரோ ஒருவரைத்தான் அந்த தாயார் சொல்லுகின்றார்கள். உன்னை அவர்கள் கூறவில்லை. நீ துரிதமாக எழுந்து தெருவுக்குப்போய் அங்கு வேகமாக வருகின்ற ஏதாவது ஒரு வாகனத்துக்கு முன்பாக விழுந்து செத்துப்போ" என்று சொன்னான். நான் அந்த தந்திர சாத்தானுடைய குரலுக்கு செவி சாய்க்க மறுத்தேன்.

பின்னர், அந்த ஜெப வீட்டின் தாயார் 27 ஆம் சங்கீதத்தின் மூலமாக எனது இருதயம் கொழுந்துவிட்டு எரியக்கூடிய விதத்தில் தேவனுடைய வசனங்கள் இரண்டை விளக்கிக் கூறினார்கள். அந்த வசனங்களை விளக்கிக் கொண்டிருந்தபோதே எனது பெயரைச் சொல்லி "கிஷோர், இன்று நீ மரித்தால் எங்கே போவாய் என்று கர்த்தர் கேட்கின்றார்?" என்று பேசினார்கள். உடனே நான் பயந்து நடுங்கி தேவனுடைய சபைக்கு முன்பாக எழுந்து நின்றேன்.

அந்த நிமிடமே, எனது உள்ளத்தை மூடி மறைத்திருந்த பயம், கலக்கம், திகில் எல்லாம் என்னைவிட்டுப் பறந்தோடினது. எனது உள்ளத்தை சித்திரவதை செய்து கொண்டிருந்த தற்கொலை செய்து கொள்ள வேண்டுமென்ற பிசாசின் கொடிய எண்ணங்கள் எல்லாம் அன்றே அடியோடு ஒழிந்தது. அன்றைய தினமே நான் என்னை சமூலமாக என் அருமை இரட்சகர் இயேசுவுக்கு ஒப்புவித்து பாவ மன்னிப்பின் நிச்சயத்தையும், உலகம் தரக்கூடாததும், அது என்னிலிருந்து எடுத்துக்கொள்ளக்கூடாததுமான சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமான பொங்கி வழியும் தேவ சமாதானத்தை என் இருதயத்தில் பெற்றுக்கொண்டேன்.

அந்த நாளிலிருந்து என் அன்பின் ஆண்டவர் இயேசு எனக்கும், எனது குடும்பத்தினருக்கும் நல்லவரும், வல்லவரும், போதுமான கர்த்தருமாக இருந்து எங்களை தமது ஜீவ பாதையில் கரம் பிடித்து வழி நடத்தி வருகின்றார். அந்த ஜீவனுள்ள தேவனுக்கு நாங்களும் தேவ பெலத்தால் சாட்சிகளாக இருந்து எங்களுடைய வைராக்கியமான இந்து இனஜன பெந்துக்களுக்கும், நாங்கள் சந்திக்கும் மக்களுக்கும் இயேசு இரட்சகரைக்குறித்துக் கூறி தேவனுடைய வசனங்களையும், சுவிசேஷ புத்தகங்களையும் கொடுத்து வருகின்றோம். அத்துடன் எங்களது துணிக்கடைக்கு வருகின்ற வாடிக்கையாளருக்கும் இரட்சகரின் அன்பை பகிர்ந்து வருகின்றோம்.

இதை கருத்தோடும், கவனமாகவும் வாசிக்கும் என் அன்பரே, கர்த்தராகிய இயேசு ஒருவர் மாத்திரமே உலகின் மெய் தேவன். நீங்கள் அந்த ஆண்டவரண்டை வந்து அவரை உங்கள் ஆத்தும நேசராக ஏற்றுக்கொண்டால் உங்கள் பாவங்களிலிருந்து அவர் உங்களை இரட்சித்து, உங்களுக்கு நிலையான தேவ சமாதானத்தையும், துப்புரவானதோர் பரிசுத்த வாழ்க்கையையும் இந்த உலகத்தில்

உங்களுக்குக் கொடுத்து, இந்த உலக வாழ்வுக்குப்பின்னர் பேரின்ப பரலோக வாழ்வையும் உங்களுக்கு அளித்து என்றுமுள்ள சதா காலங்களிலும் அவர் உங்களை தமது சமூகத்தில் வைத்துக்கொள்ளுவார். உலகம் தரக்கூடாத சமாதானத்தை எனக்குத் தந்த அன்பின் நேசர் உங்களுக்கும் தருவதற்காக ஆவலாக காத்திருக்கின்றார். இன்றே அவரண்டை வாருங்கள்.

S.Kishore,
Rainbow Plaza,
Purasawalkam, Chennai.

விலைமதியா இரத்தத்தால் மீட்டுக்கொண்டீரே!

பூர்வ காலங்களில் யுத்தத்தில் சிறைபிடிக்கப்பட்ட மக்களுக்காக பெரும் பணையத் தொகை(Ransom) கேட்கப்பட்டது. இந்தப் பணையத் தொகையானது பொன்னாகவே செலுத்தப்படல் வேண்டும்.

இவ்விதமாக யுத்தத்தில் சிறைபிடிக்கப்பட்ட முதலாம் ரிச்சர்ட் அரசனுக்காக 1,00,000 பவுண்களும்,ஸ்காட்லாந்து தேச அரசன் டேவிட் புரூசுக்காக 1,00,000 மார்க்ஸ்களும், பிரான்ஸ் தேச அரசன் ஜாணுக்காக 5,00,000 பவுண்களும் மீட்கும் விலைக்கிரயமாக கோரப்பட்டது.

இந்தப் பெருந்தொகைகள் யாவும் தேவாதி தேவன் பாவியை மீட்கச் செலுத்தியுள்ள மீட்பின் விலைக்கிரயத்துடன் கொஞ்சமும் ஒப்பிடவியலாது.

"..... அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே."(1 பேதுரு 1:18, 19)

ஆப்பிரிக்காவில் மிஷனரியாகப் பணிபுரிந்த ஒருவர் கீழ்க்கண்டவாறு எழுதுகின்றார்:-

" இருண்ட கண்டமாகிய ஆப்பிரிக்காவில் 4 ஆண்டு காலம் நான் தனியனாய் தங்கியிருந்து தேவனது சுவிசேஷத்தை பிரசங்கித்து வந்திருக்கின்றேன். இந்த நான்கு ஆண்டு காலத்தில் 30 தடவைகள் நான் விஷக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளேன். சிங்கங்களாலும், காண்டா மிருகங்களாலும் பல தடவைகள் நான் தாக்கப்பட்டிருக்கின்றேன். கொடிய காட்டு மிராண்டிகள் என் சரீரத்தின் பல இடங்களிலும் பலமான வெட்டுக்காயங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். ஆப்பிரிக்க தேசத்துக் கொடிய கடி எறும்புகள் என்னை நன்றாகக் கடித்திருக்கின்றன. இவை எல்லாம் எனக்கு வந்து சம்பவித்தபோதினும் ஆப்பிரிக்க மக்களுக்கு தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிக்கையிலும், அவர்களுடைய மீட்புக்காகத் தேவன் தமது சொந்தக் குமாரனையே மீட்கும் பொருளாக அளித்துவிட்டார் என்பதைக் கூறுகையிலும் என் உள்ளம் தாங்கொண்ணா எல்லையற்ற இன்பத்தால் நிறைகின்றது" என்று கூறினார்.

இரு வகை இரத்த சாட்சிகள்

ஹாசன் ஹோட்டரி என்ற 54 வயது பாலஸ்தீனியர் தனது மகன் சயீத் மனித வெடிகுண்டாக தன்னை மாற்றி அதின் மூலமாக கொன்ற 21 யூதர்களின் காரணமாக ஏற்பாடு செய்யப்பட்ட வெற்றி விழா குதூகல கொண்டாட்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்ள துரிதமாக ஆயத்தமாகின்றார். யோர்தானிலுள்ள ஜர்க்கா நகரத்தில் உள்ள பாலஸ்தீனிய மக்கள் தங்களுடைய மனித வெடி குண்டு இரத்த சாட்சி சயீத்தின் பெரிய உருவப்படங்களை மரங்களில் கட்டி தொங்கவைத்து பேரானந்தம் கொள்ளுகின்றனர். தங்கள் வீடுகளுக்கு முன்பாக அவனது படத்தை வைத்து அதைப் பூக்களால் அலங்கரித்து அதற்கு மலர் அஞ்சலி செலுத்துகின்றனர். " 21 யூதர்களை தனி மனிதனாக நின்று கொன்ற என்னுடைய மகன் சயீத் செய்த வீரச் செயல் குறித்து நான் மிகவும் பெருமை கொள்ளுகின்றேன். ஒரு தகப்பனுக்கு தான் பெற்ற மகன் மூலமாக கிடைத்துள்ள இந்த கௌரவத்தையும், பெருமையையும் விட வேறு என்ன வேண்டும்?" என்று கேட்கின்றார் ஆரம்பத்தில் குறிப்பிட்ட முகமதிய பாலஸ்தீனியர் ஹாசன் ஹோட்டரி.

இந்த பாலஸ்தீனியரைப் போன்று அநேகர் தாங்கள் தங்களை மனித வெடி குண்டுகளாக மாற்றி வெடித்துச் சிதறப்பண்ணிக்கொண்டு இரத்த சாட்சிகளாக மரிக்க ஆவலாக காத்திருக்கின்றனர். அவர்களுடைய ஒரே குறிக்கோள் தங்களால் முடிந்த அளவு அதிகமான யூத மக்களை கொன்று தீர்ப்பதுதான். 1967 ஆம் ஆண்டு இஸ்ரவேல் நாடு கைப்பற்றிய இஸ்ரவேல் நாட்டிலிருந்து அவர்களை துரத்துவதற்காகவே இந்த தற்கொலைகளை அவர்கள் செய்து வருகின்றனர். 1993 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இந்த மனித வெடி குண்டுகளால் மாண்டோர் எண்ணிக்கை 200 ஆகும். பலத்த காயம் அடைந்தோர் எண்ணிக்கை பல ஆயிரங்களாகும் என்று தெரிய வருகின்றது.

ஷேக் ஹாசன் யூசுப் என்ற பாலஸ்தீனிய பயங்கரவாத தலைவர் ஒருவரிடம் பாலஸ்தீனிய சிறுவர்கள் வந்து "இன்னொரு மனித வெடி குண்டை வெடிக்க வைத்து ஏராளமான யூதர்களைக் கொன்று எங்களை மகிழ்ச்சிப்படுத்துங்கள்" என்று கூறுகின்றனர். " கால தாமதம் செய்ய வேண்டாம். எங்களால் நீண்ட நாட்கள் பொறுத்திருக்க இயலாது" என்று அவர்கள் மேலும் கூறுகின்றனர்.

ஒரு தடவைக்கு 5 பேர்களிலிருந்து 20 பேர் வரை 18 வயதிலிருந்து 23 வயது வரையான பாலஸ்தீன இளைஞர்கள் தங்களை மனித வெடி குண்டுகளாக ஹமாஸ் என்ற பாலஸ்தீன பயங்கரவாத அமைப்பிற்கு அர்ப்பணம் செய்ய எப்பொழுதும் ஆயத்த நிலையில் காத்துக் கொண்டிருப்பதாக கூறப்படுகின்றது. இப்படி ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பாலஸ்தீனாவில் தயார் நிலையில் இன்று இருந்து கொண்டிருக்கின்றனர்.

பாலஸ்தீனிய பாலர் வகுப்புகளில் அறையின் சுவர்களில் "இன்றைய குழந்தைகள், நாளைய இரத்த சாட்சிகள்" என்று எழுதப்பட்டுள்ளனவாம். காசா பகுதியிலுள்ள ஒரு பள்ளியின் 11 வயதினனான அகமது என்ற பையன் "நான் பெரிய வாலிபனாக ஆனதும் எனது உடம்பை மனித வெடி குண்டாக்கி யூதர்களின் சரீரங்களை வெடித்து சிதறப்பண்ணிவிடுவேன். அவர்களுடைய சரீரங்களை சிறு சிறு துண்டுகளாக கிழித்து வீசி எறிந்து விடுவேன்" என்று மார் தட்டிக் கூறுகின்றான்.

இப்படி தங்களை மனித வெடி குண்டுகளாக மாற்ற விரும்பும் பாலஸ்தீனிய இளைஞர்களுக்கு அங்குள்ள ஹமாஸ் என்ற பயங்கரவாத அமைப்பு விசேஷ பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றது. இந்த வகுப்புகள் பல வாரங்கள் நடத்தப்படுகின்றது. வெடி குண்டுகளை எப்படி தங்கள் உடம்பில் மறைத்து வைப்பது? அதை எப்படி வெடிக்கச் செய்வது? எந்த எந்த இடங்களில் தங்களை மனித வெடி குண்டுகளாக வெடிக்கச் செய்ய வேண்டும்? என்பது போன்ற ஆலோசனைகளும், பாடங்களும் அங்கு கற்பிக்கப்படுகின்றன.

இவ்வண்ணமாக மனித வெடி குண்டுகளாக வெடிக்கும்படியாக ஹமாஸ் அமைப்பால் ஏற்னெவே தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் சில நாட்களுக்கோ அல்லது சில மணி நேரங்களுக்கு முன்புதான் திடீரென்று சற்றும் எதிர்பாராத விதமாகவே தேர்வு செய்யப்படுவார்கள். அவர்களை தேர்ந்தெடுக்கும் முறை எவருக்கும் தெரியாமல் மிகவும் இரகசியமாகவே வைக்கப்படுகின்றது. அப்படி தெரிவு செய்யப்படும் நபர்கள் தங்கள் பெற்றோர் அல்லது உடன் பிறந்தோர் அல்லது நண்பர்கள் எவரிடமும் "நான் போய் வருகின்றேன்" என்று ஒருபோதும் விடைபெறக் கூடாது. அப்படி தெரிந்தெடுக்கப்படும் பாலஸ்தீனிய முகமதிய இளைஞர்கள் முதலாவது முகமதிய கல்லறைத் தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பிணத்தை மூடும் வெண் துப்பட்டிகளால் தங்களை மூடிக்கொண்டு இரண்டு கல்லறைகளுக்கு நடுவாக பல மணி நேரங்கள்

படுக்க வைக்கப்படுகின்றனர். அங்கே அவர்கள் தங்களை மரித்துப்போனவர்களாக எண்ணிக்கொண்டு அப்படி நீண்ட நேரம் படுத்திருக்க வேண்டும்.

அதின் பின்னர் அவர்கள் பாதுகாப்பான ஒரு வீட்டுக்கு அழைத்து வரப்பட்டு அவர்களிடமிருந்து உறுதி மொழி வாங்கப்பட்டு வீடியோவில் அது பதிவு செய்யப்படுகின்றது. தனது இஸ்லாம் மார்க்கத்தின் மேலுள்ள பக்தி வைராக்கியத்தால் தான் தன்னை மனித வெடி குண்டாக மாற்றிக் கொண்டதையும் அதில் தான் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் அவன் உறுதி மொழி கொடுக்கின்றான். அவனது உறுதி மொழி அவனது மரணத்திற்குப்பின்னர் மக்களுக்கு போட்டு காண்பிக்கப்படுகின்றது. இந்த மனித வெடி குண்டுகள் தங்களது கொடிய செயலை நிறைவேற்றப் புறப்பட்டுச் செல்லும்போது அவர்களுக்குக் கொடுக்கப்படும் கடைசி ஆலோசனை என்னவெனில் " உங்களால் முடிந்த அளவு அதிக ஜனக்கூட்டம் நிறைந்த பகுதிக்குள் நுழைந்து கலந்து எவ்வளவு அதிகமான யூதர்களை கொல்ல முடியுமோ அவ்வளவு அதிகமான யூதர்களை கொல்லுங்கள்" என்பதுதான்.

இப்படி தங்களை மனித வெடி குண்டுகளாக வெடித்து மாண்டு கொள்ளும் ஒவ்வொரு இளைஞரின் பெற்றோருக்கு முதலாவது 5000 டாலர்கள் ஈராக் நாட்டின் அதிபர் சதாம் உசேன் கொடுப்பதுடன் இதர இடங்களிலிருந்தும் பொருளாதார உதவிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு அப்பாவி யூத மக்களையும், அமெரிக்க மக்களையும், முகமதியரல்லாத மக்களையும் கொன்று தங்களை முகமதிய இரத்தசாட்சிகளாக ஆக்கிக்கொள்ளும் மக்களுக்கு அவர்களுடைய அல்லாவாம் கடவுள் அவர்களுடைய மரணத்திற்குப்பின்னர் என்ன என்ன பாக்கியங்களை எல்லாம் கொடுக்கின்றார் என்பதைக் கவனியுங்கள்:-

1. பாவங்களிலிருந்து முற்றுமான மன்னிப்பு.
2. பரதீசில் நிச்சயமான இடம்.
3. ஒரு மகிமையின் கிரீடம்.
4. மரண நேரத்தில் எந்த ஒரு பாடும் வேதனையும் கிடையாது.
5. நியாயத் தீர்ப்பு நாளில் அவர்கள் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டியதில்லை.

6. அவர்கள் குடும்பத்திலுள்ள 70 பேர்களுக்கு பரதீசில் இலவச அனுமதி.

7. பரதீசில் அவர்களுக்கு 72 அழகு கன்னிப் பெண்கள் மனைவியராகக் கிடைக்கப் பெறுவர்.

(ரீடர்ஸ் டைஜஸ்ட் ஜனுவரி 2002 ஆம் இதழிலிருந்தும் ஹெரால்ட் ஆஃப் ஹோப் டிசம்பர் 2001 ஆம் இதழிலிருந்தும் மொழி பெயர்க்கப்பட்டது)

நமது அருமை நேச இயேசு இரட்சகர் தமது சிலுவை மரணத்தின் போது அந்த இறுதி நேரத்தில் தன்னை சிலுவையில் கொடுமையாக அறைந்து கொன்ற மக்களுக்காக தமது பிதாவிடம் "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று மனதுருகி மன்றாடி ஜெபித்தார். அவரது அடிச்சுவடுகளை பின்பற்றிய அவரது பின் அடியார்களான கிறிஸ்தவ இரத்த சாட்சிகளெல்லாம் எத்தனை அருமையாக, எத்தனை ஆச்சரியமாக, தங்கள் ஜீவனை உலக மக்களின் தேவ சமாதானத்துக்காகவும், அவர்கள் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ளும் பொருட்டாகவும் எத்தனை மனமகிழ்வோடு கையளித்திருக்கின்றனர் ! "ஆண்டவரே, இவர்கள் மேல் இந்தப் பாவத்தை சுமத்தாதிரும்" என்று மிகுந்த சத்தமிட்டு தனது ஆவியை தனது கர்த்தரின் கரங்களில் ஒப்புவித்த பரிசுத்த ஸ்தேவானின் இரத்தசாட்சி மரணம் எத்தனை மாட்சிமையானது.


தங்களை மனித வெடி குண்டுகளாக மாற்றி அப்பாவி மக்களை கொன்று குவிக்கும் கொடிய பயங்கரவாதிகள் தேவனுடைய பார்வையில் கொலைகாரர்களாகவே கருதப்படுவார்கள். "இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை" (கலா 5:21) என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகின்றது. பயங்கரவாதிகளுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் பரதீசு பாவிகளுக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருக்கும் எரி நரகமே அல்லாமல் வேறொன்றுமில்லை.

"உன் ஆகாரத்தை தண்ணீர்கள் மேல் போடு, அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக்காண்பாய்"
(பிரசங்கி 11:1)

(இமயமலை தேவ ஊழியங்கள்)

கர்த்தர் இயேசுவின் பரிசுத்த நாமத்துக்கு துதி, கனம், மகிமை உண்டாவதாக. ஆண்டுதோறும் நாங்கள் வடக்கில் சென்று செய்து வரும் தேவ ஊழியங்கள் கர்த்தருடைய திருவுளத்துக்கு எத்தனை களிகூருதலாக இருக்கின்றது என்பதுடன் அதை எங்களுக்கு அனுகூலமாக்கித்தர அந்த பரம தகப்பன் எத்தனை கண்ணும் கருத்துமாக இருக்கின்றார் என்பதை பாவிகளாகிய நாங்கள் கண்ணாரக் கண்டு வருகின்றோம். இந்த தடவை அந்த அன்பின் இரட்சகர் எங்கள் வடமாநில சுவிசேஷ ஊழியம் நிமித்தமாக எங்களுக்குச் செய்த சில காரியங்கள் அதை உங்களுக்கு மெய்ப்பிப்பதாக இருக்கும்.

முதலாவது, இந்த தடவை தேவனுடைய ஊழியத்திற்குத் தேவையான பண வசதிகள் எங்களுக்கு இல்லாதிருந்தது. நாங்கள் வடக்கே புறப்படும் நாட்கள் வெகு விரைவாக நெருங்கிக்கொண்டிருந்ததுடன் ரயில் பிரயாணத்துக்குத் தேவையான டிக்கெட்டுகளை முன்கூட்டியே பதிவு செய்யும் நாட்களும் 2 மாதத்திலிருந்து துரிதமாக குறைந்து



கொண்டிருந்தன. ஒரு நாள் என் ஜெப வேளையின்போது வடக்கே செல்லுவதற்கான ரயில் டிக்கெட்டை டில்லி வரை விசுவாசத்தோடு எடுத்துவிடும்படியாக அன்பின் தேவன் எனது உள்ளத்தில் உணர்த்தவே அவ்வாறே டில்லி வரை எங்களது முதல் பயண டிக்கெட்டை வாங்கி வைத்துக் கொண்டேன். நாட்கள் கடந்து செல்ல, செல்ல எங்களது தேவைகளுக்கான பொருளாதாரம் கொஞ்சம், கொஞ்சமாக நாங்கள் சற்றும் எதிர்பாராத தேவ மக்களிடமிருந்து வரத்தொடங்கியது. தமது இஸ்ரவேல் மக்களின் தாகம் தீர்க்க வனாந்திரத்தில் கன்மலையைப் பிளந்து தண்ணீரை குடிக்கக் கொடுத்த அதிசய தேவன் அல்லவா அவர்! என்ன ஆச்சரியம், எங்களது இரண்டு மாத கால தேவ ஊழியத்துக்குத் தேவையான முழுமையான பணத்தேவைகளும் அற்புதம் அதிசயமாக நிறைபூரணமாக வந்து சேர்ந்துவிட்டது. நாங்கள் வடக்கு நோக்கி எங்களது பிரயாணத்தை ஆரம்பிப்பதற்கு முந்தின நாள் வரை தேவன் தமது ஒத்தாசையை பரத்திலிருந்து அனுப்பிக் கொண்டேயிருந்தார். பொருளாதார தேவைகளில் எந்த ஒரு தாழ்ச்சியும் இல்லாமல் மிகுந்த தேவ சமாதானத்தோடும், சந்தோசத்தோடும் நாங்கள் எங்களது சுவிசேஷ பிரயாணத்தை தொடங்க நம் அன்பின் இயேசு தகப்பன் எங்களுக்கு உதவி செய்தார். அல்லேலூயா.

எங்களை மிகவும் பிரமிப்பில் ஆழ்த்திய ஒரு விசேஷ தேவ நடத்துதல் என்னவென்றால் நாங்கள் கோத்தகிரியிலிருந்து பயணம் செய்து வந்த எங்கள் வாடகைக்கார் கடுமையான போக்குவரத்து நெரிசலில் அந்த நாளின் மாலை நேரம் சிக்கி சுமார் 2 மணி நேரம் மலை ரஸ்தாவில் நின்று கொண்டிருந்ததுதான். நீலகிரி மலை நிலச்சரிவு காரணமாக உதகை, குன்னூர் போன்ற இடங்களிலிருந்தெல்லாம் வாகனங்கள் கோத்தகிரி வழித்தடத்திலேதான் வந்தன. எங்கள் வாகனத்துக்கு முன்னாலும், பின்னாலும் சில கி.மீட்டர் தொலைவுக்கு பலதரப்பட்ட போக்குவரத்து வாகனங்கள் நின்றவண்ணமாக இருப்பதை எங்களால் காண முடிந்தது. அதைக் காண்பவர் எவராயினும் அந்த நெரிசலைக் கடப்பது என்பது அத்தனை எளிதான காரியம் அல்லவென்று உடனடியாகக் கூறுவார்கள். மேட்டுப்பாளையத்தில் இரவு 7:30 மணி நீலகிரி எக்ஸ்பிரஸ் ரயிலை பிடிக்க முடியுமா என்ற சந்தேகம் எங்களுக்கு பலமாக இருந்தது. இருப்பினும், தேவன் அந்த மாலை நேரம் அதிசயம் செய்வார் என்ற பூரணமான நம்பிக்கையில் பொறுமையுடன் நாங்கள் எங்கள் உள்ளத்தில் பரத்தை நோக்கி ஜெபித்துக் கொண்டேயிருந்தோம்.

இந்தச் சிக்கலான நேரம் எங்களுக்கு முன்பாக சற்றுத் தொலைவில் திரளான வாகனங்களின் முன்னணியத்தில் வாகனங்கள் மெதுவாக நகருவதை நாங்கள் கவனித்தோம். அதையடுத்து எங்கள் காரும் நகரத்



தொடங்கியது. அது அப்படியே நகர்ந்து, நகர்ந்து வாகனங்களின் கூட்டத்திலிருந்து தனித்து வந்து விரைந்து முன் நோக்கி ஓட ஆரம்பித்தது. எங்கள் கார் நெரிசலிலிருந்து கடந்து வரவும் திரும்பவும் திடீரென ரஸ்தாவில் தடங்கல் ஏற்பட்டு எந்த ஒரு வண்டியும் அதற்கப்பால் அங்கிருந்து வரக்கூடாமல் போய்விட்டது. எங்களைப்போல நீலகிரி எக்ஸ்பிரஸ் ரயிலைப் பிடிக்க வேண்டிய அநேக மக்கள் எங்களுக்குப் பின்னாக வாகனங்களில் மாட்டிக் கொண்டனர். ஆனால், அன்பின் கண்மணியாம் நம் தேவன் எங்களுக்கு நிச்சயமான ஆதரவாக இருந்து ஏற்ற நேரத்தில் எங்களை மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்துக்கு கொண்டு வந்து சேர்த்தார். அது ஒரு நிச்சயமான அதிசய தேவ நடத்துதல் என்று நாங்கள் கண்டு ஆண்டவருக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுத்தோம்.

அடுத்து ஒரு அதிசயமான காரியம் என்னவெனில், மேட்டுப்பாளையத்திலிருந்து சென்னை வரை செல்லும் ரயில் பயணத்துக்கு எங்களுக்கு படுக்கை வசதி கொண்ட டிக்கெட் கிடைக்கவில்லை. 45 நாட்களுக்கு முன்பாகவே நாங்கள் டிக்கெட் எடுத்தும் படுக்கை வசதி கடைசி வரை எங்களுக்குக் கிடைக்கவே இல்லை.

நாங்கள் எங்கள் பிரயாணத்தை ஆரம்பித்த நாளிலும் ரயில் நிலைய தகவல் பலகையில் எங்களுக்கு படுக்கை வசதி இல்லாமல் இருக்கை வசதி மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்ததை கண்டு மனம் பதறினோம். அன்பின் கருணாகரக் கர்த்தர் பிரயாண ஆரம்பத்திலேயே நம்மை நித்திரையில்லாமல் அழைத்துச் செல்ல திருவுளச் சித்தங் கொண்டாரே என்று எங்களுக்குள்ளாக நாங்கள் அதிகமாக யோசித்துக் கொண்ட போதினும், இந்தக் காரியத்திலும் தேவனுக்கு ஒரு மேலான நோக்கம் கட்டாயம் இருக்கவே செய்யும். அன்பின் தேவன் நமக்கு ஒரு போதும் தீங்கு செய்யவேமாட்டார் என்று முழுமையாக விசுவாசித்து அவருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு பொறுமையாகக் காத்திருந்தோம். எங்களை ஏற்றிச் சென்ற நீலகிரி எக்ஸ்பிரஸ் மேட்டுப்பாளையத்திலிருந்து புறப்பட்ட போது எங்கள் பெட்டியில் பல இருக்கைகளும் வெறுமையாக இருப்பதை நாங்கள் கவனித்தோம். அந்த இருக்கைகளுக்கான பயணிகள் கோவை ரயில் நிலையத்தில் கட்டாயம் வந்து ஏறுவார்கள் என்று நாங்கள் நிச்சயமாக நம்பிக் கொண்டிருந்தோம். ஆனால் அப்படி எவரும் கோவையிலும் ஏறவில்லை. வண்டி புறப்பட்டது. நாங்கள் கர்த்தருக்கு துதி செலுத்திவிட்டு சமாதானத்தோடு ஆளுக்கொரு இருக்கையில் படுத்துக் கொண்டோம். வண்டி 2 மணி நேரம் ஓடி ஈரோடு ரயில் நிலையத்துக் வந்தபோது அந்த காலியான இருக்கைகளுக்கு ஆட்கள் வந்து சேர்ந்தனர். அந்த இருக்கைகளின் சொந்தக்காரர்கள் அவர்கள்தான்.

அவர்கள் நியாயமானபடி மேட்டுப்பாளையத்தில் ஏறியிருக்க வேண்டியவர்கள். கோத்தகிரி மலை ரஸ்தாவில் வாகன நெரிசலில் சிக்கிக்கொண்டபடியால் அவர்களின் பிரயாணம் தடைபட்டுப் போனது. எப்படியோ அவர்கள் தனி வாகனங்கள் எடுத்து ரயிலைத் தொடர்ந்து வந்து ஈரோட்டில் ரயிலைப் பிடித்தனர். காலியாக இருந்த இருக்கைகளில் அவர்கள் ஏறிப் படுத்துக் கொண்டனர். ஆனால் ஏற்கெனவே படுத்து நித்திரை செய்து கொண்டிருந்த எங்கள் இருவரையும் அந்த அன்பான மக்கள் எழுப்பவில்லை. அன்பின் ஆண்டவர் எங்களை எழுப்பக்கூடாது என்று அவர்களின் உள்ளத்தில் நிச்சயமாக பேசியிருப்பார் என்று நாங்கள் எங்கள் உள்ளத்தில் எண்ணிக் கொண்டோம். ரயில்வே துறையினர் எங்களுக்கு படுக்கை வசதி செய்ய தவறியிருந்த போதினும் தம்முடைய பரிசுத்த ஊழியத்தின் பாதையில் சென்று கொண்டிருந்த தமது அடியார்களாகிய எங்களுக்கு ஆண்டவர் இலவசமான படுக்கை வசதி அளித்து அற்புதமாக கரம் பிடித்து வழிநடத்திச் சென்றார். தேவனுடைய


மகிமையின் சுவிசேஷத்தை கேள்விப்படாத வட இந்திய மக்கள் மேல் ஆண்டவருக்கு எத்தனையான அன்பும், அக்கறையும் இருக்கின்றது என்பதை அதின் மூலம் எங்களால் தெரிந்து கொள்ள முடிந்தது.

மற்றொரு அதிசயமான காரியத்தை கவனியுங்கள். நாங்கள் இமயமலைகளில் இருந்தபோது முனிசியாரி என்ற இடத்துக்கு தேவனுடைய சுவிசேஷத்தை எடுத்துச் செல்லத் தீர்மானித்து அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தோம். இந்த முனிசியாரி என்ற இடம் சீன தேச எல்லையை ஒட்டிய பகுதியாகும். பனி மலைகள் சூழ்ந்த பகுதி அது. நாங்கள் அங்கு செல்ல இருந்த நாட்களில் எனக்கு கடுமையான சீதபேதி ஏற்பட்டது. நான் புசித்த ஆகாரத்தில் நச்சுத்தன்மை கலந்திருந்த காரணத்தால் எனக்கு அவ்விதமான பெலவீனம் ஏற்பட்டதாக பின்னர் அறிந்தோம். அதின் காரணமாக இரு தினங்கள் இரவும் பகலும் கடுமையான கஷ்டம் அனுபவித்தேன். எனது பாடுகளைக்கண்ட சகோதரன் நார்ட்டன் அவர்கள் கண் கலங்கினார்கள். அந்த பெலவீனம் இன்னும் எத்தனை நாட்களுக்கு நீடிக்குமோ என்று நாங்கள் அஞ்சிக் கொண்டிருந்தோம். என்ன ஆச்சரியம் பாருங்கள், நாங்கள் முனிசியாரி என்ற இடத்திற்குப் பயணப்பட வேண்டிய நாளுக்கு முந்தின நாள் இரவு தேவன் எனக்கு பரிபூரணமான சுகம் கொடுத்தார். அதின் காரணமாக நாங்கள் எந்த ஒரு தடங்கலுமின்றி அந்த இடத்துக்குச் சென்று நல்லதொரு தேவ ஊழியம் செய்து திரும்பினோம். அது குறித்து கர்த்தருக்குச் சித்தமானால் வரும் இதழ் ஒன்றில் எழுதுவேன். தமது கனமான ஊழியத்துக்கு எந்த ஒரு இடையூறும் வராதபடி அன்பின் ஆண்டவர் எனக்கு ஏற்ற நேரத்தில் நற்சுகம் தந்தார். அவருடைய ஆச்சரியமான வழிநடத்துதல்களை என்னவென்று சொல்லுவது!.

இந்த தடவை முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு ஏராளமான சுவிசேஷ பிரதிகளையும், இமயமலைகளிலுள்ள பித்தோர்கார் பட்டணத்திலுள்ள பெண் பிள்ளைகள் கல்லூரியில் கொடுப்பதற்காக 120 இந்தி மொழி புதிய ஏற்பாடுகளையும் நாங்கள் எங்களுடன் எடுத்துச் சென்றோம். இந்த புதிய ஏற்பாடுகளை நாங்கள் பெங்களூரிலுள்ள வேதாகம சங்கத்தில் ரூபாய் 1000 கொடுத்து விலைக்கு வாங்கியிருந்தோம். இந்த புதிய ஏற்பாடுகளின் பழுவான எடையுடன் சுவிசேஷ பிரதிகளின் எடையெல்லாம் சேர்த்து ஒரு பெரிய பாரச்சுமைக்குரிய பழு இருந்தது. அதை நாங்கள் சென்னை இரயில் நிலையத்தில் எடைபோட்டு அதற்கான

லக்கேஜ் கிரயமாக ரூபாய் 560 ரயில்வேக்கு கொடுத்தோம். ரயில்வே போர்ட்டர்கள் மற்றும் பேருந்துகளில் அவற்றைஏற்றி இறக்கிய மக்களின் கூலி மற்றுமொரு பெருந் தொகையாகும்.

பித்தோர்கார் பட்டண பெண்கள் கல்லூரியில் தேவனுடைய பிரசுரங்களை கொடுக்க எங்களுக்குக் கிடைத்த வாய்ப்பும் தேவனின்



அற்புத செயல்தான் என்று சொல்ல வேண்டும். 2000 ஆம் ஆண்டில் நாங்கள் அந்தக் கல்லூரிக்குச் சென்று அதின் பிரின்ஸ்பால் அம்மையாரிடம் ஒரு நாள் மாலை நேரம் அவர்கள் கல்லூரியில் சுவிசேஷ பிரசுரங்களைக் கொடுக்க அனுமதி கேட்ட சமயம் அவர்கள் இரத்த அழுத்த நோயின் காரணமாக மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். நாங்கள் அவர்களுக்காக அந்த மாலை நேரம் உள்ளமுருகி அவர்கள் வீட்டிலேயே ஜெபித்தோம். பாவிகளாகிய எங்களுடைய ஜெபம் தேவனுக்குப் பிரியமாக இருந்த படியால் அந்த இரவிலேயே ஒரு ஆச்சரியமான சுகம் அவர்களுக்குக் கிடைத்தது.

தனக்கு முந்தைய நாளின் இரவில் பாவிகளாகிய எங்களுடைய ஜெபத்தின் காரணமாகக் கிடைத்த சுகத்தைக் குறித்து மறு நாள் காலையில் மாணவிகளிடம் அசெம்பிளியில் சாட்சியாக கூறி நாங்கள் இருவரும் ஆண்டவருடைய பிள்ளைகள் என்று சொல்லி நாங்கள் கொண்டு சென்ற பிரசுரங்களை எல்லாம் எங்கள் கையாலேயே பிள்ளைகளுக்குக் கொடுக்கச் சொன்னார்கள். பண்டைய நாட்களில் அந்த இமயமலைப் பட்டணத்துக்கு வந்த கிறிஸ்தவ மெதடிஸ்ட் மிஷனரிகள் அந்தக் கல்லூரியை கட்டியிருக்கின்றார்கள். அதில் படிக்கும் பிள்ளைகள் 95 சதவீதத்துக்கும் கூடுதலாக தூரத்திலும், சமீபத்திலும் உள்ள இமயமலைக்

கிராமங்களிலிருந்து வந்து படிக்கும் இந்துப் பெண் பிள்ளைகளாவார்கள். இதை அந்த பிரின்ஸ்பால் அம்மையாரே எங்களிடம் சொன்னார்கள்.

2001 ஆம் ஆண்டு (அதாவது இந்த தடவை) கல்லூரி பிள்ளைகளிடம் இயேசுவைக்குறித்து எங்களை பேச வைத்து அதை அவர்களே இந்தியில் மொழி பெயர்த்துக் கூறினார்கள். நாங்கள் கொண்டு சென்ற இந்தி மொழி புதிய ஏற்பாடுகள் மற்றும் இதர சுவிசேஷ பிரசுரங்களை வழக்கம்போல எங்களையே மாணவிகளுக்கு கொடுக்கச் சொன்னார்கள். சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி தேவனுடைய வார்த்தைகளை மாணவிகளுக்கு ஜெபத்துடன் கொடுத்தோம். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளின் மூலமாக அந்த இந்து மாணவிகளோடும், அவர்களுக்கு கற்றுக்கொடுக்கும் இந்து ஆசிரியைகளோடும் தொடர்ந்து பேச தேவ பிள்ளைகளாகிய நீங்களும் அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள். எங்களிடம் தேவனுடைய சுவிசேஷம் பெற்ற அந்த கல்லூரி மாணவிகளின் படத்தையும், ஆசிரியைகளின் படத்தையும், எங்களுக்கு அந்தக் கல்லூரியில் அவற்றைக் கொடுக்க அனுமதி அளித்த பிரின்ஸ்பால் அம்மையாரின் படத்தையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். எல்லா துதி,கனம்,மகிமை நம் ஆண்டவர் இயேசு ராஜா ஒருவருக்கே.

தயவு செய்து கவனிக்கவும்

"என்னை கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன், என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்" (1 சாமு 2 : 30) என்ற தமது வார்த்தையை தேவன் ஒரு கர்த்தருடைய மனுஷன் மூலமாக (1 சாமு 2 : 27) ஆசாரியன் ஏலிக்குச் சொல்லச் செய்தார். ஆனால், கடந்த இதழின் 43ஆம் பக்கத்தில் தேவன் சின்ன சாமுவேல் மேற்கண்ட வார்த்தையை ஏலிக்குச் சொன்னதாக நான் தவறுதலாக எழுதிவிட்டேன். அந்த தவறை தேவ ஊழியத்தின் பாதையில் நாங்கள் இமயமலைகளிலிருந்தபோது கர்த்தர் எனக்குச் சுட்டிக் காண்பித்தார். எனது தவறை அன்பாக மன்னியுங்கள்.

அதே இதழின் 42ஆம் பக்கத்தில் "நான் அடக்கி அமர்த்த வேண்டிய மிருகங்கள், பட்சி ஜாதிகள்" என்ற தலைப்பிலான பெட்டிச் செய்தியின் 11ஆம் வரியில் காணப்படும் கழுகுகள் என்ற வார்த்தையை கழுதைகள் என்று திருத்தி வாசிக்கவும்.

DEVA EKKALAM

REGISTERED NEWS PAPER
Regn. No. M : 8850 / 1970

தேவ எக்காளம் பத்திரிக்கை மறுபடியும் பிறந்த பரிசுத்த தேவ மக்களின் பரலோக மன்னாவாகும்.

சென்னை ராயபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற பரிசுத்தவான் பரமானந்தம் ஐயர் அவர்கள் தனது புத்தகங்கள் ஒன்றில் "உலகத்து பெயர் கிறிஸ்தவ மக்களுக்கு நான் ஒன்றுமில்லை. எனது தேவச் செய்திகளும், எனது ஆவிக்குரிய புத்தகங்களும் அவர்களுக்கு அற்பமானவைகள். ஆனால், தேவனுடைய பரிசுத்த மக்களுக்கு நான் அருமையானவன். தாவீது இராஜா இன்று உலகத்தில் உயிரோடிருப்பாரானால் தனது அரண்மனைக்கு என்னை வரவழைத்து தனக்கு அருகாமையிலேயே என்னை எப்பொழுதும் உட்கார வைத்துக்கொள்ளுவார்" என்று அத்தனை பரவசமாக எழுதியிருக்கின்றார்கள். எத்தனை உண்மையான வரிகள் அவைகள்!

மேற்கண்ட தேவ மனிதர் சொன்னது போல இந்த உலக மாய இன்ப சுகங்களை நாடித் தேடி ஓடும் மறுபடியும் பிறவாத தேவனற்ற பெயர் கிறிஸ்தவ மக்களுக்கு தேவ எக்காளம் பத்திரிக்கையால் எந்த ஒரு பயனும்,நன்மையும், கிடையாது. அப்படியே மறுபடியும் பிறந்தும், பெருமைக்கும், லூசிபரின் ஆணவத்துக்கும்(ஏசாயா 14: 12-15) அவனது தான் என்ற மனமேட்டிமைக்கும் தங்களை ஒப்புக்கொடுத்து நிற்கும் மனத்தாழ்மையற்ற கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்தவ ஊழியர்களுக்கும் தேவ எக்காளத்தால் எந்த ஒரு ஆத்தும நன்மையும் கிட்டாது.

அருமை இரட்சகரை தங்களது ஆத்தும நேசராக ஏற்று மறுபடியும் பிறந்த தாழ்மையுள்ள பரிசுத்த பிள்ளைகளுக்கு தேவ எக்காளம் பரலோக மன்னாவாகும். அவர்கள் அதை ஒரு தடவை அல்ல, மூன்று தடவைகள் கூட திரும்பத் திரும்ப வாசிக்கின்றனர். வேதத்திற்கு அடுத்தபடியாக அதை அவர்கள் அத்தனை அருமையாக விரும்பி வாசிப்பதாக தங்களது ஆர்வ மேலீட்டின் காரணமாக கடிதம் எழுதுகின்றனர். தேவ எக்காளத்தை வாசிக்க உட்கார்ந்தால் வெகு சீக்கிரமாகவே அதின் கடைசிப் பக்கம் வந்துவிடுகிறது என்று விசனத்தோடு குறிப்பிடுகின்றார்கள். தங்களுடைய வருங்கால சந்ததிகள் அதை வாசித்து தேவ ஆசீர்வாதம் பெற அவைகளை புத்தகங்களாக பைண்ட் செய்து பத்திரப்படுத்தி வைக்கும் மக்களும் நிறையப் பேர் உள்ளனர். எல்லா துதி ஸ்தோத்திரங்களுக்கும், மகிமைக்கும் பாத்திரமானவர் நம் ஆண்டவர் இயேசு ஒருவரே.

"தேவ எக்காளத்தை வாசிக்க வேண்டாம் என்று சொன்ன ஒரு தேவ ஊழியருடைய வார்த்தையை நம்பி சில ஆண்டு காலம் அதை நான் எனது கையால் கூட தொடாமல் இருந்தேன். ஆனால், ஒரு நாள் அது எப்படித்தான் இருக்கின்றது என்ற எண்ணத்தோடு அதை வாசிக்க ஆரம்பித்து அதை முற்றுமாக வாசித்து முடித்தேன். ஆதை வாசித்து முடித்ததும் "இந்த அருமையான ஆவிக்குரிய பத்திரிக்கையை நாம் அந்த பொறாமைக்கார கபடஸ்த்தனான தேவ ஊழியனின் வார்த்தையை நம்பியல்லவா இத்தனை நீண்ட ஆண்டுகளும் வாசிக்காமல் இருந்துவிட்டோம் என்று கூறி எனது மார்பிலே நான் அடித்து தேவனிடம் மன்னிப்பு கேட்டேன்" என்று ஒரு தேவ பிள்ளை ஒரு தடவை எனக்கு கடிதம் போட்டிருந்தார்கள்.

உண்மையோ உண்மைதான். ஆண்டவர் இயேசுவை நேசிக்கின்றவர்களுக்கும், மெய்யாகவே யோவான் 3:3 ன்படி மறுபடியும் பிறந்தவர்களுக்கும், இந்த உலகத்தில் தேவனுக்கு முன்பாக துப்புரவான பரிசுத்த ஜீவியம் செய்ய வாஞ்சித்து கதறுகின்றவர்களுக்கும்(லேவி 20:26) தேவனுடைய பரலோக நித்திய இளைப்பாறுதலுக்குள்(எபி 4:9) பிரவேசிக்க இராப்பகலாக ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும் பரிசுத்த பக்தர்களுக்கும் எளிமையான தேவ எக்காளப் பத்திரிக்கை ருசித்து புசிக்கும் தேனிட்ட பணியாரமாம் பரலோக மன்னாவேதான். ஆனால்,மற்ற பெயர் கிறிஸ்தவ உலக மக்களுக்கும், டிவி. பெட்டிக்கு முன்னர் இராப்பகலாக மண்டியிட்டுக் கிடப்போருக்கும், பெருமைக்கார தேவ ஊழியக்காரர்களுக்கும் தேவ எக்காளம் செப்புக்காசுக்கும் பயன்பெறாத ஒன்றாகும்.

Edited and Published by N. Samuel

MAILING ADDRESS : N. Samuel, Editor, "Deva Ekkalam",
Post Box No. 6, Kotagiri - 643 217, Nilgiris.

CPP Ph : 230630